# பழந்தமிழ்ப் பெருமக்கள்

20551.

ச. சோமசுந்தர தேசிகர்

# பழந்தமிழ்ப் பெருமக்கள்

இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை

ச. சோமசுந்தர தேசிகர்

சென்னை :

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

1928

ரெஜிஸ்தர் செய்தது] [விலை 12 அணா

Printed at
The 'Caxton Press',
Madras.

# முகவுரை

பண்டைக்கால வழக்க ஒழுக்கங்களைப் பற்றியும், புலவர்களைப்பற்றியும் இக்காலத்தே அறிஞர் பலர் ஆராயத் தொடங்கினர். அவ்வாராய்ச்சிக்கு அடிப்படையாக உள்ளவை சங்கத் தமிழ் நூல்களும், கல்வெட்டுக்களும், செப்பேடுகளும், பிறநாட்டினின்றும் இங்குப்போந்த அறிஞர்கள் தாம் கண்டவாறே எழுதிவைத்த நூல்களும் ஆகும். இவ்வகையில் எவர் எவ்வளவு செய்யினும் அவ்வளவில் அது பயனுடையதேயாம். இதுகாறும் இவ்வகையில் யாதொரு நூலும் முறையாக ஏற்படாத தன்மையினால் இப்போது வெளிவரும் நூல்கள் பெரிதும் பாராட்டத் தக்கனவே. இவற்றுள் சில உண்மைப் பிறழ்வான செய்திகளும் வெளிப்படுதலும் கூடும். அவற்றையெல்லாம் முறையே ஆராய ஆராய, அப்பிழைபாடுகளும் மறைய உண்மைகள் வெளிப்படும்.

இக்கருத்துக்கொண்டே சில யாண்டுகளுக்கு முன்னர்க் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டு விழாவில் அதிகமான் நெடுமான் அஞ்சியைப்பற்றி ஒரு கட்டுரை யெழுதி வாசித்தேன். அதன் பின்னர் நண்பர் சிலர் இவ்வகையில் உழைக்கு

மாறு வற்புறுத்திக் கூறினர். அதனால் யான் பெரிதும் முயன்று இச்சிறு நூலை எழுதி முடித்தேன். இதனில் புலவர் ஒருவர், முடியுடைவேந்தர் இருவர், குறுநிலமன்னன் ஒருவன் ஆக நால்வர் வரலாறுகள் அடங்கியுள்ளன. இதினிற் காணும் குற்றம் குறைகளை அறிஞர் ஆராய்ந்து தெரிவிப்பின் அவர்கட்கு என்றும் மறவா நன்றி பாராட்டுவேன்.

ச. சோமசுந்தர தேசிகன்.

# பழந்தமிழ்ப் பெருமக்கள்

## அரசியற் புலவர் - கோவூர் கிழார்

### 1. இளமைப் பருவம்

கல்வியைக் கற்றால், அது, நல்ல செயல்களைச் செய்யத் தூண்டுவதனால், அறத்தையும், அவ்வறம் காரணமாகச் செழித்தோங்கும் பொருளையும், அப்பொருளை அனுபவித்தலால் எய்தும் இன்பத்தையும், அவ்வின்ப நுகர்ச்சியில் உண்டாகும் அருவருப்பினால் வீட்டையும் அடையச்செய்யும். அதனாற்றான், 'அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற் பயனே' என்று பெரியோர் கூறியுள்ளார். இத்துணைச் சிறப்பினைத்தரும் கல்வியை ஒருவன் கல்லானாயின், அவன் தனக்கு வேண்டியபொருளை நல்வழியில் ஈட்டுதலை யறியாது தீயவழியிலெல்லாம் ஈட்டத் தலைப்படுவன்; அப்படித் தீய வழியில் ஈட்டப்பட்ட பொருள் நல்லோனிடம் சேர்ந்த போதிலும், அஃது, அந்நல்லோனையும் தீயவழியிலேயே இழுத்துச்செல்லும் என்பது பெரியார் கண்டது. ஆதலாற்றான் ஒவ்வொருவரும் கல்வி கற்கவேண்டும்' என்பதாம்.

அவர், தாம் கற்பதைக் கசடறக் கற்கவேண்டும்; கற்றபின் தாம் கற்றுக் கேட்டதற்கிணங்க நடத்தல் வேண்டும் என்று பணிக்கவந்த பெருநாவலர்,

'கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக'

என்று தமது தமிழ்மறையுள் அருளி யுள்ளார். ஆகலின் இதைக் கடைப்பிடித்து நடப்பவரே பெரியோரென்றும், அவரே கல்வி கேள்வி நிறைந்த மாண்பினரென்றும் கருதப் படுகின்றனர். அவ்வாறு கருதப்பெற்ற மாண்பினரை நற் றுணையாகக் கொண்டு, அரசன், தனது செங்கோலை நடாத் துதல் வேண்டும். அப்படி நடாத்துதலையே எதிர்பார்க் கின்றனர் நாடு நாடாக விருத்தலை விரும்பும நல்லோர்.

நமது நாயனார்,

'படைகுடி கூழமைச்சு நட்பர ணாறும்
உடையா னரசரு ளேறு'

என்று கூறியுள்ளாரேயெனின், அறச்செயலின்றி மறச்செயலை யுடைய படை குடிகளையும், கல்வியறிவு நிரம்பப்பெறாத துணைவரையும், அமைச்சரையும் உடைய அரசன் எங்ஙனம் செங்கோலோச்சவியலும்? அவனுடைய அரசாட்சி தண் ணளி யுடையதாகாதன்றோ? அமைச்சர் நல்லோராயிருந் தால் அவ்வாறு நடவாதோவெனின், நல்லமைச்சனுயினும் அரசியலை யுத்தேசித்து, அரசன் தன்னுடைய அரச நீதியி னின்றும் வழுவிய காலத்து இடித்துரைக்கும் ஆற்றலுடைய வனுயிரான். வெங்கலியின் அழுக்காறு காரணமாகச் சூது பொர நினைந்த நளனை இடித்துரைத்து நல்வழிப்படுத்தும் வல்லமையுடைய அமைச்சு இல்லாமையானன்றோ, நளன் காட்டிற்றிரிந்தும், மடைத்தொழிற் புரிந்தும் துன்பப்பட்

டான். நல்லுரை கூறி விலக்கமாட்டாமையானன்றே, அறன் மைந்தன் நாடிழந்து காட்டிலுழன்றான்.

இவ்வாறு தீயவழியிற் செல்லுங்கால், செல்பவன் அரசனாயினும், அடியவனாயினும் என்? மேலோரிடத்தும் கீழோரிடத்தும் சிறிதும் கண்ணோட்டமின்றிப், புண்ணிற் கருவியிட்டாற்றும் மருத்துவனை யொப்ப, தீய செய்கைகளாலுண்டாகும் துன்பங்களை அவர்க்கு எடுத்துக்காட்டி இடித்துரைக்க வல்லார் நல்லிசைப் புலமை வாய்ந்த கல்விவல்லாரே யாவர். அவர்களே, தலைப்பிற் கூறியாங்குத், தாம் கற்ற கல்விக்குத்தக நிற்கும் ஆற்றலுடையார்; பிறரையும் தம் வயப்படுத்தும் வன்மையுடையார். இவற்றை விளக்கவே நாயனார் இறைமாட்சியின் பின் கல்வியை வைத்து, 'கண்ணுடையவரென்பர் கற்றோர்' என்றருளினார். தன்பொருட்டுத் தன் தந்தை நாட்டினின்றும் வந்த புலவனை அநியாயமாகச் சிறையிட்ட சோழனைக் கோபித்துக் கதவடைத்த இராக்கினியின் சினந்தணியச் செய்து, புகழைத் தாங்கியவன் தானென உலகிற்குக் காட்டியவனும் புலவனேயன்றோ? தன்வயப்பட்ட அரசினை நடாத்தியவனும் ஒரு பெரும் புலவனேயாவான்[1]. இந்நன்மை தீமைகளைக் கண்கூடாகக்கண்டே, அரசர் புலவராற் சூழப்பட்டிருத்தல் இன்றியமையாததென முன்னோர் விதித்திருக்கின்றனர்.

ஆயினும், தீயவழியிற் செல்லும் அரசர்களை நல்லாற்றுப் படுத்தக் கூடியவர் ஒரு சிலரே யாவர். இவர்களுள் முன்னாளில் தலைமை வாய்ந்து விளங்கியவர் கோவூர் கிழார் என்னும் பெரும் புலவராவார். இவரைப்பற்றிய வரலாற்றையும், இவரது அருஞ் செயல்களையும், கல்வியின்திறனையும், கிடைக்குஞ் சாதனங்களைக் கொண்டு ஒருவாறு ஆராய்வோம்:

---

1 இரும்பிடர்த்தலையார், ஒட்டக்கூத்தர் முதலியோர்.

தலை, இடை, கடை என்று மூன்று சங்கங்கள் இருந்தன என்பர். நமது புலவர்பெருமான் அவற்றுள் கடைச் சங்கத்திலே வாழ்ந்தவராவர். கரிகாற் பெருவளத்தான் என்னும் சோழர் பெருந்தகை, புகார் என்னும் பெயருடைய காவிரிப் பூம் பட்டினத்தை வளம்படுத்தி, இமயமலைவரைத் தன் ஆணை செலுத்தி அரசாண்ட வேந்தனாவான். இவன் காலம் முதல் நூற்றாண்டென்பர் சரித்திர ஆசிரியர். அக்காலத்தில், புகார் நகரம் பெரிய துறைமுகமாக விருந்தது. உரோம தேசத்திலிருந்து யவனதேசத்தை யடைந்த ஒருவரால், முதன் முதல் கீழ் நாட்டுக் கடற் பிரயாணஞ் செய்து குறிப் பெழுதி, தன் ஊரும் பேரும் காட்டாது வெளியிடப்பட்ட பெரிப்ளஸ் (Periplus) என்னும் நூலில் பின்வருமாறு காணப்படுகின்றது:

‘குமரியினின்றும் தென்புறமாக முத்துச் சலாபங் குளிக்கும் கொற்கைக்குக் கப்பல் செல்லுகிறது. அது பாண்டிய அரசாட்சிக்கு உட்பட்டது. கொற்கைக்கு அப்பால் கடலகம் என்று சொல்லப்படும் தேசமுளது. இது கடலுள் வளைகுடாவி லிருப்பதுடன் உள்நாட்டில் உறையூர் என்ற நாட்டினையும் உடையது. இங்கேதான் இப்பக்கங் களி லுண்டாகும் முத்துக்களைப் பெறலாம். இங்கிருந்தே அர்காடிக் (Argaratic [1]) என்ற நேர்த்தியான மஸ்லின் ஏற்றுமதியாகின்றது.’

---

1 கூறைநாட்டுச் சேலை என்பது போன்றும், துகிலி உடை யென்பது போன்றும் நேர்த்தியான உடைகள் அந்நாளில் இங்கிருந்து ஏகிப்து, ரோமபுரி முதலான தேசங்கட்குச் சென்றனவென்றும், இந்நாட்டிலிருந்தே சரிகை வேலை செய்த உடைகள் சென்றனவென்றும் அமெரிக்கா அறிஞர் ஸ்காப் (Mr. W. H. Schoff) கூறுவர்.

'இந்நாடுகளில் தமிழகத்தினின்றும், வடநாட்டினின்றும் ஏற்றிய பண்டம் நிறைந்த மரக்கலங்கள் தங்கக்கூடிய கப்பற்சாலைகள் (Harbours) அமைந்த பட்டினங்கள் அநேகம் உண்டு. அவற்றுள் மிக முக்கியமானவை, வரிசையாகச் சொல்லு மிடத்து, காவிரிப்பூம் பட்டினம், போதுகை, சுபத்மா[2] முதலியன. இப் பட்டினங்களில் கடலோரமாகவே சென்று வாணிபஞ் செய்யும் நாவாய்களும், சங்காரா[3] என்னும் பெரு மரக்கலங்களும், கங்கைக் கரைக்கும் கிரிஸேக்கும், செல்லும் கோலந்தியா என்ற மரக்கலங்களும் உண்டு. இந் நகரங்களில், தமிழகத்திற் கிடைக்கக் கூடிய நால்வகைப் பொருள்களும், எகிப்திலுண்டாகும் பொருள்களிற் பலவும் கொண்டு வந்து விற்கப்படுகின்றன.'

இவ்வளவு சிறப்புவாய்ந்த நகரங்களைத் தன்னுளடக்கிய சோழ நாட்டை யாண்ட கரிகாற்பெருவளத்தான் என்னும மன்னர் பெருமானுக்குப் பின் ஆண்டவர்களில் ஒருவன் நலங்கிள்ளி என்னும் அரசன். அந்த நலங்கிள்ளியின் காலத்து நமது புலவர் இருந்தவராவர். இவர் எங்கே கல்வி பயின்றாரென்றும், எவரிடத்துப் பயின்றாரென்றும் இப்பொழுது அறிந்து சொல்வது அரிது. அந்நாளிலிருந்த அரசர்கள், பொது இல்லங்கள் ஏற்படுத்தி அவைகளில் உணவளித்துக், கல்வி பயிற்றி வந்தார்கள் என்று தெரிவதால், அப்பொழுதிருந்த இல்லங்களுளொன்றில் இவர் கல்வி பயின்றிருக்க வேண்டுமென்று ஊகிக்கலாம். இப்படிப் பொது

2 இக்காலத்தில் இப் பட்டினங்களை அடையாளங் காண்பதற்கில்லை.

3 சங்ஙாடம் என்று மலையாளக்கரையில் பெரிய தோணிக்குப் பெயராக இன்றும் வழங்கி வருகிறது. துளுவில் இதனையே ஜங்காலா வென்பர்.

இல்லங்களுண்டு என்பதற்கு உற்ற சான்றாகப் புறநானூறு என்னுந் தொகைநூலிலுள்ள 34-ஆம் பாடலைக் காட்டலாம். இப் பாடலில், 'புல்லிய நீலத்து வரகினது அரிசியைப் பாலின்கட் பெய்து சமைக்கப்பட்ட சோற்றைத் தேனோடு கலந்து உண்டு, சிறிய முயலினது கொழுவிய சூட்டிறைச்சியைத் தின்ற என் சுற்றத்தோடுகூட இலந்தை மரமோங்கிய அகன்ற இடத்தையுடைய பொதியிற்கண் ஒன்றனையும் மறைத்தலில்லாத உள்ளத்துடனே வேண்டிய வார்த்தைகளைப் பலகாலுங் கூறி, பெரிய கட்டியாகிய கொழுவிய சோற்றை அருந்திய பாணர்க்கு நீங்காத செல்வமெல்லாவற்றையுஞ் செய்தோன் எம்முடைய வேந்தனாகிய வளவன்; அவன் வாழ்வானாக என்று பாடேனாயின் வாழ்நாட்கு அலகாகிய (அளவு) கதிர்ச் செல்வன் (சூரியன்) தோன்றாதலறியான்' என்று தமது செய்நன்றி மறவாமையைக் காட்டுவதோடு தாம் காப்பாற்றப்பட்டுக் கல்வி பயிற்றப் பட்டமையையுஞ் சுட்டுகின்றார் இக்கோவூர் கிழாரது உடன் காலத்துப் புலவரான ஆலத்தூர் கிழார். இதனால் விடுதியோடு கூடிய கலாசாலைகள் (Boarding schools) என்று சொல்லப் படுவன அக்காலத்திலு மிருந்தன என்றறியலாம்.

மேலே கூறிய ஊர், நாகப்பட்டினம் தாலுக்காவிலுள்ள கீழ் வேளூர் என்று கூறுவர் ஒரு சாரார். அதற்கு அவர்கள் கூறுவது: அவ்வூரில் எழுந்தருளியிருக்கும் கடவுளர்க்கு இலந்தைவனநாதரென்றும், அங்கு ஒரு பொது மன்றம் இருந்து அதில் கல்வி பயிற்றப்பட்டதென்பதற்குத் தேவாரத்தில் ஆதாரமும் உண்டென்றும்[1] கூறுவர். மற்றொரு

---

1 துன்றுவார் சடைச்சுடர் மதிநுதலை வடமணி சிரமாலை மன்றுலாவிய மாதவர் இனிதியன் மணிமிகு கீழ்வேளூர். கலைநிலாவிய நாவினர் காதல்செய் பெருந்திருக்கோயில்.

சாரார் அப்படி பொன்று மில்லை யென்றும், 'மன்று என்பதுபோல, 'பொதுவில்' என்பது பலரும் கூடும் ஒரு மரத்தடி போன்றது என்றும் கூறுவர். பின்னையவர்கள் கூற்றுக்கு இவர்கள் உரையேயன்றி வேறு சான்றொன்று மில்லை. சான்றையுடைய முன்னவரது கொள்கையே வலியுடைத்தாக விருக்கின்றது. எவ்வாறாயினும் நமது புலவர், சோழ அரசர்கள் உதவிபெற்றுக் கல்வி பயின்றவர் என்பதனை மாத்திரம் திட்டமாகக் கூறலாம்.

இவரது இயற்பெயர் இன்னதென்று விளங்கவில்லை. கிழார் என்ற பட்டம் காணப்படுதலாலே, இவர் ஒரு தலைமை சான்ற வேளாண் குடியினர் என்று மாத்திரம் சொல்வதற்கமையும். கிழார் என்பதற்கு உரிமையுடையார் என்பது பொருள். கோவூருக்கு உரிமையுடையார் என்று பொருள் படுகிறது. கிழார் என்ற பட்டம் பிற்காலத்தாண்ட சோழ மன்னர் நாளிலும் பயின்று வந்திருக்கின்றது. இந்தக் கோவூர் என்னும் பேருடைய ஊர்கள் பல காணப்படினும் கோகூர் என்ற பேருடன் கீழ்வேளூருக்குச் சமீபத்திலும் ஒன்றுண்டு. இவர் சோழநாட்டினர் என்று கூறுவதாலும் 'இரத்தி நீடிய அகன்றலை மன்றத்து' என்பதனாலும் இக் கோகூரே கோவூரென்ற பேரோடு இருந்திருக்க வேண்டுமெனக் கூறலாம்போலும்.

இவரது காலம் கடைச்சங்க காலமாகும். அதனை நிச்சயித்தற்குப் பல ஆதாரங்கள் இருக்கின்றன. 1 சங்கப் புலவர்களான கபிலபரணரோடு இவர் சேர்ந்தவராக எண்ணப்படுவது. 2 இவர் பொய்யாமொழியான திருக்குறளுக்குச் சாற்றுக் கவி பாடியிருப்பது. 3 கடைச் சங்கத்திறுதிக் காலத்தினர் என்று நிச்சயிக்கப்பட் டிருப்பவரும் கரிகாலனுக்குப் பின் வந்தவருமான நலங்கிள்ளி, கிள்ளிவளவன்

என்ற இருபேரரசர்களையும் பாடியிருப்பது. இவ்வாதாரங்களால் இவரும் கடைச் சங்கத்திறுதிக் காலத்தினர் என்றே உறுதியாகக் கூறலாம். இப்பொழுது நமது கிழார் சோழநாட்டினரென்றும், சோழநாட்டிலுள்ள ஒரு பொது மன்றிற் கல்வி பயிற்றப்பட்டவரென்றும், கடைச்சங்ககாலத்து விளங்கியவரென்றும் அறிந்துகொண்டோம். இனி அவர் செய்துள்ள செயல்களை ஆராய்வோம்.

## 2. இராஜதந்திரம்

உலகில் குடிகளுள் ஒருவரை யொருவர் அடக்கியாள வேண்டுமென்னும் எண்ணம் உதிப்பதுபோலவே, அரசர்களுள்ளும், தாயத்தார்களுள்ளும் ஒருவர் மற்றவரை யடக்கியாள வேண்டுமென்ற எண்ணமும் அவாவும் மிகுதியுமுண்டாவது இயற்கை. இஃது எக்காலத்து முள்ளதொரு செய்தியாகும்.

சோழநாட்டை அரசாண்ட சோழன் நலங்கிள்ளி, வீரத்திலும் கொடையிலும் சிறந்தவன்; கல்வி கேள்விகளிலுஞ் சிறந்தவன: அவன் நாளில் அவனோடு ஒத்த பண்புடையரான சில பல தாயாத்தாரிருந்தனர். அத் தாயத்தார்களில் நெடுங்கிள்ளி என்ற பேருடையா னொருவனிருந்தான். இவன் மன்னன் வழி நின்று சில ஊர்களை ஆண்டுவந்தனன். இவ்வாறு ஆண்டு வருகையில் வஞ்சனையாலோ, இறுமாப்பாலோ, வேறு யாது காரணத்தாலோ தனது பேரரசனைப் புறக்கணித்து வந்தான். இதனை அறிந்த பேரரசனுனைப்படி கிள்ளிவளவன் தனது சேனையோடு சென்று அவனை எதிர்த்துப் போர் புரிந்தனன். அதற்கு ஆற்றாது ஆவூர் என்னுமிடத்திலுள்ள கோட்டைக்குள் நெடுங்கிளளி நுழைந்தனன்.

நுழையவும் நலங்கிள்ளி அதனை முற்றுகையிட்டான். இடனும், வெளியிலேயுள்ளவர்கள் வெளியிலும், கோட்டையிலிருந்தவர்கள் கோட்டைக்குள்ளும் இருக்கும்படி யாகிவிட்டது. முற்றுகை யிடப்பட்டவர்கள் படுந்துன்பமும் பட்ட துன்பமும் இத்தன்மைத்தாக இருந்திருக்கலாமென்பதனை நாம் ஊகிக்கக் கூடுமன்றோ? நாம் யூகிப்பதைவிட எத்தனையோ மடங்கு அதிகமான துன்பத்தினை அந்நாளில் அனுபவித்தனர். இந்த ஆவூர் பட்டபாட்டை நமது புலவரான கோவூர் கிழார், வெகு அழகாகக் கூறியிருக்கின்றார். இவர்,'படையின் முக்கிய உறுப்பாய, நீண்ட கைகளையுடைய களிறுகள், கரிய பெண் யானைகளின் தொகுதியோடு பெரிய கயத்தின்கண் படிதற் கில்லாது வருந்துகின்றன; நெல்லை யுடைய கவளத்துடனே நெய்யால் மிதித்துத் திரட்டப்பட்ட கவளமும் பெறுதற்கில்லாமல் கம்பங்களைப் பெயர்த்துக் கொண்டு நிலத்தில் விழுந்து புரளுகின்றன; கொடிய பெரு மூச்சுவிட்டுச் சுழலுகின்றன; இடிபோல முழங்குகின்றன. பச்சிளங் குழந்தைகளோ பால் அகப்படாமையினாலே அழுதவண்ணமாக விருக்கின்றன. பூச்சூடி அழகுபொலிந்து விளங்கியிருந்த மகளிர், தலைக்கு எண்ணெய் இன்றியும் வாரிப் பின்னிப் பூவைத்துக் கொள்ளமுடியாமலும் தங்குழலை வறிதே முடித்துப் பொலிவிழந்து மிருக்கின்றனர். நல்ல மனையிடத் துள்ளார் பருக நீரின்றிக் கதறுகின்றனர். இப்படி அனுபவிக்கப்படுகிற துன்பம் எண்ணிறந்தனவா யுள்ளன. ஆதலின், நீ அறத்தை யுடையவனாயின், அறவழியில் நிற்பவனாயின், இந்நாடு நினதன்றோ என்று நலங்கிள்ளியினிடஞ் சொல்லிக் கோட்டைவாயிற் கதவைத் திறத்தல் செய்வாயாக; அன்றி மறத்தையுடையையாயின், பலமுடையவனென நெண்ணுவையாயின், மனத்திலும் தைரியமுடையவனாயின், முற்றுகையிட்டு வெளியில் நிற்கும் உனது பகை

வனை எதிர்த்துப் போரில் வென்று கதவினைத் திறத்தல் செய்வாயாக; அவ்வாறு இரண்டுமின்றி நீ கோட்டைக்குள் ஒரு பக்கத்திலிருத்தல் நாணுந் தகைத்து,' என்று அவனை இடித்துரைத்தனர். இவ்வாறு இடித்துரைத்தலும் நெடுங் கிள்ளி கோட்டைவாயிற் கதவினைத் திறந்து, தனது தலைவனுக்குக் கீழ்ப்படிந்தனன்.

பின்னொருகால், இந்நெடுங்கிள்ளியே மறுபடியும் உறையூரிற் புகுந்துகொண்டு வம்புடையவனா யிருந்தபோது, மீண்டும் இக் கோவூர் கிழாரே, உறையூரை முற்றியிருந்த சோழன் நலங்கிள்ளியை நோக்கி, 'வேந்தே! நின்னோடு மாறுபட்டவன், பெரிய பனையினது வெளிய தோட்டைச் சூடியவனாகிய சேரனல்லன்; கரிய கிளைகளையுடைய வேம்பினாலாய மாலையை யணிந்த பாண்டியனல்லன். நின்னுடைய கண்ணியும் ஆத்தியினாற் கட்டப்பட்டது போலவே, நின்னுடன் போர் புரிவானுடைய கண்ணியும் ஆத்தியினாற் கட்டப்பட்டது. ஆதலால் நும்முள் ஒருவர் தோற்பினும் தோற்பது நுங்குடியன்றோ? இருவீரும் வெல்லுதல் உலகவியல் பன்று; ஆனதுபற்றி நுங்குடிக்குத் தக்க தொன்றன்று நுஞ்செய்கை. அன்றி வேற்றுப்புல வரசர்கள் இச் செய்தியைக் கேட்பாராயின் நும்மை இகழ்வர். ஆகையான், இப் போரைத் தவிர்வீர்களாக' என்று சொல்லிப் போரை விலக்கினர்[1]. ஆயினுமென்? நெடுங்கிள்ளி, 'தான் பிடித்த முயலுக்கு மூன்றேகால்' என்ற பிடிவாத முடையவனா யிருந்தமையின் மற்றொரு சமயத்தில் காரியாறு என்ற இடத்தில் கோப்பெருஞ் சோழனோடு பகைத்துப் பொருது உயிரிழந்தனன்[2]. இஃது எவ்வாறாயினும், நமது புலவர் வெகு ஆண்மையோடு அவ்வரசர்கட்கு இடித்துரைத்து, அச் சமயத்தில்

1 புறம் - செ - 45. 2 புறம் - செ - 47.

தாம் மேற்கொண்ட செயலை நிறைவேற்றி, நாட்டினர் கலக்கமின்றி நலத்தோடு வாழச்செய்தனர் என்பதே ஈண்டு கவனித்தற்குரியது.

'அறிகொன் றறியா னெனினு முறுதி
உழையிருந்தான் கூறல் கடன்.'

என்பது திருவள்ளுவர். தம் கடமை இன்னதென் றோர்ந்தபடி இப் புலவர்பெருந்தகை நடந்ததோடு நின்றுவிடவில்லை. தாம் எவரெவருடன் நட்புக்கொண்டனரோ அவரவர்களை யெல்லாம் தம்வழி இழுத்துக்கொண்டனர் என்பது நோக்கத் தக்கது.

இந் நெடுங்கிள்ளியே ஒருகால் தான் உறையூரிலிருந்த காலத்து, அவண்வந்த புலவனான தித்தன்[1] மகன் இளந்தித்தனை, பாடிப் பிழைக்கும் ஒரு புலவனென்று தேறமாட்டாது, நம்மைக் கெடுக்கவந்த ஒற்றனே என்றையுற்றுக் கொல்லப் புக்குழி, இதனைக் கேட்ட கோவூர்கிழார் ஆண்டு விரைந்துசென்று, இந் நெடுங்கிள்ளியை அணுகி, 'ஐய! அரசே! இவன் யாரென்று நினைத்தனை! பழம் எவ்விடத்துப் பழுக்கினும் அங்குச் செல்வது அரிதென எண்ணாது பறந்துசெல்லும் பறவைகளை யொப்ப, ஊர் சேண்மையிலிருக்கின்றது என்றும், சுரம் நெடியவென்றும், வழி அரியவென்றுங் கருதாது நடந்து திருந்தாத நாவால் தான் வல்லபடி பாடி, ஆண்டுப் பெற்ற பரிசிலான் தன் சுற்றத்தோடு உண்டு மகிழும் பாண் மகன்! பிறர்க்குச்செய்யும் கொடுமை யறிந்ததோவெனின்; இல்லை! ஆயினும் கல்வி கற்றோ மென்னும் இறுமாப்பால் பகைவன் எப்பொழுதுவருவான் என்றஞ்சித்

---

1. தத்தன் என்று நூல்களிற் குறிக்கபபட்டிருப்பினும் தித்தனென்றே பாக்களில் காணப்படுவது கொண்டு அப்படியே கொள்ளப்பட்டது.

தலை சாய்ந்து நிற்போரைப் போலல்லாது நிமிர்ந்து நடக்கும். ஆகையால் இவனை நீ ஒற்றனென்று கருதாயாக" எனக் கூறி விடுவித்தார். [2] இப்பொருள் பொருந்திய செய்யுளிலே இப்புலவன் புலவனாயினும் புலமை நிரம்பப் பெறாதவனாகை யால் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும்படியான தகுதியிலான் என்பதனைச் சுட்ட, வடியா நாவினன் என்ற ஒரு சொல்லால் பெரும் பொருள் தொனிக்கக் கூறினர். அன்றியும் அரச னைப் பார்த்து, நீ பெரியோனல்லை ; நலங்கிள்ளிக்கு அஞ்சியே என்றும் வாழ்பவனாயினை. இது நினக்குத் தக்கதொன் றன்று என்று இடித்துரைக்க, 'நண்ணார் நாண அண்ணாந் தேகி' என ஒரு அடியை வைத்தார். தமது கல்வித்திறம் இவைகளுள் விளங்குவதோடு பெரியோனாயினும் சிறியோ னாயினுமென், கோவுங் குடியும் தமக்குச் சமம் என்று காணுந் தகைமையுடையார் என்பதும் விளங்குகின்றது.

இப்படி ஒருவரிருவர் அரசரோடு மாத்திரம் நம்புலவர் நட்புரிமை பூண்டவரல்லர். இவர்களுக்குப் பின்னே அர சாண்ட (குளமுற்றம் என்ற இடத்தில் இறந்துபட்டவனான) கிள்ளிவளவன என்னும் அரசன் காலத்தில், இவன் நாட்டில வாழ்ந்த கடைபெழு வள்ளல்களி லொருவனான மலையன் மாபி துள்ளானொருவன் அவனுக்கு அடங்கி நடந்திலன். அவன் கிள்ளி வளவனுக்கு எதிரியாயிருந்த அவனது தாயத்தானொ ருவனுக்குச் சகாயமாக நின்று போர் புரிந்தான் ; அவ்வாறு நடந்த போரில் அவர்களை வென்று அக்கால வழக்குப்படி அவர் மக்களைப் பிடித்து வந்து, அரசன் கிள்ளிமுன் நிறுத் தினர். அவர்களை யானையின் காலிற் கொடுத்து இடறும்படி கிள்ளி வளவன் சொல்லியபோது கேட்டிருந்த நமது புலவர் பெருமான், அரசனை நோக்கி, 'வேநதே! அது நினக்குத்

2. புறம் - செ - 46.

தகாது! நீயோ, அல்லலுற்றுத் தஞ்சமடைந்த புறவின் துன்பத்தைத் தீர்த்த ஒரு பெருஞ் சோழனை சிபிச்சக்கர வர்த்தியினுடைய மரபிலுள்ளாய். இப் பிள்ளைகளோ தம் அறிவால் உழுதுண்ணும் மாக்களான புலவர் பலரோடு பகுத்துண்ணும் வள்ளலின் மரபிலுள்ளார். அன்றியும், இவர்கள் யானையைக் கண்ட மாத்திரத்தே தாம் முன்னர் வெருவி யழுத அழுகையை மறந்து, தமக்கு வரும் ஆபத்தையும் நினையாது வேடிக்கை பார்க்கின்ற தன்மையையுடையார். இது மாத்திரமோ, நினது மன்றத்தையும் பார்த்து வெருவி யழுகின்றனர். ஆகையால், நீ இவர்களை யானைக்கிடுதல் தகுதியுடையதோ? அங்ஙனஞ் செய்யற்க'[1] என்று சொல்லிப் பிழைப்பித்து,

'கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்'

என்ற சிறு அடிகட்கொரு பேரிலக்காய் நிற்பதைக் காண்மின்!

இத்துணைமட்டோ? பின்னும் ஒரு முறை, கிள்ளிவளவன், கருவூர் என்னுமிடத்தே மாற்றானொருவனை முற்றுகையிட்டு, அவன் சேனைகளைச் சின்னபின்னமாக்கி அங்கேயே தண்டிறங்கி யிருந்தனன். வெகு காலமாயும் போர் முடிவுறாதது கண்ட நமது புலவர்பெருமான், அரசனைக் கண்டு, 'கொற்ற வேந்தே! பேயோடு நாக்கூட்டம் நினைன் அருந்துவதைக் கண்டாயில்லை; இது போதியது. போரை நிறுத்தி எழுவாயாக' என்று அவனுக்குக் கூறினர்.

இப்பேய்கள் கூடிப்பிணங்களை யுண்ணும்போது ஒன்றை யொன்று பார்த்து, வெம்புங் குருதிப் போராற்றில் வேண்டுந் தண்ணீரை வேழத்தின் மும்பங்களிலே முகந்தெடுத்து

1 புறம் - மச - 46.

வைத்துக்கொள்ளீர் என்றும்; சோர்கின்ற களிற்றின் வாலதி யாற் சூழ அலகிட்டு அலை குருதிநீருந் தெளித்துக் கலம் வைக்க நிலமுஞ் சமைத்துக்கொள்ளீரென்றும், அழிந்தவர் பொற் பரிசை யவை பொற்கலமாகக் கொள்ளீரென்றும்; விழுந்த தவளக்குடையே மின்னும் வெள்ளிக் கலமாகக் கொள்ளீரென்றும், நிலத்தைச் சமைத்துக் கொண்டீரேல், நெடுங்கைக்களிற்றின் பணைக்காலாங் கலங்களைக் கொள்ளீ ரென்றும் உபசரிப்பதுபோலப் புலவரொருவர் வர்ணிக்கின் றார். இவ்வாறு பேயுண்ணும்படி பல படைகளை வீழ்த்துத் தள்ளியதே போதுமென்று கூறிக் கிள்ளிவளவனை அம்முற் றுகையினின்றும் தன்னூர் செல்லும்படி செய்தார் நம் புலவர்.

இவ்வாறாக ஒன்றிரண்டல்ல பல தடவைகளிலும் அரசரை நல்லாற்றில் நடக்கச் செய்து, அவர்கட்குப் பெரும் பெருமையும் சீருஞ் சிறப்பும் உண்டாகும்படி செய்தனர். இவரைப்போன்று கல்விவல்லாரொருவர் ராஜதந்திரத்தில் புகுந்து உழைத்தவரெனக் கேட்டிருக்க மாட்டோம். ராஜ தந்திரிகள் அநேகருண்டு என்பது உண்மையேயாயினும், அவர்கள் அத்துறையிலேயே உழைத்து நாளடைவில் பெரி யோர் என்றும் நிபுணர் என்றும் பேர்பெற்றிருக்கலாம். இவ்வாறு கல்வியிலும் மேம்பட்டு அருஞ்செய்கையும் உடை யாரைக் காண்பதரிது. இவர் தம்முடைய அருஞ் செயல் களால் பல அரசர்களையும், வேளிர்களையும் நண்பர்களாகக் கொண்டிருந்தனர். அவர்களுள் சோழ நாட்டுள்ள சிறுகுடி கிழான் பண்ணன் என்பானுமொருவன். இவன் இப்புலவர் பெருந்தகையைப் போலவே தனக்கென வாழாப் பிறர்க் குரியாளன் என்று புகழப்படுகிறான். இப் பெருங்குணம் அவனிடமிருந்ததே பெரும்புலவரை நட்பு கொளச்செய்தது.

## 3. கல்வி மேம்பாடு

நமது புலவர் விளங்கியிருந்த காலத்தில் கல்வி எந்த நிலையில் இருந்ததென ஆராய்வோமாயின் அது மிக்க மேம்பட்ட நிலையி லிருந்ததென்றே சொல்லவேண்டி வரும். அவர் காலம் கடைச் சங்கத் திறுதிக்கால மாகையால் புலவர் பலர் வாழ்ந்திருந்தனர். அதற்கொப்பப் புரவலரும் கல்வியில் வல்லவர்களாகவே யிருந்தனர். அப்படி இருந்ததனுற்றான் அருட்பிரகாசரான சிவப்பிரகாசரும் தமது நன்னெறியிலே, 'பொன்னணியும் வேந்தர் புனையாப் பெருங் கல்வி, மன்னுமறிஞரை ஒவ்வார்' என்று பாடிவைத்தார். எத்துணை வலிமையுடையனுயினும் அறிவும் ஊக்கமுங் குறைவுபடாதவனே வேந்தனுவான். அத்தகைய வேந்தர் பலர் முன்னுளில் இருந்தனர். அதனுலேயே பழு மரமென்னக் கொற்றவரைச் சூழ்ந்திருந்தனர் பாவலரும்.

சங்கத்துச் சான்றோரெல்லாம் சுருங்கச் சொல்லிப் பெருக உரைகொள்ளப் பாடும் ஆற்றலும், சிறுமகாரும் பொருள் தெளிவுறப் பாடும் பெருமையுமுடையவர். நமது புலவரும் அதனினின் வேறு பாடுடையவரல்லர். பொய்யில் புலவன் புகன்ற நன்னூற்கு இவர் கூறிய திருவள்ளுவ மாலைச் செய்யுள் இக்கூற்றை வலியுறுத்தும், அஃது,

> 'அறமுத லென்கு மலிடத்தோ ரெல்லாந்
> திறமுறத் தேர்ந்து தெளியக்—குறள்வெண்பாப
> பன்னிய வள்ளுவனர் பான்முறைநே ரொவ்வாதே
> முன்னை முதுவோர் மொழி,'

என்பதாம்.

இவ் வெண்பாவிலே 'பான்முறை நேரொவ்வாதே முன்னை முதுவோர் மொழி' என்னுந்தொடருள் எவ்வளவு

பொருளைச் செறிந்து வைத்திருக்கின்றனர்! இவர் செய்த தாக நமக்கொரு பெருநூலும் எட்டாமற் போயினும், சமயோசிதப் பாடல்கள் என்று இந்நாளில் சொல்லும் பாக்களைப் போன்று சொல்லிய பாடல்கள், தொகை நூல்களான புறநானூற்றின்கண் பதினைந்து குறுந்தொகையில் ஒன்றும், நற்றிணையில் ஒன்றும் ஆகப் பதினேழு அகவற்பாக்களும், ஒரு வெண்பாவும் கிடைத்திருக்கின்றன. புறநானூற்றுப் பாடல்கள் கிடைத்திராவிட்டால் இவரது பெருமையும், இவர்செய்த சந்துப்பாடுகளும், சூழ்ச்சிகளும் அறிய இடமின்றாகும.

இவரது புலமை எத்தன்மைத்து என்று ஊன்றிப் பார்ப்போமாயின் ஆழ்ந்த கருத்துக்களை மிக எளிதாகப் பாடுந் திறன் வாய்ந்தவ ரென்பது விளங்கும். புறத்தில், நலங்கிள்ளி, கருத்திற்கொண்ட எண்ணத்தை முடிக்கும் வன்மை வாய்ந்தவன் என்பது தோன்றவும், வடபுலத்தரசரும் அவனுக்கு அஞ்சி நிற்கின்றனர் என்பது விளங்கவும், இந் நலங்கிள்ளிக்கு இச்சாகசச்செயல்கள் சிறுர் விளையாட்டே என்பது தெரியவும்,

'குணகடல் பின்ன தாகக் குடகடல்
வெண்டலைப் புணரிநின் மான்குளம்பு அலைப்ப
வலமுறை வருதலும் உண்டென்று அலம்வந்து
நெஞ்சம்நடுங்க அவலம் பாயத்
துஞ்சாக்கண்ண வடபுலத் தரசே' புறம் - 31

என்றும்,

'வேட்கோச் சிறுஅர் தேர்க்கால் வைத்த
பசுமட் குரூஉத்திரள் போல அவன்
கொண்ட குடுமித்து இத் தண்பணை நாடே' புறம் - 32

என்றும் பாடினார். தேர்க்கால் என்றது அவனது சக்கரத்தை. குடுமித்து என்றது அவன் கருத்தினுள்ளபடி நடத்தலை. ஊரும் நாடும் செழிப்புற்றிருந்ததனால் ஏழ்மை என்பது இன்னதென்றறியார் ஊரார் என்பதை விளக்க,

'கானுறை வாழ்க்கைக் கதநாய் வேட்டுவன்
மான்றசை சொரிந்த வட்டியும் ஆய்மகள்
தயிர்கொடு வந்த தசும்பு நிறைய்
ஏரின் வாழ்நர் பேரி லரிவையர்
குளக்கீழ் விளைந்த களக்கொள் வெள்நெல்
முகந்தனர் கொடுப்ப' புறம் 33

என்கிறார். இது, சேரியிலிருந்து தயிரைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டு ஆய்ச்சியர், தயிர்மிடா நிறைய வெண்ணெல்லும், மானிறைச்சி கொண்டு வந்த கடகம் (இக்காலத்து வழங்கும் கட்வாப்பெட்டி) நிறைய வெண்ணெல்லும் வேடர் வாங்கிச் செல்வார் என்று தெரிவிக்கிறது. இதனால், நாடு இன்ன நிலைமையில் இருந்தது என்பதனை அறிந்துகொள்ளலாமன்றோ?

பழந்தமிழ்ப் புலவர், தமிழ் இலக்கண இலக்கியங்களை மாத்திரம் கற்றவரல்லர்; இவற்றோடு இயற்கைக் குறிகளையும் சோதிடம் சகுனம் முதலியவற்றையும் நன்கு கற்றும் விளங்கியவர். அதற்கு இவரும், ஓர் எடுத்துக் காட்டாக விளங்குகின்றனர். இவர் கிள்ளிவளவன் என்னுஞ் சோழர் பெருந்தகையை நோக்கி, 'நின்னைப் பகைத்தவர், தம் நாட்டிலே இரு நான்கு திசைகளிலும் உற்கம் எரிந்து வீழவும், பெரிய மரத்திலே வற்றிப்போன கட்டைகள் பற்றி எரியவும், வெய்ய சுடரையுடைய ஞாயிறு பலவிடத்துஞ் செறிந்து தோன்றவுங் காண்பர்' என்று உற்பாதங்களைக் கூறினார். ஊருக்குள் வந்து, ஆந்தை அலறுவதனால் ஏதோ துன்பம்

விளையுமென்று சொல்லும் சகுன சாத்திரத்தினைக் குறிப்பிட, 'அஞ்சுவரத்தகுந புள்ளுக் குரலியம்ப' என்று கூறினர். இக்காலத்தில், கனு என்பது உளத்தின் வேறுபாடு என்றும், பிரமை என்றும் சிலர் கூறுவர். அக் காலத்திலும் இக் காலத்திலும் எக்காலத்திலும் இக்கனு, பின் உண்டாவதை உரைப்பது என்று ஒப்புக் கொண்டு நடப்பர் பலர். அதனு லன்றே 'பழமொழி' நூலுடையாரும் கனு மூந்துறுத செயல் இல்லை என்றார்[1]. இதில் நம்பிக்கை பூண்ட நம் புலவர், வளவனை நோக்கி, 'அரசே! நின்னைப் பகைத்துக்கொண்டார் நாட்டிலுள்ள மக்கள் பல்லு நிலத்தில் விழவும், எண்ணெ யாடவும், பன்றி ஏற்றை ஏறவும், காழகம் நீப்பவும், படை கட்டிலொடு கவிழவும் காண்பர்'[2] என்று கனுத்திற முரைத்தனர்.

இனி, இவர், நெடுங்கிள்ளியை நல்லாற்றுப் படுத்த, "இரும்பிடித் தொழுதியொடு பெருங்கயம் படியா; நெல்லு டைக் கவளமொடு நெய்ம்மிதிபெறு; திருந்தரை நோன் வெளில் வருந்த ஒற்றி, நிலமிசைப் புரளுங் கைய' எனவும், வெய்துயிர்த்து அலமரும் யானை உருமேறென முழங்கவும், பாலின்றிக் குழவி யலறவும், மகளிர் பூவில் வறுந்தலை முடிப்பவும் துன்புற இருத்தல் இன்னுது. காண்போர் நாணுந்தகவுடைத்து; நினக்கும் நாணுந்தகைமையுடையது. 'நீ அறவழியில் நிற்பவனுயின் இந்நாடு நினது எனச் சொல்லித் திறத்தல் செய்வாயாக; மறநெறியில் நிற்பவனுயின் போரோடு திறத்தல் செய்வாயாக' என்று எவ்வளவு இடித்துக் கூறக்கூடுமோ அவ்வளவுங் கூறினர். இப்படிப் பட்ட நல்லிசைப் புலமை வாய்ந்த புலவரும், இக்காலத்து அரியரே எனலாம்.

---

1. பழமொழி 2. 2. புறம். செ. 41.

முற்காலத்தில் நந்தமிழ் நாடு, இவ்வளவு மேம்பாடுடைய கல்வி கேள்விகளிற் சிறந்த சான்றோர் பலரை யுடையதாக விருந்தது. நாட்டின் வளப்பமும் அதற்கேற்ற விதமாகவே இருந்தது. பழமையான நூல்களில், தனக்குத் தவமகன் பிறந்தானென்று அரசன் கேள்வியுற்ற வளவில், அவ்வரசன், பன்னீராண்டு தனக்கு வரும் இறையை நீக்கினான் என்றும், தன்னாட்டிலுள்ள சிறைக் கோட்டங்களை இடித்துவிடக் கட்டளை யிட்டானென்றும், தனது பொக்கிஷ சாலைகளைத் திறந்துவிட்டு ஏழு நாள்வரை வேண்டுவார் வேண்டியபடி எடுத்துச் செல்ல அனுமதி தந்தானென்றும் படிக்கிறோம். சீவகன் பிறந்த நாளில், இவ்வாறு செய்தற்கில்லையே என்று அவன் தாய் இரங்கிக் கூறியதாகக் கூறும் கூற்றைச் சீவகசிந்தமணியிலே வாசிக்கின்றோம். இதைப் போலவே, இற்றைக்குச் சுமார் ஒரெழுநூறு ஆண்டுகட்கு முன் அரசாண்ட இரண்டாம் இராஜராஜனது மெய்க்கீர்த்திகளில் பல வளப்பங்கள் காணப்படுகின்றன. அந்நாளில் பெருமையுற்று வாழ்ந்தவர்களுக்குச் செம்பியன் தமிழவேள்[1] என்று ஒரு பட்டமளித்து வந்ததாக அறிகிறோம். ஆகவே, இராச்சியம் இரண்டுபட்டுச் சின்ன பின்னமாகி மாற்றார்க்கு நகைவிளைப்பதாயும் அமையம் வாய்த்துழி பகைவர் கைப்பற்றக் கூடியதாயு மிருந்த நிலையை நீக்கி, நாட்டில் அமைதி ஏற்படுத்தியும், அரசன் நாட்டார்க்குத் தீங்கிழைத்தற்கண் அவ்வாறு செய்யாதிருக்கும்படி வேண்டியும், நாட்டிற்கும் நாட்டினர்க்கும் சுகத்தை உண்டு பண்ணியதோடு அரசன் பெருமையையும், தம் கல்வியின் மேம்பாட்டையும் தமிழ் நாட்டிற்கு விளங்கவைத்தலான் இவர் ஒரு பெருமகனாதல் காண்க.

1. S. I. I. Vol. III. Part 3.

# கிள்ளிவளவன்

## 1. வமிசாவளி

கடல் புடைசூழ்ந்த இந்நிலவுலகிலே நிலவும் மக்கள் அவரவர் பேசும் மொழிகளாலே தமிழர், தெலுங்கர், கன்னடர், வங்காளர், என பல வகுப்பினராகப் பிரிக்கப்படுகின்றனர். இவ்வாறாக, இந்திய தேசத்தின் தென்பாகத்திலே பல மொழிகள் வழங்கினும், அவற்றுள் பெரும் பான்மையோராற் பேசப்படுவது தமிழ் மொழியாகும். தமிழ்மொழி வழங்கும் நிலத்தைத் தமிழ்நாடென்பர்.

மாந்தர் பலர் கூடி வாழ்கின்ற இடத்தில், அவர்கள் தங்கட்கு வேண்டுவனவற்றைத் தாமே செய்துகொள்ள இயலுமாயினும், எல்லோருக்கும் பொதுவாகச் சில காரியங்கள் நடைபெற வேண்டியிருக்கின்றன. அவற்றைச் சோதித்து நல்லன இவை என்றும், தீயன இவை யென்றுங் கண்டு செய்வார் சிலரே யாவர். அவர்களுள்ளும் ஒன்றினை முடிக்கும் ஆற்றல் ஒரு சிலரிடத்தேதான் காணக்கூடும். அவர்களே மற்றையோரையும் தம் வழிப்படுத்தி ஆவன செய்யக்கூடியவர். அவ்வாறு செய்யார்க்குத் தலைவர் என்று பெயர்.

இத்தலைவர் முதற்கண் ஒரு சிற்றூர்க்குப் பெரியாராயிருந்து, காலடைவிலே சிற்சில ஊர்கட்குத் தலைவராவார். பின்னர் இவ்வூர்களைச் சேர்த்து நாடென்று பேரிட்டுத் தாங்களே தலைமை வகிக்க, அரசு என்ற பொதுப் பேரும் அவர்க்கு வந்து பொருந்தியது.

இவ்வாறான அரசர், தமிழ்நாட்டை முன்னாளில் மூன்று கூறாக்கிச் சேர, சோழ, பாண்டியரென்ற பேர்கொண்டு ஆளத் தொடங்கினர். சோழநாட்டை யாண்ட சோழர் வரிசையையும் தலைமுறையையுந் திரட்டித் தொகுத்து எழுதுவதற்கு இக்காலத்திற் போதிய சாதனங்கள் இலவாயின. இவர்களுள் ஒரு சிலரையாவது அறிவதற்குச் சாதகமாகக் கிடைப்பன அகநானூறு, புறநானூறு, நற்றிணை முதலாய தொகை நூல்களேயாம்.

பல ஊர்களைப் பற்றியும், அவ்வூர்களில் கோயில் கொண்டிருக்கும் கடவுளரைப் பற்றியும் சொல்லும் நூல்களாகிய புராணங்களிலே சில சோழவரசர் பெயர் காணப்படுகின்றன. ஆயினும் அவற்றில் அவர்கள் முன்னோர்களைப் பற்றி யொன்றும் கூறுவதில்லை. எனினும், இற்றைக் கேறக்குறைய ஆயிர வாண்டுகட்குமுன் ஆண்டு வந்த சோழமன்னரது வரிசை ஒருவாறு கல்வெட்டுக்களிலிருந்து தெரிகின்றது. இந்நாட்டிலுள்ள கோயில்களுட் சென்று கடவுளிருக்கும் இடத்திலுள்ள கருங்கற் கட்டடத்தைக் காண்போமாயின், அவை எழுத்தாற் பொறிக்கப்பட்டிருப்பது தெரியவரும். இவற்றுக்குக் கல்வெட்டு என்று பெயர். இக் கல்வெட்டுக்களின் உதவியால் பிற்காலத்தில் ஆண்ட சோழ வரசரது குலமுறையைப் பெரியார் பலர் குறித்திருக்கின்றனர். இற்றைக்கு ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னாண்டவர்களைப் பற்றி அறிய நூல்களைத் தவிர வேறு சாதனமுமில்லை. இவற்றைக் கொண்டு ஒருவாறு முறைப்படுத்த முயலுவேன்.

இற்றைக்கு ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முந்திய தமிழர் (The Tamils 1800 years ago) [1] என்னும் அரிய

1 இந்நூல் இப்பொழுது கிடைப்பது அரிது. சிற்சிலரிடத்தே அருகிக் காணப்படுகின்றது.

நூலை யாத்து, தமிழுலகிற்குப் பெரும்பயனாக அளித்தவர் வே. கனகசபைப் பிள்ளை என்னும் அறிஞர். அதுவே தென்னிந்திய சரித்திர ஆராய்ச்சிக்கு அடிப்படை யாயிற்று.

i அந்நூலிற் காணும் சோழ அரசபரம்பரை, பின் வருமாறு :—

உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னி
|
கரிகாற் பெருவளத்தான் என்ற பெருந்திரு மாவளவன்
|
நலங்கிள்ளி சேட்சென்னி
|
குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவன்

இவ் வடைவினருள் இளஞ்சேட்சென்னியினது புதல்வனே கரிகாலனென்பது அவன்மேற் பாடிய பாடல்களினால் அறியலாகும். இவன் குன்றின்மேலிட்ட விளக்குப் போல சோழ அரசர்களுள்ளே பெருமையுற்று விளங்குகின்றான். இவனுக்குப் பின் காணப்படும் இவன் மகனான நலங்கிள்ளி, இவனை யடுத்துப் பட்டத்துக்கு வந்தானென்பதற்குற்ற ஆதாரமொன்றும் இல்லை.

ii கரிகாலனது சரிதத்தை விரித்தெழுதிய பண்டிதர் எல். உலகநாதப் பிள்ளையவர்கள் கரிகாலனுக்கு நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, மாவளத்தான் எனப் புதல்வர் மூவரும், ஆதிமந்தியார் என நல்லிசைப் புலமை வாய்ந்த மெல்லியலார் ஒருவரும் உண்டு என்பர். அவர்கள் கூற்றுக்கு ஆதாரம் செந்தமிழ் இரண்டாந்தொகுதியில் அப்பொழுது பத்திராசிரியராயிருந்த சேதுமன்னனது அவைப்புலவர், திருமிகு ரா. ராகவையங்கார் எழுதியதேயாகும்.

iii சேரன் செங்குட்டுவன் நூலாசிரியர், ஊரென்பது உறையூரென்று சொல்லப்பட்ட நகரின் கண்ணே ஒரு சோழ பரம்பரை யுண்டென்றும், காவிரி கடலொடு கலக்கும் துறைமுகமான புகார் என்னும் காவிரிப்பூம் பட்டினத்தில் ஒரு சோழ அரச பரம்பரை இருந்து அரசாண்டதென்றும் கூறி, பின்வருந் தலைமுறையுங் காட்டுவர்.

| உறந்தைச் சோழர் | புகார்ச் சோழர் |
| --- | --- |
| மணக்கிள்ளி | கரிகாலன் |
| \| | \| |
| நெடுங்கிள்ளி | கிள்ளிவளவன் |
| \| | \| |
| இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி. | சேட்சென்னி நலங்கிள்ளி |

இவர்கள் கருதுகிறபடி உறையூர்ச் சோழர், புகார்ச் சோழர் என இரு கிளையினர் இல்லையென்றும், சோழன் மணக்கிள்ளி என்னும் பெயர் சோணை மணக்கிள்ளி என்று இருக்கவேண்டும் என்றும் இக் கொள்கைகள் ஏலாவென்றும் முனனரே காட்டப்பட்டன.[1]

iv சென்னைப் பல்கலைக் கழகச் சரித்திரப் போராசிரியராய டாக்டர் கிருஷ்ணசாமி ஐயங்காரவர்கள் தமது 'புராதன இந்தியா'வில் கரிகாலன் சரித்திர சம்பந்த முடையவனென்றும், அவனது பாட்டன் வேற்பலை நடக்கைப் பெருநற்கிள்ளி என்றும், அவனது தந்தை உருவப் பலைறேர் இளஞ்சேட்சென்னி என்றுங் கூறுவர்[2]. வேற் பலைநடக்கைப் பெருநற்கிள்ளி என்று கொண்டதன் காரணம் அவன்

---

1 செந்தமிழ், தொகுதி. XX

2 Ancient India P. 92.

குடக்கோ நெடுஞ்சேரல் ஆதனேடு பொருது ஆரங்கழுத் தன்னதாக விருந்து உயிர்விட்டமையேயாம்.

இவர்கள் கரிகாலனுக்குப் பின்னுண்டவர்களைக் குறித்த தாகத் தெரியவில்லை. சோழன் கரிகாலனது பிள்ளைகள் நலங் கிள்ளியும், மாவளத்தான் என்ற மறுபேருடைய கிள்ளிவ்ளவ னும் என்பது உண்மை. ஆயினும், கனகசபைப் பிள்ளையவர் கள் கூறியபடி கரிகாலனுக்குப்பின் ஆண்டவன் நலங்கிள்ளி சேட்சென்னிதானேவென்று ஆராயப் புகுவோமாயின், புறநா னூறு ஒருவாறு நமக்கு உதவி செய்யும். புறநானூற்றுச் செய் யுள் தொகுப்பு முறை ஒரு வரிசையைக் காட்டுவதாகத் தெரி கின்றது. அதன் தொகுப்புமுறை ஒவ்வாததெனத் தள்ளு முன், அதனைச் செவ்வனே ஆராய்ச்சி செய்வது நன்மை. இவ்வாறு காண்போமாயின் சோழர்களில், முதலில் உருவப் பஃறேர் இளஞ்சேட்சென்னியும், இரண்டாவது சோழன் கரிகாற் பெருவளத்தானும், சோழன் நெய்தலங்கானல் இளஞ் சேட்சென்னியும், பின்னர் சோழன் முடித்தலைக்கோ பெருநற் கிள்ளியும், சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் காணப்பட, அதன்பின்னரே நலங்கிள்ளி காணப்படுகின்றான். சோழன் நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி என்பான் பெயரைக் கொண்டே அரசு கட்டிலேறியவனல்லன் என் பது புலனுகின்றது. இளமை என்பது அரசரின் இளவல் என்று பொருள்படும்; இதனை இளங்கோ, இளவரசன் என் பனபோன்றே கொள்ளவேண்டும். கரிகாலனது தந்தையான உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி அரசு கட்டிலேறுததே இதற்கொரு இலக்காய் நிற்பது கவனிக்கத்தக்கது.

சோழன் நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னிக்குப் பின் காணப்படுபவன் முடித்தலைக்கோ பெருநற்கிள்ளி. இவன் 'முடித்தலை' என்ற அடைமொழியினலே அரசு கட்

டிலேறினவனென்று கொள்ளவேண்டும். முடிந்த தலையை யுடையவனென்னும் பொருள் பயவாதோவெனின் அப்படிப் பட்ட தொரு செய்தியில் பெருமையொன்று மில்லையாகை யால், அதனை அடைமொழியாகச் சேர்த்திருக்க மாட்டார் கள். இவனே கரிகாலனுக்குப் பின்னர்க் காணப்படுகிறான். இவன் கரிகாலனை யடுத்தவன் என்று கொள்வதற்குப் புறச் சான்றுகள் வேறுண்டோவென இனி ஆராய்வோம்.

புறநானூறு 75-வது செய்யுளில் சோழன் நலங்கிள்ளி, தான் பெற்ற அரசுரிமை 'மூத்தோர் மூத்தோர்க் கூற்றம் உய்த்து எனத் [தம்பால்] தரவந்த தாயம்' என்கின்றான். இதனை விவரித்துச் சொல்வோமானால், 'இவ்வரசாட்சியில் தங்குடியின் முதியோரை முதியோரை எமன் கொள்ள, விதியினாலேயே இது தனக்குக் கிடைக்கவேண்டிய தாயிற்று' என்பதாம். இதனாலே இவனுக்கு முன்னர் ஆண்டவர் பலர் இல்லாவிட்டாலும் தன் தகப்பனைத் தவிர வேறு ஒருவர் உண்டென ஒருவாறு ஊகிக்கலாம். 'முதியோர்' என ஒரே சொல் இருக்குமாகில் அது முன்னோர் என்பதையே குறிக்கும். அப்படியின்றி, தனக்குக் கிடைக்கவேண்டிய வழியில் நடுவிலுள்ளவர் ஒருவர் உண்டென்று குறிப்பிடவே இதனை மீட்டுங் கூறினாரென்க. இதற்குச் சான்றாக 'மான்மகன் மகன் மகன்' என்ற கந்தபுராணச் சுருக்க அடிகளைக் குறிப் பிடலாம்.

இஃதன்றி, சோழன் கரிகாற்பெருவளத்தானோடு பெருஞ் சேரல் ஆதன், வெண்ணி என்னும் ஊர்ப்புறத்தே பொருது புண்பட்டு வடக்கிருந்தான் என்று கூறும் புற நானூறு[1]. இச் செய்தியைப் பொருநராற்றுப்படை என்னு நூல் சேர பாண்டியர்கள் இருவரும் பொருது களத்தவிந்த

1 புறம் 65.

னர் என்று கூறும்[1]. அகநானூறோ சேரனும் பாண்டியனும் பதினொருவேளிரும் இவனொடு பொருது தோற்றனர் என்று உரைக்கும்[2]. இவைகளுள் சிற்சில விஷயங்கள் மாறுபாடுடையனவாகக் காணப்படினும், கரிகாற் பெருவளத்தானொடு பொருதவன் ஒரு சேரன் என்பதும், அவன் பெருஞ்சேரல் ஆதன் என்பதும் உறுதியாகின்றன. இவனது மகனுவான் நெடுஞ்சேரல் ஆதன். இவன் பெருந்திருமாவளவனது சமகாலத்தவனும் உறவினனுமாவான். இவன் கரிகாலனது மகளும் இமயம்வரைத் தன்னாணை செலுத்தி, கனகவிசயர் தலையில் பத்தினிக்கடவுள் படிமத்திற்குக் கற்கொண்டு வந்தவனான சேரன் செங்குட்டுவனது தாயுமான நற்சோணையை மணந்தவனுவான். இக்குடக்கோ நெடுஞ்சேரலாதனே பெருவிறற்கிள்ளி என்பானொடு பொருது ஆரங்கழுத்தென்ன உயிர்போகாது கிடந்தானென்று கூறும்[3]. அக்களத்திற்பொருத சோழனும் சேரனும் இறந்தனரென்பது புறநானூற்று மற்றிரு செய்யுள்களால்[4] அறியப்படுஞ் செய்தி.

புறம் 368-வது பாட்டில் கழாத்தலையார் என்னும் புலவர் நெடுஞ்சேரல் ஆதனைப் பார்த்து, 'நின்னைக் களிற்றின்மேலெடுத்துச் செல்வோ மென்றாலும் அவை ஒளிறு மழை தவிர்க்கும் குன்றம்போலக் கணைபட்டுத் தொலைந்தன; கொடுஞ்சியையுடைய நெடுந்தேரிலேற்றிச் செல்வோமென்றாலோ அவைகளெல்லாம் பீடழிந்து நிலஞ்சேர்ந்தன; குதிரைகளெல்லாம் இறந்தொழிந்தன. யாதொரு முகவையுமில்லாமையான் நீ இங்கே இவ்வாறு கிடக்கவேண்டியிருக்கிறதென்று' கூறினார். இவரே பின்னரும் 'இரண்டுபேரும்

---

1 அடி 143 - 148. 2 அகம் 246.
3 புறம் 368. 4 புறம் 62,63.

பட்டனர்; பதினெண்பாடை மாக்களாலாகிய படையும் ஆள்வாரற்று வீழ்ந்தது' என்றார். இதனையே பரணரும் கூறினார். இவர்கள் இறந்துபட்ட பின்னர்ச் சேர அரசாட்சிக்குச் செங்குட்டுவனும், சோழ வரசாட்சிக்கு நலங்கிள்ளியும் வந்தனர் எனலாம். இவ்வாறு கொள்வதனால் புறநானூற்று வைப்பு முறைக்கும் நலங்கிள்ளி பாட்டிற்கும் ஒற்றுமை ஏற்படுகின்றது.

ஆயினும் புறநானூற்றுச் செய்யுள், கீழ்க்குறிப்பில் காணப்படும் சோழன் வேற்பஃறடக்கைப் பெருநற்கிள்ளியான பெருவிறற்கிள்ளியும், முடித்தலைக்கோ பெருநற்கிள்ளியும் வேறலரோ, ஒருவராவரோவெனின், ஒரு சோழவரசனே பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டு விளங்கினான் என்க. சோழ வரசாட்சியைப் பல தாயத்தார்களிருக்கும்போது, கரிகாலன் அடைந்தானென்பது மறுக்க முடியாத தொரு உண்மைச் செய்தியாம். இக்கூற்று 'கழுமலத்தில் யாத்த களிறு'[1] என்னும் முதற் குறிப்பையுடைய [2]பதினெண் கீழ்க்கணக்கி லொன்றாய பழமொழிச் செய்யுளான் வலியுறும். இஃதொன்று மட்டுமன்று. பிற சான்றுகளுமுள. இச் செய்திகளாற் சோழ வரசரிற் பல கிளைகளிருந்தனவென்றும், அக் கிளைகளைச் சார்ந்த பல தாயத்தார் தங்களுள் முடிமன்னராயினாரோடு போர்புரிந்தும், உட்கலாம் பல விளைத்தும் துன்புறுத்தி வந்தனரென்றும் அறிகிறோம். எஃகு விளங்கு தடக்கை யியல்தேர்ச் சென்னியாம் நலங்கிள்ளியோடு பகைத்

1 பழமொழி 62

2 நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி — மாமூல
மின்னிலைசொல் காஞ்சியுட னேலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு.

துத் 'திண்ணிலைக் கதவி னீண்மதி லொருசிறை யொடுங்குத லுணுத்தகவுடைத்து' என்று இடித்துக் கூறப்பெற்ற நெடுங் கிள்ளி தன்புறத்தியும், அன்புற்றும் நாட்டில் அமைதியின் மையை யுண்டாக்கினன். குடக்கோ நெடுஞ்சேரலாதற்குச் சோணை மணக்கிள்ளி யீன்றமகனும் சேரன் செங்குட்டுவன் தன் மைத்துனனான சோழன் ஏவல் பெறுராான தாயத்தார் பலரை நேரிவாயிலிற் கீழ்ப்படுத்தி ஏவல்வழி நடக்கச் செய் தானென்று சிலப்பதிகாரம் கூறும். இவைகளினாலே தலைமை பெறுதற்குரியனாயும், வல்லமை வாய்ந்தவனாயும், முடியுடை யனாயு மிருந்தமைபற்றி யன்னானை முடித்தலைக்கோ பெருநற் கிள்ளி யென்றார் புலவர் பெருமானா ரென்க.

இவ்வாறன்றி, பதின்மூன்றாவது புறப்பாட்டிற் கண்ட முடித்தலைக்கோ பெருநற்கிள்ளியோடு பொருதவன் சேர மான் அந்துவஞ்சேரல் இரும்பொறை யெனக் காணப்படி வின், முடித்தலைக்கோ பெருநற்கிள்ளியும், பெருவிறற்கிள்ளி யும் ஒருவனாயினும், அந்துவஞ்சேரல் இரும்பொறையும்; குடக்கோநெடுஞ்சேரலாதனும் ஒருவராவரோ வென்ற சங்கை எழும். இவர்கள், சேரர், ஒருவரல்ல ரென்பதுண்மையே. ஆரங் கழுத்தன்னதாகக் கிடந்துயிர்விட்டவன் குடவர்கோ மான். அதாவது குடநாட்டுக்கு அதிபன். மற்றவனோ இரும்பொறை மரபினன். பதிற்றுப்பத்திற் காணப்படும் பதிகங்களாலும், புறநானூற்றிற் காணப்படும் அரசர் பேர் களாலும் அந்நாட்டில் இருபெருமரபினர் சம காலத்தில் ஆண்டு வந்திருக்கின்றனர் என்பது வெள்ளிடைவிலங்கல். அஃதன்றிக் குடநாடும் வேறு, குட்டநாடும் வேறாகும்.

இரும்பொறை மரபில் சேரமான் அந்துவஞ்சேரல் இரும்பொறை, கருவூரேறிய ஒள்வாட் கோப் பெருஞ்சேர லிரும்பொறை, தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை

என இரும்பொறைமார் பலராவர். மற்றொரு கிளையில் குடக்கோ பெருஞ்சேரல் ஆதன், குடக்கோ நெடுஞ்சேரல் ஆதன் முதலிய ஆதன்மார் பலராவர். இவ் வரலாற்றை உளத்திலிருத்துவோமாயின், ஒரே வேந்தன் பகைப்புலம் புக்கு ஒரு பேரரசின் கீழுள்ள இருபெரு வேந்தரோடு பொருதானென்று கேட்கும்போது, அதன்கண் வியப்பிருக்கக் காரணமில்லை. நுணுகி யாராய்ந்து உரைகண்ட உரையாசிரியரும், இப் பாட்டிற்கு எழுதிய விசேடக்குறிப்பில் 'பெருநற்கிள்ளி களிறு கைபிகந்து பகையகத்துப் புகுந்தமையின் அவற்குத் தீங்குறு மென்றஞ்சி வாழ்த்தினமையின் வாழ்த்தியலாயிற்று' என்பர். இதனாலே உரையாசிரியரும் சேரருள் இருவகுப்புண்டென்ற கொள்கையினராம் என்பது புலனாகின்றது. ஆகவே நலங்கிள்ளிக்கு முன்னும், கரிகாலனுக்குப்பின்னும் சோழன் முடித்தலைக்கோ பெருநற்கிள்ளி — பெருவிறற்கிள்ளி — என்ற பெயரையுடைய பெருநற்கிள்ளி — ஆண்டானென்று கொள்வது அமைவுடையதாம்.

இனி, இவன் கரிகாலன் முதலாயினோர்க்கு எவ்விதமான உறவுடையானென்று ஆராய்வோமாயின் சேட்சென்னி, இளஞ்சேட் சென்னிகளைப்போன்று கரிகாலனது இளவலாக இருந்திருக்க வேண்டுமென்று தெரிகிறது. இன்றேல், பெருவிறற்கிள்ளி கரிகாலனிடத்துப் பெண் கொண்ட நெடுஞ்சேரலாதனோடு பொரக் காரணமில்லை. ஆனால், தனது மூத்தோனுடைய மகளின் கணவனோடு பொருது உயிர் துறந்தானென்று படிக்கிறோமே, அவ்வாறு நடத்தலுமுண்டோவென வினவுவீராயின், விக்டோரியா மகாராணியாரது பெண்வயிற்றுப் பிள்ளையும், பிள்ளைவயிற்றுப் பிள்ளையுமே பொருது நின்றதை நாம் கண்கூடாகக் கண்டோமாகலின், வேந்தருள் அத்தகைய உறவு நீடித்திருந்ததில்லை யென்பது விளக்க

மாகிறதென்போம். அன்றி மகனெனக் கோடாமோவெனின், அவ்வாருயின், இவனது சிறப்புக் கூறியவிடத்து, அவ்வுண்மையைப் புலவர் புலப்படுத்தியிருப்பரென்க.

இனி இவ்வாறன்றி, ஹூல்ஷ் துரைமகனுர் தேன் இந்தியக் கல்வெட்டுக்கள் இரண்டாம் காண்டத்தில் பின்வருமாறு எழுதலாயினர் :—[பிருதிவீபதியின் உதையேந்திரத்துச் செப்புப்பட்டையத்திற் கூறப்படும்] 'சோழர் குலமுறை (வமிசாவளி) யில் கோக்கிள்ளி, சோழன் கரிகாலன், செங்கண் என்ற வரிசை காணப்படுகிறது. லேய்டன் பட்டையம் சோழன் கரிகாலன், கோச்செங்கண்ணன், கோக்கிள்ளி என்று தலைமுறை கூறும். கலிங்கத்துப்பரணியோ முதலில் கோக்கிள்ளி நாககன்னிகையை மணந்தானென்றும், (VIII-18) பொய்கையாரின் சமகாலத்தவனுன கோச்செங்கண்ணுனை அவற்குப் பின்வைத்தும், அவற்குப் பின் காவிரி கரைகண்டவனுன கரிகாலனை நிறுத்தியும் கூறும். விக்கிரம சோழனுலா கோக்கிள்ளியை முதலிலும் கரிகாலனைப் பின்னும், கோச்செங்கணுனை முடிவிலும் கூறும். இந்நான்கும் நாலுவிதமாகக் கூறுவதைக் காணலாம். கோக்கிள்ளி பிலத்தின் வழியே சென்று நாககன்னிகையை மணந்து வந்தானென்பதால், அவன் சரித்திர சம்பந்தமுடையவனென்று சொல்வதற்கில்லை. விக்கிரம சோழனுலாவும் புராண சம்பந்தமுடைய அரசர்களான சிபி, கவேரரை முன் கூறுகின்றது. உதையேந்திரம், லேய்டன் பட்டையங்கள் கூறும் சோழவமிசமும், பல்லவ வமிசத்தலைவராக அசுவத்தாமனையும் அவன் பிள்ளையையும் பல்லவ வமிசாவளிகள் கூறுவது போலவே காண்கிறது.

'மற்றைய இருவர்களாகிய கோச் செங்கண்ணுனையும், கரிகாலனையும் பற்றியோவெனின், அவர்களுள் ஒருவன்

பொய்கையார் இயற்றிய களவழிக்குத் தலைவனும், மற்றவன் உருத்திரங்கண்ணனார் இயற்றிய பட்டினப்பாலைக்குத் தலைவனுமாவான். கலிங்கத்துப்பரணி ஆசிரியர் இவர்கள் முதற்பாராந்தகன் காலத்துக்கு முற்பட்டவர்களென்று நினைப்பதால் இவர்கள் முற்பட்டவர்களாகவே இருக்கவேண்டும். தன் முன்னோர் சரித்திரத்தை இமையத்திற் பொறித்த கரிகாலனுக்கு முன்னே செங்கணானைக் கலிங்கத்துப்பரணி குறிக்க லெய்டன் பட்டையமும், விக்கிரம சோழனுலாவும் கரிகாலனுக்குப் பிற்பட்டவன் செங்கணானென்று கூறும். மேலும் லெய்டன்பட்டையம் கதையிற் கேட்கப்படும் கிள்ளியைச் செங்கணான் வமிசத்தவன் என்றுஞ் சொல்லும். இவைகளைச் சீர்தூக்கி நோக்குவோமாயின், இம்மூன்றும் பிறக்குங்காலத்துத் தகுதியான, முறைப்பட்ட குலமுறைகிளத்தும் சாதனமொன்று மிருந்ததில்லை யென்று காண்கிறது. களவழி, பட்டினப்பாலைபோன்ற நூல்களிற் கண்டதைக்கொண்டு இவைகளைக் கட்டியிருக்கலாம். இவைகளையெல்லாம் கல்வெட்டிற் காணப்படுவோரது முன்னோராகக்கோள்வது பிழையாகும். இவர்கள் இறந்துபட்ட சோழவமிசங்களின் பிரதிநிதிகளென்றும், அவர்கள் பெயர் தற்செயலாகவோ அரும்பெருஞ் செய்கைகளாலோ நிலைநின்ற பெயர்களென்றும் கொள்ளவேண்டும்.[1]"

இவ்வாறு இவர் கூறுவதினுண்மையை விசாரிப்போம். மேலேகண்ட விதமாக ஹுல்ஷ்துரை எழுதிய பின்னர், திருவாலங்காட்டுச் செப்புப்பட்டையம் கிடைத்தது. அதில் 'கமலா கலாகரஃபெருநக்கிள்ளி ராஜத்ததன்வயே' என்று காணப்படுகிறது. இதற்கு, செல்வத்துக் கிருப்பிடமானவனும், பல வரசர்களாலும் தொழப்பட்டவனுமான பெருநற்

1 South Indian Inscriptions Vol, II, pp, 377-378,

கிள்ளி தோன்றினான் என்பது பொருள். இதற்குப் பதிலாக, இவன் நாககன்னிகையான பீலிவளையை மணம்புணர்ந்த கிள்ளிவளவன் என்று டாக்டர் ஹூல்ஷ் கொண்டது யாது காரணம் பற்றியோ இதுபொழுது அறிவதற்கில்லை. இந்தத் துரை மகனாரைப் பின்பற்றியே கல்வெட்டுத்துறைக்காரர் எழுதலாயினர். இங்ஙனமின்றி, பேரு நற்கிள்ளி என்று கொண்டார்க ளென்றால், அப்பொழுதும் கிள்ளிவளவனைக் குறிக்காதென்பதைக் காண்க.

இப்பெருநற்கிள்ளி என்னும் பேருடையார் இருவராவா ரென்று முன்னர்க் குறித்துள்ளாம். ஒருவன் முடித்தலைக்கோ பெருநற்கிள்ளி, மற்றவன் இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளி. இவருள் முடித்தலைக்கோ பெருநற்கிள்ளி கரிகாலனுக்குப் பிந்தியவனென, முன்னரே காட்டப்பட்டது.

பெருநற்கிள்ளிக்குப் பின்னே தோன்றியவன் கரிகாலனெனத் திருவாலங்காட்டுப் பட்டையம் கூறுவதாலும், உதையேந்திரத்துச் செப்புப் பட்டையமும் கோக்கிள்ளிச் சோழன் பின்னோன் கரிகால னென்பதாலும், இராசசூயம் செய்திருப்பதாலும், கரிகாலன் காலமுதற்கொண்டே சோழவரசாட்சியிற் கலகமுண்டென்பது ஒரு தலையாகையானும் அவர்க்குப் பின் வந்தார் இராசசூயம் செய்தல் இயலாத காரியமாகலானும், கரிகாலனுக்கு முன்னர்த்தான் இராசசூயம் வேட்டான் இருந்திருக்க வேண்டுமென்று கொள்ள வேண்டியிருக்கிறது. இதற்கு ஏற்பக் கன்னியாகுமரிக் கல்வெட்டும் பெருநற்கிள்ளி கரிகாலனுக்கு முன்னிருந்தவன் என்றே தெரிவிக்கின்றது. இவ்விராசசூயம் வேட்டானோடு உடனரசராவார் கவியரங்கேறிய பாண்டியன் உக்கிரப் பெருவழுதி. ஆகவே பின்னெழுந்த திருவாலங்காட்டுப் பட்டையம் கூறுவதே பொருத்த முடையதாகிறது.

அன்றியும், 'லெய்டன் கிராண்ட்' என்னும் ஆனைமங்கலத்துப் பட்டையமும் முரணுமாறில்லை என்பது விளங்கும். அதிற் கண்ட கரிகாலன், கோச்செங்கண்ணன், கிள்ளிவளவன் என்ற முறை புறநானூற்று வைப்புமுறைக்கு ஒற்றுமையுடையதாகக் காணப்படுகிறது. கலிங்கத்துப்பரணியிலே, 'தளவழிக்கு நகையாளி இழிபிலத்தின் வழியே சென்று தனி நடந்து உரகர்தங் கண்மணி கொண்டவன்' என்று காணப்படுகிறது. அதாவது [பிருகுச்ச] அரசன் பிலத்துவாரத்தின் வழியே சென்று நாககன்னியை மணந்தான் என்பதாம். பாகவத புராணத்திலே சூரிய வமிசத்து அரசபரம்பரையைக் கூறும்போது, மாந்தாதாவின் மகனான புருகுச்சன் என்பான் பாதாள வுலகஞ்சென்று, நாககன்னிகையை மணந்து வாழ்ந்தான் என்று சொல்லப்படுகிறது. இவற்றால் நாக கன்னிகையான பீலிவளையை மணந்த கிள்ளிவளவன் வேறு என்பதும், அவன் கரிகாலனுக்குப் பிற்பட்டவன் என்பதும், பரணியிற் கண்டவன் மிக மிக முற்பட்டவனாகையால், அவன் வேறு என்பதும் பெறுகின்றும்.

விக்கிரம சோழனுலாவிலும் இக்கூற்றை வலியுறுத்த

'ஆங்குப்
பிலமதனிற் புக்குத்தன் பேரொளியால் நாகர்
குலமகளைக் கைபிடித்த கோவும்'

என்று பிருகுச்சனையே குறிக்கிறது. இதற்குச் சான்றாக நிற்பது இவ்வடிக்குப்பின் காணப்படும்.

'உலகறியக்
காக்குஞ் சிறுபுறவுக் காகக் களிகூர்ந்து
தூக்குந் துலைபுக்க தூயோனும்'

என்ற அடியேயாம். இவ்வுலாவிலே ௰௫, ௰௬ ஆவது கண்ணிகளில் கரிகாலனையும், செங்கணானையும் தவிர மற்றைய அரசர்களைப்பற்றிச் சொல்லப்படவில்லை.

ஆகவே, மேற்காட்டியவைகளான் பட்டையங்களினும் கல்வெட்டுக்களினும் காணப்படும் வமிசபாரம்பரை முரண்பாடின்றி ஒன்றற்கொன்று பொருத்த முடையதாகவே காணப்படுகின்றதென அறிகின்றோம். ஆதலின், முற்காலச் சோழ அரச பரம்பரையை ஒருவாறு கீழே குறிக்கின்றேன்.

- சோழன் இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளி.
  - சேட்சென்னி
  - இளஞ்சேட்சென்னி
    - கரிகாற் பெருவளத்தான்
      - சோணைமணக்கிள்ளி [பெண்]
      - நலங்கிள்ளி
      - கிள்ளிவளவன் [நமது சரித்திர நாயகன்]
    - பெருவிறற்கிள்ளி
      - நெடுங்கிள்ளி

இவ் அரசர்களது குலமுறையை முடிவாக வரையறுத்துத் துணிதற்கு இதுவரைக் கிடைத்துள்ள ஆதாரம் போதியதாகாது. எனினும் தக்க ஆதாரங்கள் கிடைக்கும் வரை மேலே குறித்த வமிசாவளியைக் கொள்ளுதல் ஏற்புடைத் தாகலாமெனக் கருதுகின்றேன்.

## 2. நாட்டு வளம்

கிள்ளிவளவன், இற்றைக்குச் சுமார் ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன்னர் அரசாண்டு வந்தான். அவன் நாளில் நாட்டு மக்கள் எவ்வாறு வாழ்ந்து வந்தன ரென்று அறிய வேண்டுவது நம் கடனாகும். இந்நாளைப் போன்று அந்நாளில் ஓர் ஊரினின்றும் மற்றோர் ஊருக்குச் செல்ல நல்லசாலைகள் உண்டு. வழிச் செல்வோர் நீர்வேட்கையைத் தணித்துக் கொள்ள ஆங்காங்கே கிணறுகளும் தங்குமிடங்களும் அமைந் திருக்கும். ஆயினும் அந்நாளில் ஊர்களும், கிராமங்களும், பட்டணங்களும் ஒன்றையொன்று சேர்ந்திராமல் தொலைவி லிருக்கும். ஊர்களில் வேளாளரே தலைவராக விளங்குபவர். அவரைச் சார்ந்து உழுதுண்போரும், பலவிதத் தொழின் மாக்களும் வதிவர். தொழின் மாக்களிருக்கை வேளாளரது இல்லங்களினின்றும் பிரிந்து ஒதுங்கியிருக்கும். நாட்டினுள் ளாரில் தொழிலாளர், கூரை வேய்ந்த குடில்களிலும், தலைவர், மாடகூடங்களோடு கூடிய மாளிகைகளிலும் வாழ்வர். அவர்கள் தம் நிலத்தைப் பண்படுத்திச் செந்நெல், வெண் ணெல் முதலான நெல்வகைகளையும், உளுந்து, தோரை, கடலை முதலான கூலப் பொருள்களையும் விளைவிப்பதோடு, புன்செய்யில் சோளம், கம்பு வரகு முதலாய தானியங் களையும் விளைவிப்பர்.

உழுதற்குச் சாதனமாக எருதுகளும், எருமைக் கடாக் களும் உபயோகிக்கப்படும். இவை பல்குதற் பொருட்டு ஆவும் மேதியும் உண்டு. இவற்றைப் பாதுகாப்பது நாட்டு வழக்கம். ஆனிரைகளையும் மேதிகளையும் மந்தையாக ஓட்டிச்சென்று ஊருக்கு வெளியிற் புல்நிறைந்த இடங்களிற்

கொண்டு மேய்ப்பர். பாலைக் கறந்து காய்ச்சிக் கடைந்து வெண்ணெயாகவும், உருக்கி நெய்யாகவும் விற்றும், பண்ட மாற்றல் செய்தும் வாழ்வர். நாட்டிலிருந்து நகரில் தயிர் கொண்டுவந்துகொடுத்துவிட்டுஅதற்குப்பதிலாகத்தயிர்மிடா நிறைய வெண்ணெல் பெற்றுச் சென்றார்களென அறிகின்றோம். நாட்டிலுள்ளார், தமக்கு வேண்டுவனவற்றை யெல்லாம் தாமே யுண்டாக்கி அனுபவித்து வந்தனர். உள் நாட்டில் விளைவிக்க முடியாத உப்பு கடற்கரை யோரங்களில் விளைவிக்கப்பட்டு உள்நாட்டுப் பண்டங்கட்கு நாட்டினுள் மாறப் பட்டுவந்தது. இந்நாளைப் போலவே அந்நாளிலும் வெற்றிலையுண்டு. அக்காலத்தில் அதற்கு வெள்ளிலை என்றும் இலையமுது என்றும் பெயர் வழங்கி வந்தது.

மக்கள் நயமான உடை உடுத்துவந்தனர். நாட்டில் பஞ்சு ஏராளமாகையால் அவற்றைச் சேகரித்து மூட்டையாக்கி வைத்துக் கொண்டு வீட்டிலுள்ளார் நூலாக நூற்பது வழக்கம். விரும்பிய வாறெல்லாம் ஆடை நெய்தும், அவற்றிற்குச் சாயமேற்றியும் உடுத்து வந்தனர்.

பண்டங்களை ஏற்றி ஓரிடத்தினின்றும் ஓரிடத்துக்குக் கொண்டுபோதற்கு எருதை உபயோகித்து வந்தனர். பெருஞ்சுமைகளை வண்டிகளி லேற்றிக்கொண்டு சென்றனர். மக்கள் ஒருவருக் கொருவர் பகையின்றி ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்தனர். அவர்கட்கு அதிகமாகப் பொருள் விருப்பும் புதிய மனோபாவங்களும் கிடையா; அதனானே உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை என்றறிந்து, நாடுகளிற் றங்கி நோயற்ற வாழ்க்கையுடன் வாழ்ந்து வந்தனர்.

நகரமோவெனின் கோட்டை மதில்களையுடையதாகவும், அதற்கு முற்புறத்தில் காவற்காட்டை யுடையதாகவும் இரு

க்கும். கோட்டையைச் சுற்றி ஆழ்ந்த அகழ்களுண்டென்றும் அறியக் கிடக்கின்றது. இக்கிடங்கினுக்குப் புதிய நீர் வந்து செல்லும்படியான கால்கள் ஏற்படுத்தி யிருந்தனர். பழைய நீர் கழியவும் புதிய நீர் புகவும் இடமிருந்தது. நகரெல்லாம் ஒரு முறையாக அமைக்கப்பட்டிருக்கும். நடுவில் அரசனது இல்லமான கோயில் அல்லது அரண்மனை யிருக்கும். அதனைச் சுற்றி அரசாது சுற்றத்தார் வாழ்வர். அதனையடுத்து வணிகரும், வேளாளரும் வசித்துத் தத்தம் தொழிலை நடாத்துவர். இவ்வீதிகளைச் சுற்றி வேலைசெய்வோர் தெருக்கள் இருக்கும். அதற்குப் பின்னரே தொழின்மாக்கள் குடில்கள் காணப்படும். இவ்வடைவாக இல்லங்களிருப்பதே அழகினையும், வணிகம் முதலிய இலாபந் தரக்கூடிய தொழின் முறையினையும் மேம்பாடுறச் செய்யும்.

ஆவணவீதியிலே பல்வகைப் பண்டங்களையும் முட்டுப்பாடின்றிப் பெறலாம். அன்றன்று வீட்டுக்கு வேண்டிய பண்டங்களை நாளங்காடியில் விற்பர். ஒரே கடைத்தெருவில் ஒரு கோடியில் ஒரு பொருள் ஒருவிலை கூறப்பட, மற்றொரு முனைக்குச் செல்லுமுன் அப்பண்டத்தின் விலை கூடவோ குறையவோ விற்கும் வழக்கம் அந்நாளிற் காண்பதரிது. ஒவ்வொன்றும் இவ்வளவு ஊதியம் வைத்து விற்க வேண்டுமென்ற நியதி யுண்டு. அளவு குறைவு, நிறைக்குறைவு முதலியவற்றை அக்காலத்தவர் கண்டுங் கேட்டும் இரார். 'குறைய நிறுத்தாற் குட்டங்கொள்ளும்' என்பது பிற்றை நாள் முதுமொழி.

நாட்டிலில்லாத பண்டங்கள், காவின் வழியாகவும் கடலின் வழியாகவும் கொண்டு வரப்படும். பட்டு, இலவங்கம் முதலியன சீனம் முதலாய பிற நாடுகளிலிருந்து கப்பல் மூலமாகக் கொண்டுவரப் பட்டன. மிளகு முதலிய மலைபடு

திரவியங்கள் பொதிகளிற் கொண்டுவரப்பட்டன. மிளகுக்குக் கறிக்கொடி யென்னும் பெயர் அந்நாளிற் கூறுவதுண்டு.

பல்வகைப் பட்டாடையும் பருத்தியாடையும் உண்டு. தோயாப் பூந்துகில், கலிங்கம், பாம்பின் சட்டையன்ன பல்வகைச் சித்திரப்பா டமைந்த ஆடை முதலியவற்றை அரசரும், அரசரைச் சார்ந்தாரும் அணிவர். அங்கி என்ற உடையாலே அந்நாளில் உடலை மூடுவது வழக்கமென்று தெரிகிறது. அரசராயினோர் தமது திருமேனியைப் பிறர் காணு திருத்தற்கு ஓர் உடை அணிவர். அதுவே சட்டை, அங்கி யெனப் பல பாகுபாடுகளுடையதாய் வழங்கலாயிற்று. தாழ்ந்தோர் அரையில் உடை உடுப்பதையன்றி மேலே போர்த்துக் கொள்ளும் வழக்கம் அன்றுமில்லை; இன்றுமில்லை. இவர்களது உடை சிறியதாயிருக்கும். உடை சிறியதாயும், கனமாயுமிருப்பதால் நான்கு முழம் அதிகமெனக் கருதி, 'உடுப்பது நான்கு முழம்' என அறுதியிட்டனர். பெண்டிர், பூந்துகிலும் கச்சும் அணிவர். ஆடவாது உடையினும் பெண்டிரது புடைவை நீண்டதாயிருக்கும். அவ்வழக்கமே இன்றும் நிலவிவருகிறது. பட்டு, பருத்தியாடைகளே யன்றி, ஆடு, எலி இவற்றின் உரோமங்களாலான கம்பளி உடைகளுமுண்டு. எலிமயிராடையைச் சிலப்பதிகாரம் மிக வியந்து கூறும். இவைகளெல்லாம் வண்ணார் கைப்பட்டு வெளுத்துச் சலவை செய்யப்படுவதுண்டு.

நகரங்களிலே யுள்ளார் சாந்தணிந்து, சந்தனந்திமிர்ந்து, மாலைநேரங்களில் உலாவப் போதலுண்டு. பல்வகைச் சாந்து ஆடவரும் பெண்டிரும் அணிவர். உடன்மேல், வண்ண மென்னும் எழுதுமை கொண்டு எழுதுவர். சுண்ணம் பூசுவர். விடுபூ, தொடைப் பூ, கட்டுப் பூ என்னும் முப்பூவையும் அணிவர். கோகட்டி, செந்தேன், நிரியாசம், பச்சிலை, ஆரம்,

அகில் முதலியன சேர்த்துக் கூந்தலுக்குப் புகை யூட்டுவதும் உண்டு. மாதரார் செம்பஞ்சுக் குழம்பினைக் கால்கைகளில் தீட்டுவதுமுண்டு. இவ் வழக்கம் கிரேக்க தேசத்திற்கும் சென்றது. வீடுகளில் பசு, எருமைகளே யன்றி, குரங்கு, யானைக் கன்று, கிளி, பூவைகளும் வளர்க்கப்பட்டன. குரங்கு களைப் பிள்ளைகளைப்போற் பேணிவந்தனர். கிளி, பூவை முதலியன மகளிர் காலப் போக்குக்காக வளர்க்கப்பட்டன. அம்மனை, கழங்கு, ஊசல் முதலியன பெண்டிர் விளையாட்டா கும். பந்து முதலிய, உடலுக்கு நலந்தரும் விளையாட்டுக்கள் சிறுவர்களுடையன. வட்டாடல், மற்போரிடல் ஆடவர் காலப்போக்கு. ஆடல், பாடல் வனிதையர் காலப்போக்கு.

நகரிகளில் தொழில் செய்து பொருளீட்டுவதன்றி, மக் கள், காலிற் சென்றும், கலத்திற் சென்றுந் திரவியந் தேடுத லுண்டு. கிழக்கில் சீனம் முதல் மேற்கில் கிரேக்க நாடுவரை கலத்திற் செல்வர். இந்நாட்டிலுள்ள நெல், கொள் முதலான நாடுபடு திரவியங்களையும், முத்து, பவளம் முதலான கடல் படு திரவியங்களையும், இரும்பு, எஃகு, மிளகு முதலான மலைபடு திரவியங்களையுங் கொண்டுசென்று, அந்நாட்டிலுள்ள பட்டாடை, வெள்ளி, கண்ணாடி முதலான பண்டங்களை ஏற்றி வருவர். கலங்கள் கட்டவும், செலுத்தவும் நன்கறிந்திருந்த தோடு, அவை தங்கும் சாலைகளும் அமைத்திருந்தனர்.

அந்த நாளில் பெண்டிர் காலிற் சிலம்பு, தண்டை முதலியன அணிவர். இவை வெண்பொன்னாலும், செம் பொன்னாலும் செய்யப்பட்டிருக்கும். இவை ஒலித்ததற்கு முத்து, மாணிக்கம் முதலிய விலையுயர்ந்த மணிகள் உள்ளே போடப்பட்டிருக்கும். கோவலன் மனைவி கண்ணகியின் சிலம்பில் மாணிக்கப்பரல் போடப்பட்டிருந்தது. பாண்டி யன் நெடுஞ்செழியன் தேவியாரின் சிலம்பில் முத்து இடப் பட்டிருந்தது. ஆடவர் இடுப்பில் அரைஞாணுண்டு. ஆண்

மக்களுடைய அரையில் அரைஞாண், சலங்கை, கிண்கிணி முதலியன கட்டுவர். பெண்மக்களுக்கு அரசிலை முதலியன அணிவர். கழுத்தில் ஐம்படைத்தாலி இடுவர். பெரியார் பதக்கம் இட்டுக் கொள்வர். கழுத்தில் தொங்கும் தாலியைக் கொண்டு, மணமானவள் என்று அறிந்துகொள்ளலாம். பெண்டிர் முன்கையில் சங்கு, பொன் இவைகளாலான வளையல் அணிவர். மேற்கையில் தொடி என்னும் அணியிட்டுக் கொள்வர். அரசர் முதலாயினோர் வாகுவலயம் அணிவர். பெண்டிர் தலையில் சுட்டி, சிதேவி முதலிய தலைக் கோல மணிவர். இன்னும் பல்வகை அணிகளும் உண்டு.

மக்கள் அறிவு மிகுந்திருந்தனரென்றே கூறலாம்.

'கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்'

என்ற திருக்குறளை அறிவர். தமிழ்மொழியிடத்து எல்லோரும் ஆர்வத்துட னிருந்தனர். தமிழணங்கின் சீர் மிக்க உயரிய நிலையிலிருந்தது. தாய்மொழிப் பற்று மிகுதியுமுடையது அக்காலம். தோகை, கரம், தெறிக்கம் போன்ற தமிழ்ச் சொற்கள் கிரேக்க தேசத்திலும் வழக்காறுடையதாகக் காணப்படின் இம்மொழியின் மேன்மைக்கு வேறு சான்று வேண்டா வன்றே! உண்மையில் எகிப்து, மத்திய ஆசியாவான பாலஸ்தீனம், அசிரிய நாடுகளில் தமிழ்க் குடிகள் பல நிரம்பி யிருந்தன. தமிழ்நாட்டுப் பழக்க வழக்கங்களே இன்றும் ஆண்டுக் காணப்படுகின்றன என்பது நாட்டியல் நூல்[1] வல்லார் மாத்திரமன்றி [2]ஆராய்ச்சியாளருடைய கூற்றுமாகும். இவ்வாறு பல்வகையினும் மேம்பாடுடையராய்த் தமிழ் நாட்டினர் அக்காலத்தில் வாழ்ந்து வந்தனர் என்று பழந்தமிழ் நூல்களால் அறிகிறோம்.

---

1 Geography. 2 Mythic Society's Journal, Mysore.

## 3. கல்வித் திறன்

பொருள் என்ற சொல்லுக்கு மதித்தல், உயர்வாகக் கருதுதல் என்று பொருள்படும்படி ஆசிரியர் திருவள்ளுவனர்,

'பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்'

என்ற திருக்குறளில் அமைத்துளார். பொருள், செல்வம், திரவியம் என்பன ஒரு பொருள் குறித்த பல பெயர். இப் பொருளைப் பகுக்குங்கால் அது கல்விப்பொருள், செல்வப் பொருள் என இருதிறப்படும். இவற்றுள் ஒன்றினை நீக்கி யொன்றினையுடையார் பெரியராவரென உலகம் மதிக்காது. 'கல்லானே யாயினும் கைப்பொருள் ஒன்றுண்டாயின் எல்லோரும் சென்றங்கெதிர்கொள்வர்' எனப் பெரியார் நீதியாகக் கூறினது உண்மையாயினும், அஃது 'இல்லாரை யெல்லாரும் எள்ளுவர் செல்வரை யெல்லாருஞ் செய்வர் சிறப்பு' என்னுங் குறள் வெண்பாவின் கருத்தை நோக்கியேயாம். இச்செல்வப் பொருளின் தன்மை பலதிறப்பட்டதாய், ஒருவரிடத்துத் தங்குதலின்றிப் பலரிடத்துஞ் சென்று தங்கும். இதற்கு மாறாக, கல்விச் செல்வமோ வைப்புழிக் கோட்படாதென்றும், வாய்த்தீயிற் குறைவுபடாதென்றும், கொடுக்கக் கொடுக்கக் கொடுப்பவன் கல்வி வளருமென்றும் சொல்லப்படும். முதலிற் சிலருக்குச் சிறிது துன்பமாகத் தோற்றினும், வருந்திச் சில கற்பான் தொடங்கிவிடின், அது முடிவில் இன்பத்தையே தந்து நிற்கும். மக்களாய்ப் பிறந்தார் எவருக்கும் கல்வி இன்றியமையாதது என்பதை வற்புறுத்தவே பெரியாரொருவர், 'குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும் மஞ்சளழகும்

அழகல்ல' என்றார். உயர்குலமும், செல்வமும், அழகும் உடையவனாயினும் கல்வியில்லாத ஒருவனுடைய அழகு முருக்கம் பூவிற்கும், செல்வம் ஆற்றின் இடிகரைமரத்துக்கும் உவமிக்கப்படுமே யன்றி வேறொரு பயனையுந் தாரா. 'கண்டது கற்கப் பண்டிதனாவான்' என எண்ணாது, கல்வியை முறையோடு நல்லாசானிடத்துப் பயிலல்வேண்டும். இவ்வாறு பல்வகையிலும் முறை பிறழாமற் கல்வி கற்றவனையே உலகம் பெரியோனாக மதிக்கும். அதனாலன்றோ பழமொழி நூலுடையார், 55-ஆம் பாட்டில்,

ஆற்றவுங் கற்றார் அறிவுடையா ரஃதுடையார்
நாற்றிசையுஞ் செல்லாத நாடில்லை அந்நாடு
வேற்றுநா டாகா தமவேயா மாயினால்
ஆற்றுணா வேண்டுவ தில். 55

என்றார். அக்கருத்துப் பற்றியன்றே, 'யாதானு நாடாமால் ஊராமால்' என்றார் வள்ளுவப் பெருந்தகையாரும். இக் கல்வி நலமுடையானையே, 'கண்ணுடைய ரென்பர்' என்றும்,

'எண்ணென்ப வேனை யெழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு'

என்றும் வள்ளுவப் பெருந்தகையாரும் கூறினார். ஆகவே கல்வி யில்லாதவன் எவராலும் எள்ளற்கும் இகழற்கும் உரியனாய் நிற்பன்.

உலகிற் றோன்றிய மக்கட் பகுதிக்கே இவ்வாறாயின் குடிகளை யோம்பும் கொற்றவன் எவ்வாறிருக்க வேண்டுமென்பது சொல்லாதே யமையும்.

நமது சரித்திர புருடனான கிள்ளிவளவனும் கல்வியில் மேம்பட்டவனே. இழுமென் ஞோசையும் விழுமிய

பொருளு முடைய சொற்களைக் கோத்துச் செய்யுள் செய்யும் ஆற்றலில் வல்லவன். 'கற்றலிற் கேட்டலே நன்று' என் பதற் கிணங்கவும், 'செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம்' என்பதற் கிணங்கவும் நல்லுரைகளால் களிப்பிக்கும் பல புலவர் பெருமக்களாற் சூழப்பட்டிருந்தான்.

சங்கப்புலவரான கோவூர் கிழாரை யுள்ளிட்ட ஆலத் தூர் கிழார், வெள்ளைக்குடி நாகனார், இடைக்காடனார், ஆடு துறை மாசாத்தனார், மாறோக்கத்து நப்பசலையார், ஆவூர் மூலங்கிழார், ஐயூர் முடவனார், நல்லிறையனார், எருக்காட் டூர்த் தாயங்கண்ணனார், தாமப்பல் கண்ணனார் முதலாயினார் அவன் சபையில் குழுமியிருந்தனர். இவர்களோடு சேர்ந்த வாழ்க்கை யுடையவனா யிருந்ததனாலே இவன் வாழ்நாள் பேரும் பெருமையு முடையதாயிற்று. 'பாடல் பெறுனே பலர் மெச்ச வாழானே' என்று பிறர் தூற்றுவதற் கில்லாமல் நல்லோர் பலராற் போற்றப்பெற்றும், நல்வழியிலே நடத்தப் பெற்றும் வந்தான். தான் மாத்திரமன்றித் தன்னாட்டி லுள் ளாரும் கல்விச் செல்வத்தைப் பெற்று இன்புறுதற்கு வேண் டியன செய்திருந்தான். பிறர் கல்வியில் மேம்பட வேண்டு மென்னுங் கருத்து உண்டானதற்குக் காரணம், இவனுக் குக் கல்வியிடத் துண்டான ஆர்வமே என்று கூறவேண் டும். இவனைக் கல்வி பயிற்றுவிக்கப் பட்டதைச் சுட்டி ஆவூர் மூலங்கிழார் என்னும் புலவர், 'பசுக்களது முலைக் காம்பினைப் பெறும் பயனைக் கெடுத்த தீவினையாளர்க்கும், மாட்சிமையுடைய அணிகலன்களை யணிந்த பெண்டிரது கருப்பத்தைச் சிதைத்தோர்க்கும், பெரியோருக்குத் தீமை யிழைத்த கொடுந்தொழிலை யுடையோர்க்கும் அவர் செய்த பாதகத்தினை யாராயுமிடத்து அவற்றினைப் போக்கும் வழி யும் (கழுவாயும்) உளவாம்; நிலம் தலை கீழாகப் பெயர்ந்து

செல்லும் காலமாயினும், ஒருவன் செய்த நன்றியைச் சிதைத்தோர்க்கு நரகம் நீங்குதலில்லை யெனவும் அறநூல் கூறிற்று. ஆயிழை கணவ! காலையாகிய அந்திப்பொழுதும், மாலையாகிய அந்திப்பொழுதும், புறவினது கருவாகிய முட்டை போன்ற புல்லிய நிலத்து வரகினது அரிசியைப் பாலின்கட் பெய்து அடப்பட்ட சோற்றைத் தேனோடு கலந்து உண்டு, குறிய முயலினது கொழுவிய சூட்டிறைச்சியைத் தின்ற என் சுற்றத்தோடுகூட இலந்தைமரமோங்கிய அகன்ற இடத்தையுடைய பொதியிற்கண் ஒன்றனை மறைத்தலில்லாத உள்ளத்துடனே வேண்டுமொழி பயிற்றி, பெரிய கட்டியாகிய கொழுவிய சோற்றை அருந்திய பாணர்க்கு நீங்காத செல்வமெல்லாவற்றையுஞ் செய்தோன் எம்முடைய வேந்தனாகிய வளவன் வாழ்வானாக என்று நினது தாளை வாழ்த்தேனாயின் வாழ்நாட்குக் கருவியாய்த் தோன்றுங் கதிர்ச்செல்வன் தோன்றுதலறியான்' என்று பாடுகின்றனர். மேற்கூறிய கல்விச்சாலைக்கு இலந்தை மன்றம் என்றுபேர்.[1] இலந்தை மன்றமெனப் பேரிடப்பட்டதற்குக் காரணம் மேலே ஆலூர் மூலங்கிழாரால் கூறப்பட் டிருப்பதனின்றும் தெளிவாகும். சோழர்களும் சங்கம் வைத்து நடாத்தினர் என்பதும் இதற்கு ஒரு சான்றாக நிற்கிறது.

ஆளுடைய பிள்ளையாராம் திருஞானசம்பந்தப் பெருமானது கீழ்வேளூர்த் திருப்பாசுரம் ஒன்றும் இதனை வலியுறுத்தும். இவ்விலந்தை மன்றமானது இவனது முன்னோனாகிய நலங்கிள்ளி கால முதற்கொண்டே இருந்ததென்பதற்கு மற்றொரு புறப்பாட்டும்[2] சான்றாய் நிற்கிறது.

அரசன் குடிகட்குத் தந்தையும் தாயுமாவா னென்பதும், குடிகளும் தங்களிறைவனை யவ்வாறே கொள்ள வேண்டு

1. செந்தமிழ் தொகுதி, XIII. 2. புறம் - 325.

மென்பதும் தொன்றுதொட்டு வந்தவொரு கோட்பாடு. வேந்தன் தான் தண்டும் இறையைத் தனது மக்களாகிய குடிகளை யோம்பற்குச் செலவிடல் வேண்டும். இதனாலேயே தலைவனுக்கு இறைமகன் என்ற பேருண்டாயிற்று. நாட்டின் நலத்தைப் பேணுவதிலும் மக்கள் அறியாமையைப் போக்க முற்படுதலே முதன்மையானது. அறியாமை ஒரு நாட்டிலே மிகுமாயின் அந் நாடு செழிக்காதென்பது பெரியோர் கொள்கை. அதனை யெண்ணிப் போலும் நமது கதா நாயகன் கல்வி மன்றம் நிறுவியோம்பி வந்ததோடு நில்லாது, உணவு மளித்து வந்தானென்று படிக்கின்றோம்.

மிகப் பழைய காலத்தில் மட்டுமே இவ்வாறு உண்டி, உடையுடன் கல்வி பயிற்றப்பட் டிருந்ததென்றெண்ண வேண்டா. தமிழரசர்கட்கே இது பொதுவான செய்கை யென்றே கூறலாம். இதற்கு எடுத்துக் காட்டாக, பிற் காலச் சோழரில் கங்கைகொண்ட மன்னனெனப் பேர்பெற்ற இராசேந்திரன் என்னும் சோழர் பெருந்தகை, தென்னார்க்காடு ஜில்லாவிலுள்ள எண்ணாயிரம் என்னுமூரில் கல்வி நிலயத் தோடு மருத்துவச்சாலை யொன்றும் நிர்மாணித்து, மூலிகை கள் கொண்டு வந்து இடுவார்க்கு உண்டியும் மானியமும் விட்டிருந்தா னென்று அவ்வூர்க் கல்வெட்டுகள் இன்றும் காட்டி நிற்கின்றன. இவற்றைபோலவே, கி. பி. 1015 - ல் சுந்தரசோழவிண்ணகர் ஆதுலச்சாலை என்ற பேரோடு இரா ஜேந்திர சோழ மன்னன் தஞ்சையின்கண் அறச்சாலை யொன்று படைத்திருந்தா னென்று கோயில் தேவராயன் பேட்டைக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன [1]. இவைபோன்று இன்னு மநேகமுண்டு.

---

1 Epigraphist's Report for the Year ending March 1917, 1924.

இவனே கல்வி நிரம்பியவனென்று முன்னர்க் கூறப் பட்டது. இவனுக்குப் பல புலவர்களும் பாணரும் நட்பி னரா யிருந்ததுமன்றித் தன் கீழ்ப்பட்ட பல வள்ளல்களும் இவனோடு நட்புரிமை பூண்டிருந்தனர். அவர்களுள் இந்நாட் டிலே வெண்ணி நாட்டிற்கு உட்பட்டதான சிறுகுடி என்னு மூரைத் தனதாகக் கொண்ட பண்ணன் என்பானும் ஒருவன். அவனைச் சிறுகுடி கிழான் பண்ணன் என்று வழங்குவர். இவன் சிறந்த கொடையாளி. கிள்ளிவளவனே அவனது கொடைத் திறத்தை வியந்து, 'யான் உயிர் வாழ்நாளையும் பெற்றுப் பண்ணன் வாழ்வானாக' என்று வாழ்த்திவிட்டுப் பரிசிலர்க்குக் கூறுமுகமாக, 'பாணரே! காண்பீராக. இந்தப் பரிசிலனது சுற்றத்தின் வறுமையை; புதிதாக வரும் புள் ளினம் பழுமரத்தின் கண்ணே ஒலித்தாற்போன்ற ஊணொ லுண்டாகிய ஆரவாரத்தானுங் கேட்கும்; காலந்தப்பாத மழைபெய்யுங் காலத்தைப் பார்த்துத் தம் முட்டைகளைக் கொண்டு மேட்டு நிலத்தினை யடையும் மிகச் சிறிய எறும்பி னது சிலவாகிய ஒழுக்கத்தை யொப்பச் சோறுடைக் கையி னராய் வேறு வேறு போகின்ற பெரிய சுற்றத்தோடுங் கூடிய பிள்ளைகளைக் காண்பேம்; அரவமுங் கேட்கும். சிறு ரைக் காண்டும்; கண்டும் மற்றும், "நீர் எமக்குப் பசிப்பிணி மருத்துவனில்லம் அணித்தோ சேய்த்தோ கூறுமின்" என் கின்றான் இப்பாணன்[1]' என்று சிறப்பித்தான். இவனது செல்வம் வற்றுதது என்பதும், யாண்டுதோறும் புதிய வருவாயினை யுடையாதென்பதும், அவனே ஒரு அறநிலையம் என்பதும் இவனது பாட்டிற் குறிக்கப்பட்டிருப்பது காண்க. இவ்வொரு பாட்டினாலேயே இவனது கல்விநலம் விளங்கும்.

---

1 புறம் 173.

பின்னொரு காலத்தில் பொழுது போக்குக்காக இவனும் தாமப்பல் கண்ணன் என்னும் புலவரும் வட்டாடிக் கொண்டிருக்கையில் புலவர் வட்டைக் கையில் மறைக்க, அதனைக் கண்ட கிள்ளி வட்டை யெடுத்துப் புலவர்மேல் எறிந்தனன். புலவர் வெகுண்டு, 'நீ சோழன் மகன் அல்லைபோலும்; உன் பிறப்பில் ஐயப்பாடுடையேன்; ஏனெனில் நின் முன்னோர் ஒரு புறவுக்காகத் தன் உயிரைக் கொடுக்கமுன் வந்தனர்; நீயோ இச்சிறு செய்கைக்கு வெகுண்டாய் என்று சினந்தார். இதனைக் கேட்டபொழுது தனது கல்வியின் நுண்ணறிவால் தான் செய்தது தவறு என்றெண்ணி நாணியிருந்தனன். அதனைக் கண்டபுலவர் அவன் அருங்குணத்துக்கு வருந்தித் தவறிழைத்தவன் நீயன்று; நானே' என்று தேற்றினார்[2] இதனாலே இவனது அருங்குணம் வெளியாகின்றது.

இனி, இவனைச் சூழ்ந்திருந்த புலவர்கள் இப்புரவலனைப்பாடிப் பரிசில் பெறுவதே நோக்கமாக வுடையவர்களல்லர். மாறோக்கத்து நப்பசலையார், கோவூர் கிழார் என்னும் இருபுலவர்களும் இவ்வரசனுடனே வாழ்ந்து இவனுக்கு உண்டாகும் நல இளப்பங்களை எடுத்துக்காட்டி, இடித்துரைக்கவேண்டிய இடங்களில் இடித்துரைத்தும், பெருமைப்படுத்திப் பேசவேண்டிய விடங்களில் பெருமையோடும் பெருமிதத்தோடும் எடுத்துப் பேசியும், எவ்வெக்காலத்து எவ்வாறு அமைச்சுமுறை நடத்தவேண்டுமோ அவ்வாறு செய்தும் அரசனுக்கு இன்றியமையா நல்லமைச்சாயும் (சுமந்திரன்) உசாத்துணையாயு மிருந்தனர்.

மேலே கூறிய புலவர் பலருள்ளும் இடைக்காடனார், ஆடுதுறை மாசாத்தனார், ஐயூர் முடவனார், நல்லிறையனார்

---

2 புறம் செ. 43.

முதலியோர் இவனுக்குப் பின்னுமிருந்து பாடியவராவர். இவன் காலன் வாய்ப்பட்டதைக் கண்டு இரங்கிய ஆடுதுறை மாசாத்தனார் என்னும் புலவர் மறலியை நோக்கி [1]'ஐயோ! நீ அறிவுடையனல்லை : நீ மேலும் மேலுஞ் செல்லு மாற்ற லின்மையின் பயன் கொடுக்கும் விதையைக் குத்தித் தின்ற வனாய். இதனுண்மையைக் காண்பை; நாடோறும் நினக்கு உண்டாகும் பசியை வேண்டிய மட்டுந் தணிக்க வல்ல வளவனைக் கொண்டாய். நின் பசியைத் தீர்ப்போர் இனியார்?' என்று இலேசம் என்னும் அலங்காரம் கொளப் பாடி வருந்துகின்றார். ஐயூர் முடவனாரோ முதுமக்கள் தாழி வனையும் வேட்கோவைப்பார்த்து, 'அப்பா! வளவன் இறந்து பட்டான்! நீ அவனுக்குக் கலம் செய்யவேண்டுமானால் எப் படியும் பெரிய நிலவட்டம் உருளியாகவும், மிகப்பெரிய மேருமலையே மண்ணாகவும் வைத்து வனைந்தாலன்றோ இட மடங்கும். அது நினக்கு இயலுமோ? இயலாதன்றே!' என்று சொல்லி வருந்துகிறார்.

இவைகளினாலே கிள்ளிவளவன் நல்லிசைப் புலவர்களா கிய சுற்றத்தோடு வாழ்ந்தது மன்றி, தானும் கல்வியில் மேம் பட்டவனென்றும், தன்னாட்டிலுள்ளாரும் கல்வி கேள்விக ளால் மேம்பாடடைய வேண்டுமென்ற வேணவா வுடையவ னென்றும், அதற்குத் தக்கன புரிந்தானென்றும் அறிந்தோ மாகலின்,

'தூங்காமை கல்வி துணிவுடைமை யிம்மூன்று
நீங்கா நிலனாள்ப வர்க்கு'

என்பதற்கு இவன் ஒரு காட்டாக நிற்கின்றான்.

---

1 புறம் 227.

# 4. அரசியல்

ஒரு நாட்டை யாளும் மன்னன் அந்நாட்டை வளம படுத்தக் கடமைப்பட்டவன். வளவனது நாடோ எக்காலத் தும் வற்ருத நீரோட்டத்தினலே பொருந்திய வளப்ப முடைய நாடென்று கூறப்படும் புனல்நாடாம். புனல்நா டென்று கூறப்படுவதற்குக் காரணமாக விருப்பது காவிரி யென்னுங் கன்னிப் பெண்ணும். இக் காவிரியாறு மேற்கே குடகுமலையி லுற்பத்தியாகிக் கிழக்கு நோக்கி யோடுங்கால் வழியில் மலையொன்று தடுப்பது கண்ட சோழனொருவன் அம்மலையை யூடறுத்துக் கொண்டு வந்தனனெனக் கலிங்கத் துப் பரணியும், மூவர் உலாக்களும் கூறும். மணிமேகலையில், காவிரிப்பூம் பட்டினத்தை யாண்ட காந்தமன்[1] என்னு மரசன் கவேர முனிவரை வேண்ட, அவரது அருளால் குண் டிகையினின்றும் வந்த நீரானது ஆருக ஓடக், காவேரி என் னும் பெயர் பெற்றதென்று சொல்லப்படுகிறது. அரக்கனை சூரபதுமனல் இந்திரன் இடருற்றுச் சீகாழிப்பதியிலே ஒளிந் திருந்து, சிவபெருமானை வழிபட்டு வருநாளையிலே, அவன் வைத்த நந்தவனம் நீரின்மையால் வாடுவது கண்டு இரங்கு கையில், தேவவிருடியாகிய நாரதர் தோன்றி வந்த இடரினைத் தையும் களையவல்ல ஐங்கரனை வேண்டும்படி சொல்லிச் சென்றார். அவ்வாறே மகபதியும் வேண்ட, அத்திமுகன் காகவடிவுகொண்டு அகத்தியரது குண்டிகையைக் கவிழ்க்க,

---

1 மணிமேகலையில் 'காந்தமன்' என்று காணப்படினும் பாக வதம் 9-ஆம் கந்தத்தில் குலமுறை கிளத்தும்போது காந்தயன் என்றே காணப்படுகிறது.

அஃது ஆறாகப் பெருகியோடிப் பாய்ந்து பூஞ்சோலையைச் செழிப்பித்தது என்று கந்தபுராணம் கூறும். இக்கூற்றினையே வற்புறுத்துவர் தொல்காப்பிய உரையாசிரியரும். எவ்வாறாயினும் காவிரிப்பாவை குடகக் குவட்டினின்றும் இழிந்து, கீழ் பாலுற்று, இந்நாட்டை எந்நாட்டினுஞ் சிறந்த புனல்நாடாக்கிச் 'சோறுடை சோறுடைத்து' என்பதற்கு இலக்கியமாக்கியது மிக முற்பட்ட காலத்தே யென்பது ஒரு தலை. இக் காவிரியாறு பரந்து சென்றதைக் கண்ட சோழனான கரிகாற்பெருவளத்தான் இதனைச் சிறைப்படுத்தினான். பின்னர் எங்கும் நீர்ப்பெருக்க மின்மையின் அரசனது ஏவற்படி நாட்டினர் கால்பல வெட்டி நீர் எடுத்துச் சென்றனர். இவ்வாறு நீர் நிறைய நாடு செழித்தது. இதனாலே நாடுபடு திரவியமான நெல், கூல முதலியன மிகுதியாக விளைந்தன. விளையவும் இவ்விளைவாயைக் கண்காணித்தற்கு வேண்டிய சாதனங்களைச் செய்ய, அப்பொருளில் ஒருபகுதி அரசர்க்கு இறுக்க வேண்டியதாயிற்று. அவ்வாறு இறுக்கப்படும் பொருளே இறை. அதனைப் பெறுபவனே இறைவன். இறைவன் பெற்ற பொருள் நாட்டின் நன்மைக்காக என்பர் பெரியார். அரசனும் குடியைப்போன்று உழுதுண்டு வாழ்வானாயின் அவனுக்கு வேறு தொழிற்குக் காலமிராது. ஆகவே நாட்டின் லாப லோபங்களைக்காண ஒரு தலைவன் வேண்டும். அவற்குக் குடிகள் உழுது பயிரிடுவதில் ஒரு பங்கு அளிப்பதென்று ஏற்படுத்தினர் முன்னோர். அப்பகுதிதான் ஆறிலொன்றாகும். இதனைத் தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்ற ஐவருக்கும் ஐந்து பகுதி போக மிகுதிப்பட்ட ஒன்று இறையாகும் என்பதா லறிகின்றோம்.

இவ்விறையைக் குறித்து வைக்கும் கணக்கு முன்னாளிலுண்டு. அதற்கு வரிப் புத்தகமென்று பேர். இது பிற்

காலத்துக் கல்வெட்டுக்களாற் றெரிகிறது. இறைவாங்காத நிலங்கட்கு இறையிலி[1] என்று சொல்லப்படும். இறை ஏற்படுத்திய நிலங்களின் கடமையை வாங்க அரசனுக்கு வரித் தண்டற்காரர் உண்டு. விளைவற்றதற்கும், வெள்ளப் பாழ், விதைப்பாழ் முதலியவற்றாலுண்டாய கேட்டிற்கும் இறைதண்டுதல் நெறியாகாது. இது முக்காலத்துக்கும் பொருத்தமானதொரு நீதியாம்.

அரசன் செங்கோலனே, கொடுங்கோலனே என்றறிய இஃது ஒரு துலையாகவிருக்கும். இச்சரித்திர நாயகனாகிய கிள்ளிவளவனும் அங்ஙனமே விளையாமலிருந்த செய்காலுக்கு இறை நீக்கினனென்று புறநானூறு கூறும். வெள்ளைக்குடி என்றோர் ஊர் சோழ நாட்டிலே யுண்டு. அவ்வூரிலே நாகன என்றொரு வேளாளர் இருந்தார். இவர் கல்விமான். உழுதுண்போரைச் சார்ந்தவர். இவரது நன்செய் நிலன் உழுது பயிரிட்டும் பலன் தாராமையாற் பலவாண்டு இறை செலுத்த இயலாதவராயினர். வளவனிடம்சென்று, 'பெரும! சேர, சோழ, பாண்டிய ரென்ற மூவேந்தருள்ளும் அரசென் றற்குச் சிறப்புடையது நினது அரசே; விளங்குஞ் சுடரை யுடைய ஞாயிறு தன்னிடம் விட்டுப் பெயர்ந்து தோன்றினும், சுக்கிரனென்னும் வெள்ளி தென்றிசைக்கட் செல்லினும்[2] அழகிய குளிர்ந்த நீரையுடைய காவிரி யறாது வந்து பல காலாய் ஓடி நீரூட்ட, அதன் பயனாய் வேலினது காட்சியை யொப்ப அசைந்த கண்ணினையுடைய கரும்பினது வெளிய

1. இப்பொழுதும் ஊர்கடோறும் இறவெளி இறையிலி என்ற பேர்களுடைய நன்செய்கள் உண்டு. அவை முன்னாளில் யாதோ ஒரு காரணம் பற்றி இறை நீக்கப்பட்ட நிலமென நன்கறியலாம்.

2. சந்திர சூரியர் தெற்கு வடக்காகச் செல்லினும் என்பது ஒரு முதுமொழி.

பூக்கள் நின்று அசையும் வளப்பமுடைய நாடு நின்னுடைய நாடே. ஆகையால் நான் ஒன்று சொல்வேன், கேட்பாயாக; அறக் கடவுள் பொருந்தி ஆராய்ந்தாற் போன்ற நினது செங் கோலா லாராயும் ஆராய்ச்சியையுடைய நீதியைக் கேட்க வேண்டுங் காலத்துச் செவ்வனே எளியோர் சொல்லைக் கேட்க வேண்டும். வானத்திற் செல்லும் ஞாயிற்றினது ஒளியை மறைக்க எழுந்ததோ நின் வெண் கொற்றக் குடை? அன்று, வருத்தமுற்ற குடியை நிழற் செய்தல் காரணத்தாற் கொள்ளப் பட்டது. வளவ! நின் படை தரும் வெற்றியும் உழுகின்ற கலப்பை நிலத்தின்கண்ணே ஊன்றுசாலினிடத்து விளைந்த நெல்லினது பயன். மழை பெய்யுங் காலத்தே பெய்யா தொழியினும், விளைவு குறையினும், இயல்பல்லாதன மக்களது தொழிலிலே தோன்றினும் காவலரைப் பழித்துரைக்கும் இவ்விடமகன்ற உலகம். இதனை நீ நன்றாக அறிந்தனையாயின், நீயும் குறளை கூறுவாரது உறுதியில்லாத வார்த்தையை உட்கொள்ளாது, ஏரைப் பாதுகாப்பாருடைய குடியைப் பாதுகாத்து, அக்காவலாலே ஏனைக் குடிகளையும் பாதுகாப்பாயாயின் நின் அடியைப் போற்றுவர் நின் பகைவர்" என்று இனிதுரைத்துத் தான் செலுத்த வேண்டிய பழங் கடனாயிருந்த இறையைத் தள்ளிக் கொண்டார்.[1] இவ் வெடுத்துக் காட்டினால் அரசிறைத் தண்டலிருந்தமை வெளி யாகும்.

வேந்தன் எத்துணை நேர்மையுடன் நெறிதவறாது ஆண்டாலும் நெறி பிழைப்பார் இல்லாமற் போவதில்லை. அதனாலன்றோ வள்ளுவப் பெருந்தகையாரும் 'கள்ளாமை', 'வெருவந்த செய்யாமை' முதலாய மறச் செய்கையைச் செய்தலாகாது என்று முழக்குகின்றார். மக்களுட் சிலர் அவை

1. புறநானூறு 35.

யிற்றைத் தவிர்கின்றில ராகலின் மன்னனுவான் அவை நடவாமற் பாதுகாத்தல் வேண்டும். அதற்காக நம் மன்னனும், இரவில் காவலர் ஊர் சுற்றி வருவதற்குற்ற ஏற்பாடுகளைச் செய்திருந்தான்.

குடிகளின் நலனைப் பாதுகாத்தற்பொருட்டும், தம் கீழுள்ள தலைவர்கள் மக்களைத் துன்புறுத்துகின்றனரா என்று காணும்பொருட்டும், அரசியலிற் குறைகளுண்டா வென அறியும்பொருட்டும் தாமே உருமாறி வெளிச்சென்று உலாவுவர் மன்னர். இவனும் அனைதைகட்கு வேண்டுவன புரிதற்குத் தக்கன செய்திருந்தான்.

இவ் வரசன் கோல் கோடாது துலை நாவன்ன சமனிலை யுடையவன். தனது மக்களுள் மூத்தவனை உதய குமரன் என்ற இளவரசன் அவ்வூர்க் கணிகையருள் ஒருத்தியும், சிலப்பதிகாரக் கதாநாயகனை கோவலனுக்குக் காதற் கிழத்தியாகிய மாதவியினிடத்துப் பிறந்தவளுமான மணிமேகலை யென்பாள் இரதி தேவியையும் பின்னிடச் செய்யக் கூடிய வனப்பு வாய்ந்தவளா யிருக்கக் கண்டு, காதற் கடலுளாழ்ந்தான். இதனை யறிந்த மாதவியின் நற்றாய் தனக்கு அரசனது உறவு கிட்டிய தென்றெண்ணி, எவ்வளவு போதித்தும் மணிமேகலை அவர்கள் கருத்துக் கிசைந்தாளல்லள். தவக் கோலமே கொண்டாள். ஒருநாள் அவள் பூங்காவன மெய்திய சமயத்தில், உதயகுமரன் வர, மாதவியின்றாய் அவனிடம் மணிமேகலை பூஞ்சோலையிலுள்ளா ளாகையால் நின் எண்ணம் நிறைவேறற்கு இதுவே தருணமெனக் குறிப்பித்தாள். அரசிளங்குமரன் முன்னரே மையலிற் பட்டவனாகையான் இளமரக்காவிற் புகுந்து அவளைத் தேடினன். அவள் ஆண்டிருந்த பளிக்கறையிற் புகுந்தாள். இளங்கோ அங்குத் தோன்றிய காஞ்சனன் என்னு விஞ்சையனால் வெட்டுண்டிறந்

தான். இதனைக் கேட்ட கிள்ளிவளவன் தன் அமைச்சனும் சோழியவேனுதியை நோக்கி, 'கன்றிறந்த பழிக்குத் தன் மகனையும், மந்திரியின் பழிக்குத் தானும் தேர்க்காலைச் செலுத்தி முறை செய்த மன்னனது வழியில் ஒரு தீவினையாளன் பிறந்தானென்று உலகினர் அறியுமுன்னர் இளங்கோவைப் புறங்காடு அடைவிப்பாயாக' என்றும், 'தவத்தினர் நோன்பும், மடந்தையர் கற்பும் அரசன் காவல் இல்லையாயின் இல்லையாம்; ஆகையான் இதற்குக் காரணியாக விருந்த கணிகை மகளையும் சிறை செய்விப்பாயாக' என்றும், 'நான் செய்யவேண்டிய தண்டனையை விஞ்சையன்செய்துவிட்டான். ஆகையால் அவன் தகவுடையனல்லன்' என்றுஞ் சொற்றனன். இதனுலே தன்மகனென்றும் கருதாது முறைசெய்யு மன்னனென்றால் பிறர் மாட்டு முறை எவ்வாறிருந்திருக்குமென்று ஊகிக்க வேண்டுவதே யன்றி எடுத்து விளக்கவேண்டுவதின்றாம்.[1]

மக்களும் நன்னெறி பிறழாதாரென்பது, அவர்கள் மகாபாதகமென்னும் ஐம்பெருங்கொடுஞ் செயலை வாயினுற்கூடச் சொல்ல அஞ்சி, கோவதை முதலாயின வாக்காலும் கூறப்படாததாய் நிற்றலின், 'ஆன்முலையறுத்த அறனிலோர்க்கும்' என்றும், 'மகளிர் கருச்சிதைத்த' என்றும் மறைமொழிகளாற் கூறுவதனுல் அறியப்படும்[2].

இவ்வரசன் கருவியுங் காலமும், செய்கையும், செய்யும் அருவினையையுமுடைய நல்லறிவு மிகுந்த அமைச்சர்களையும், உற்றநோய் கண்டு அவற்றினைக் களையுந் திட்பமும், அஞ்சாது காக்கும் பெற்றியினையுமுடைய முதியராய பல

1. மணிமேகலை உதயகுமாரனை வாளால் எறிந்த கதை; ஷை. பக்கம் 252.

2. புறம் செ 34.

பெரியாரையும் துணைவராகக் கொண்டிருந்தான். இவனுக்குக் கோவூர் கிழார் என்ற அரசியற்றிறனும் சூழ்ச்சியு மிக்க புலவர் உசாத்துணையாக விருந்து வேண்டுவன புரிந்து இவனது அரசியலை மாண்புபெறச் செய்தனர். இவரையன்றிச் சோழிய ஏனாதி முதலிய நல்லமைச்சர் பலரும் இருந்தனர்.

அந்நாளில் சோழநாட்டுக் குடிகளுள் பெருமையுடையார்க்கு, அரசன், 'ஏனாதி', 'சோழிய ஏனாதி' என்ற பட்டங்களை யளிப்பன். இக்கிள்ளி வளவனது மூத்தோனான நலங்கிள்ளி காலத்தில், 'சோழிய ஏனாதி திருக்குட்டுவன்' என்பான் இருந்தான் என்று 394-ஆம் புறப்பாட்டால் அறிகிறோம். புறம் 167, 'ஏனாதி திருக்கிள்ளி'யின்மேற் பாடப்பட்டது. இதுபோன்ற பட்டங்கள் இன்னும் சில இருந்திருக்க வேண்டுமென்று ஊகிக்கலாம்.

இவனுக்கு, 'மன்னு தொல்புகழ் மருதநீர் நாட்டு வயல் வளந்தர இயல்பின் னளித்துப் பொன்னி நன்னதி மிக்க நீர் பாய்ந்து புணரி தன்னையும் புனிதமாக்குவதாம்' நலஞ் சிறந்து வளமிக்க புகார் முதன்முதல் தலைநகராயிருந்தது. இவன் கோல் கோடாது செங்கோல் நடாத்தி வந்தனனாயினும், இந்திரனுக்கு எடுக்கவேண்டிய விழாக்கோள் தடைப்பட்ட காரணத்தால் ஆழி கரைபுரண்டு ஊரை யழித்தது. அது காரணமாகப் பகைவர் முதலாயினோர் புகுவதற் கஞ்சும் புகாரும் அழிவுற்றது. பின்னர், அரசனது தலைநகர் 'ஊரென்பது உறையூர்' எனப் பெற்ற பீடார் உறந்தையாக மாறிற்று.

இவ்வரசன் தண்ணளி சிறந்து உற்றார் உறவின ரென்று பாராமல் நெறி தவறாது செங்கோ லோச்சியதோடு குடிகளையும் தன்னுயிர் போலோம்பி வந்தானென்பதனை இவ்வியலால் அறிந்தோம்.

---

## 5. வெற்றி மேம்பாடு

'தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
போர்தாங்குந் தன்மை யறிந்து.'

என்றார் பொய்யில் புலவர். பகைவன் ஏதாவது ஓர் இடையூறு செய்யுங் காலத்தேதான் மன்னன் மாற்றானையும் அவன் படையையும் வெல்லவேண்டுமென்று கருதுவது; நன்னெறியிலொழுகும் வேந்தனுக்கு மண்வெளவல் வழக்காறன்று. இடையூறு நேர்ந்துழி பகைவன்மேற் படையெடுத்துச் சென்று அவர்களை யடக்கியாள நினைப்பது அவற்கு இயற்கை. மாற்றானை வெல்வதற்குத் தக்க படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் ஆகிய ஆறு அங்கங்களும் வேந்தற்கு வேண்டும். இவைகளும் தகுதியும், ஆற்றலும் உடையனவா யிருத்தல் வேண்டும். இவ்வாறிருந்தாலன்றி, பகைவரை வெல்லுதலரிது.

நம் வளவனோ, 'என் ஐ முன் நில்லன்மின், தெவ்விர்! பலர் என் ஐ முன்னின்று கன்னின்றவர்' என்று கூறும் திண்மையும், வலியும் நிறைந்த படையினை யுடையவன். இத்தானை ஆண்மையும் வல்லமையும் உடைமைக்குக் காரணமென்? நாட்டின் செழிப்பும், தாய் தந்தையர் தம் மக்களை படையாட்களாக நல்வழியிற் பழக்கியதுமே யாம். அதற்கேற்பத் 'தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்' என்றொரு முதுமொழியு முண்டு. ஒருவன் இளமையில் எவ்வாறு பழகுகிறானோ அதுவே வாழ்நாள் முடியுமட்டும் நீங்காது நிற்குமென்பதாம். இவ்வுண்மையை யறிந்த தாய்மார் அந்நாளில், மக்களை ஈன்று புறந்தருதல் தங் கடனாகு

மென்றும், அவனைச் சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனும் என்றுங் கூறிவந்தனர். தாய்மார்களில் ஒருத்தி தன் மகன் போர்முனையில் இறந்துபட்டானென்று கேட்டபோது, அவன் போர் முனையில் புறங்காட்டாது, பகைவரை எதிர்த்துநின்று இறந்துபட்டானென்று கேட்ட என் மனம் மகிழ்ச்சி யடைகின்றது; இதனைக்கூறாது புறங்காட்டி ஓடினானென்று கூறியிருப்பீராயின் அவனுக்குப் பால் கொடுத்து வளர்த்த இந்த மார்பை அறுத்தெறிவேன்' என்று கூறினாளென்று நூல்கள் கூறுகின்றன. அப்படிப்பட்ட தாய்மாரை இப்பொழுது காண்போமா ?

மக்களை நல்வழிப் படுத்துங் காரியம் முதலில் தாய்மாரிடத்திலேயே இருந்திருக்கின்றது. நம் நாட்டில் தாய்மாருக்கே மிக்க பெருமை கொடுக்கப்பட்டிருக்கிறது. வீட்டிற்குள் நுழைவோமானால் அங்குத் தலைமை வகித்து நடத்துபவள் தாயே. இதனாலேயே அவள் வீட்டிற்குடையவள் என்று பொருள்படும் இல்லாள் என்று அழைக்கப்பட்டு வருகிறாள். தாய்மார் தம் மக்களை நல்வழிக்குக் கொண்டு வந்தாலும் கொண்டுவர முடியும்; தீயவழிக்குத் திருப்பி விட்டாலும் திருப்பிவிடலாம். எல்லாவற்றிற்கும் பிள்ளைகள் தங்கள் தாயின முகத்தை நோக்கியே நிற்பர். அத்தாய் தெய்வபக்தி யுடையவளாய், நன்னெறியில் நடப்பவளாய், தன் கணவன்சொற் றவறாதவளாய் இன்சொல், அருள், அடக்கம், தயை முதலாய நற்குணங்க ளமைந்தவளாயிருப்பின், அவள் பெற்றெடுத்து வளர்த்த பிள்ளைகளும் நல்வழியில் நின்று மேன்மைபெற்று வாழ்வர். அப்படிக்கில்லாமல் தாய்மார் ஒழுக்கங் குன்றியவர்களாயின் மக்களும் அவ்வாறே யாவர். இதற்குக் கண்கூடாகச் சிலர் கல்வியழகு வாய்ந்து நன்னடக்கை யுடையாராயிருக்கவும், பலர் அங்ஙன

மின்றி ஒழுக்கக் குறைவினராய்ப் பொலிவிழந்து நிற்கவும் காண்கின்றோம்.

இனி, முற்கூறியாங்கு வலியமைந்த காளையர்க்கு, வயதுவந்த காலத்தில், நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனென்றார் புலவர் ஒருவர். வேந்தனே தன்னாட்டு மக்களை நல்வழிப்படுத்தி அவர்கட்கு நாட்டினிடத்துப் பற்று உண்டாகும்படி செய்யக் கூடியவன். அவன் அச்செயலை மறப்பானாயின், நாடு பிறர்வசமாகி அவர்களால் துன்புற்று அழியும். காவலன் அஞ்சாத வீரனும் செங்கோலனும் தண்ணளியனும் இருப்பானாகில் கோல் நோக்கி வாழும் தன் நாட்டு மக்களைச் சான்றோராக்க வியலுமென்பது தேற்றம். இதனை உண்மையாக்கி நின்றான் நமது கிள்ளியும. அவன்நாட்டு மக்களும் வீரரும் அவன்வழி நின்றனர். அவர்கள் அவன் வழி நின்றமையானே அவன் சென்ற போரிலெல்லாம் வெற்றி யுடையவனாகவே திரும்பினான். இவனது முன்னோனான நலங்கிள்ளியின் ஆட்சியிலே இவர்களோடு பகைத்து, இவர்கள் ஏவல் வழி நில்லாத தாயத்தார் பலராவார். இவர்களில் ஒருவனான நெடுங்கிள்ளியை ஆவூர் முதலான இடங்களில் முற்றுகையிட்டு அடக்கினான் என்று முன்னர் கோவூர்கிழார் சரித்திரத்தில் கூறினேன். நெடுங்கிள்ளி பின்னும் நாட்டில் கலகமுண்டாக்கிச் சேர பாண்டியர்களைத் தனக்குத் துணையாகக் கொண்டான். இவர்களையெல்லாம் காரியாறு என்னுமிடத்தில் ஒரு பெரும் போர் நடாத்தி யறவே தொலைத்தான். இதனை மணிமேகலை,

எஞ்சா மண்ணசைஇ யிகலுளம் துரப்ப
வஞ்சியி னிருந்து வஞ்சி சூடி
முறஞ்செவி யானையும் தேரும் மாவும்
மறங்கெழு நெடுவாள் வயவரு மிடைந்த

தலைநகர்ச் சேனையொடு மலைத்துத் தலைவந்தோர்
சிலைக்கயல் நெடுங்கொடி செருவேற் றடக்கை
ஆர்புனை தெரியல் இளங்கோன் 'தன்னால்
காரியாற்றுக்[1] கொண்ட காவல் வெண்குடை
வலிகெழு தடக்கை மாவண் கிள்ளி'

(மணிமேகலை 19;-வரி 114-127)

என்று கூறும்.

இவன் கருவூரை முற்றுகையிட்டுப் பகைவன் அஞ்சி ஒடுங்குமாறு தாக்கினான். அப்போது கோவூர் கிழார் என்ற புலவர் அரசனை விளித்து, 'நரியும் பேய்களும் நினது பகைவனது சேனையைக் கொள்ளை கொள்வதைக்கண்டும் இன்னுமோ நீ ஈண்டு முற்றுகையிட்டுப் போர்செய்ய வேண்டும்'[2], என்று சொல்லி முற்றுகையை விலக்கினார்.

1 இக் காரியாறு, திருக்காளத்திக்குப் பக்கத்திலுள்ள திருக் காரிகரையாக இருக்கலாமென்று டாக்டர் கிருஷ்ணசாமி ஐயங்காரவர்கள் தமது மணிமேகலை என்னும் நூலில் கூறுவர். மற்றொரு சாரார் சேலம் ஜில்லாவில் உற்பத்தியாகி காவிரியொடு கலக்கும் ஒரு சிற்றாறு என்றும், அதனைச் சில்லாப்படத்திற் காணலாமென்றும் கூறுவர்.

2. புறம் செ 337. இச் செய்யுள் குராப்பள்ளி துஞ்சிய கிள்ளிவளவன்மேல் பாடப்பட்டதாகக் காணப்படுகிறது. குராப்பள்ளி துஞ்சியவன் திருமாவளவன் என்றுஒருவன். இவனைக் கரிகாலனென்பர்; இந்தக் கரிகாலனுக்குப் பிற்பட்டவராகக் கோவூர் கிழார் எண்ணப்படுவதால், இப் புலவர் திருமாவளவனை 'கரிகாலனைப் பாடியிருக்க இயலாது. கிள்ளி என்ற பேருடையார் பலர் இருந்தாலும், கிள்ளிவளவன் என்ற பேரைத் தாங்கியவர் இவனைத் தவிர வேறு ஒருவரும் இல்லை. ஆகவே குராப்பள்ளி என்பது குளமுற்றமாக இருக்கவேண்டும்.

மற்றொரு சமயம், சேரமன்னன் மற்றொருவனோடு போர் குறித்துச் சென்று கருவூரை முற்றினன். சேரன் இவனது வீரத்துக்கு அஞ்சிக் கோட்டைக்குள் தங்கினன். அதனு லுண்டாகுந் துன்பங்களைக் கண்டு, படையொடு சென்ற ஆலத்தூர் கிழார், கிள்ளிவளவனை நோக்கி, 'அரசே! சிலம் பினையும் சிறிய தொடியினையுமுடைய மகளிர் கழங்கு விளை யாடும் அணிமையையுடைய அமராவதி (ஆன்பொருந்தம்) ஆற்றிலுள்ள மணல் சிதறும்படி காவல் மரங்களை வெட்டும் ஓசை தனது கோயிற்கண்ணே சென்று ஒலிப்பவும், அவ் விடத்து வெட்கமின்றி மானம் விட்டுக் கவலையற்று இனி தாகவிருக்கும் வேந்தனுடன் நீ பொருதா யென்பது கேட் டார் நாணுந்தகைமையுடைத்து; அவனைக் கொல்வதால் உண்டாகும் பெருமையையும் விடுவதால் விளையும் பெருமை யையும் நீயே யறிகுவை'[1] என்று கூறிப் போரை விலக்கினர்.

இக்கருவூர்ப் போரொன்றைக் கண்ட மாறோக்கத்து நப் பசலையார் என்பார், 'உயர்ந்த எல்லையளந் தறியப்படாத பொன் படுகின்ற நெடிய சிகரங்களையுடைய இமய மலையின் கண் சூட்டப்பட்ட காவலாகிய விற்பொறியையும், மாட்சி மைப்பட்ட தொழில் பொருந்திய தேரையுமுடைய சேர னழிய அவனது அழிவில்லாத கருவூரை யழிக்கும் நினது பெருமை பொருந்திய வலிய தாள்'[2] என்று கூறினர். இவற்றாலே தனது நாட்டை அடுத்த சேர பாண்டியர்கட்கு ஓர் ஏறுபோலிருந்து அரசாண்ட வளவன் வென்றி மேம் பாட்டின் திறமெல்லாம் விளக்கமாகின்றன.

---

1 புறம். செ - 36. 2 ஷை 37.

## 6. கொடைமடம்

ஒருவனிடஞ் சென்று பல்லைக் காட்டிப் பருவரல் முகத்திற் கூட்டி இரக்காம லிருக்கும்படி யீதலே ஈகை யென்பதனை,

> 'இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்
> குலமுடையான் கண்ணே யுள.'

என்பதனால் ஆசிரியர் திருவள்ளுவர் தெரிவித்தார். அந்த ஈகை பலதிறப்படும். ஆயினும், அதனை முக்கியமாக மூவகையுள் அடக்கலாம். இலக்கண நூலார் ஈ, தா, கொடு என்று பிரித்து, முறையே இழிந்தோன், ஒப்போன், மிக்கோன் இரப்புரை என்பர். அதாவது கேட்பவன் கொடுப்பவனை விட மிக்கோனாயிருந்தக்கால் அவனால் பேசப்படுஞ் சொல் இன்னதெனச் சுட்ட இவை யெழுந்தனவாம்.

இச்சொற்களாலே அரசனாயினும் ஆண்டியாயினும் முட்டுப்பாடு யாவர்க்கும் பொதுவான தென்பது ஒரு தலையாகிறது. ஆயினும் ஒருவன் தனது அங்கமெலாங் குறுக்கியொடுக்கி முகத்திலே மகிழ்ச்சியற்றுப் புலர்ந்து மனநொந்து பெரியான் ஒருவனைக் கிட்டி மெல்லிய குரலினால் தனது இலம்பாட்டைக்கூறி யிரந்து பெறுவதையே இரத்தல் என்பர். அத்தகையோர்க்குக் கொடுத்தலையே ஈகை என்பர். ஒத்த பண்பினையுடையாரிருவர் ஒருவர்க் கொருவரைக் கொடுக்கும்படி கேட்பதற்கு ஓரெழுத்தொரு மொழியாகிய தா என்பது சொல்லப்படும். கொடு என்பது மிக்கோனுரை யென்பர். இச்சொல்லைச் சொல்லும்போதே கட்டளை யிடுவதுபோல் தொனிப்பதை காணலாம். ஒருவன் பிறனொரு

வனைப் பார்த்து அவர்க்கு இதனை நீ அளியென்று ஏவுதற் கண் அமைந்து நிற்றலைக்காண்க. அரசர் முதலாயினோர் தாமே யொரு காரியத்தைச் செய்தல் இயல்பல்லவாகலான் இச்சொல் அவர்மாட்டு நின்றது என்று கூறவேண்டி யிருக் கிறது. முன்னோர் ஒவ்வொரு சொல்லும் இன்ன இன்ன காலத்து வழங்கற்குரியதெனப் பாகுபாடு செய்து அமைத் தனராயினும், முற்காலத்துத்தானே, தா, கொடு என்ற ஓரெழுத் தொருமொழியும், ஈரெழுத் தொருமொழியும் தம்முள் வழு அமைதியாக மயங்கி வழங்கின. ஈ என்பதற் குக்கொடு என்பது பரியாயப் பெயராகையால் அது தொழிற் பெயராகக் கோடை என்பதாயிற்று.

இக்கொடையையும் நான்குவகை யாக்குவர். இதனை ஒரு புலவர்பெருந்தகை வெகு அழகாக வர்ணிக்கின்றார். பொரு ளுடையான் ஒருவனை இலம்பாடுற்றவன் சென்று கேளாமலே, அவ்வேழையின் முட்டுப்பாடறிந்து கொடுப்பது தாளாண் மை யென்றும்; ஒருவரிடம் சென்று தன் குறையைக் கூறிய பின்னர், அவனே பின்னரும் அந்நோயால் வருந்தி வேறொரு பசிப்பிணி மருத்துவனை நாடாதபடி ஈதலே வண்மை யென்றும்; ஒரு காரியத்திற்காகப் பலதரஞ் சென்று முடித் துக் கொள்ளுதலைக் காற்கூலி யென்றும்; அவ்வாறு சென் றுங் கொடாததைக் கூறுவதற்கில்லை யாகையான் ஈயான் கொடை யென்றுஞ் சுட்டிக் கூறினர். ஒருவனது இல்லா மையைத் தெரிவிக்காவிட்டால் அவனுக்கு இலம்பாடுண் டென்று நாம் எங்ஙன மறிந்துகொள்ள முடியுமென்று சிலர் வினவலாம். 'அகத்தினழகு முகத்திலே தெரியும்' என்னும் முதுமொழிப்படி அவனுடைய உளத்திலே தோன்றுவன வற்றை அவனுடைய முகம் அறிவிக்கு மன்றோ? முகமண் டலம் இருக்கும் நேர்மையைக் கொண்டு ஒருவன் உவகை,

அச்சம், வெகுளி, இளிவரல் முதலான உணர்ச்சிகளை யுடையா னென்று கூறுதல் எளிது. இவற்றிற்குரிய மெய்ப்பாட்டின் விரிவைத் தொல்காப்பியம் முதலிய பழந்தமிழ் நூல்களிற் பரக்கக் காணலாம். இவ்வாறு ஒருவனிடம் தென்படும் இலம்பாடு, வறுமை முதலியவற்றை எளிதில் தந்திரமாக நீக்கவியலும். இதனாலேயே ஆசிரியர் திருவள்ளுவனாரும்,

'கண்ணோட்டத் துள்ள துலகியல் அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை.'

என்று கூறியதென்க.

இனி, மக்கள் தங்குறைகளைப் பிறர்மாட்டுக் கூறுவாரோ என்றும், தன்மதிப் புடையா னொருவனும் அவ்வாறு செய்யானென்றும், அதனிலும் ஒருவன் வறுமை நோயின் வாய்ப்பட்டுழலுங்கால் எட்டுணையுந் தன்னிலையைப் பிறர்க் குக் கூற முற்படா னென்றுஞ் சொல்வர். அஃதொருவா றுண்மையே யாயினும், இக்காலத்து, அற்பக் காரியமாயி னும், அதனை மிகைப்படுத்திக் கூறுவாரைக் காண்கின்றோம். அஃதேபோன்று அக்காலத்து மிருந்திருக்கக் கூடும். இக் காலத்தைப் போலப் பலர் இருந்திராவிடினும் ஒரு சிலரேனும் இருந்திருப்பர். அன்னார் தங் குறையை வெளியிட்டு வேண்டுவனவற்றைப் பெறுதல் தகுதியேயாம். அன்றியும் ஈண்டுக் கூறியதெல்லாம் இரப்போனை யன்று, ஈவோனையே யாம். ஈவோன் தன்னிடம் வேண்டுவன பெற்று னொருவன் பின்னரும் வேறோரிடத்துச் சென்று இரத்தல் தகா தென்ப தையே குறிப்பதாகக் கொள்ளவேண்டுமாகலின், நம் சரித் திர நாயகனான வளவனும் 'குறிப்பறிந்து ஈதலே கொடை' என்பதை யறிந்து வறுமைப் பிணியை நீக்கும் மருத்து வரில் முதலில் வைத்தெண்ணுந் தகுதி பெற்றவன்.

கோவூர் கிழார் என்ற புலவர் பெருமான் பரிசில் பெற வரும் பாணனொருவனை நோக்கிக் கூறுமுகமாக இவனது கொடையைச் சிறப்பித்துள்ளார். அதன் பொருட் சுவையைக் கவனிக்குமாறு ஈண்டுக் குறிக்கின்றேன். 'தேன்போல இனிய நரம்புத் தொடை பொருந்திய சிறிய யாழையுடைய பாணனே! யான் அடிக்கும் உடுக்கையினது ஓசை மிக்க இனிமையை யுடையது; அதனைக் கேட்டுச் செல்வீராக என்று விளிக்கும் இரவலனே! கொள்ளக் கொள்ளத் தொலையாத சோற்றையுடைய அகன்ற நகரிடத்து அடுநெருப் பல்லது சுடுநெருப் பறியாது, சோற்றையும், தண்ணீரையும் விளைக்கும் நல்ல நாட்டுக்கு வேந்தனான கிள்ளிவளவனிடத்து, அவன் புகழை நினைத்து, பாதிரிப்பூ நாறும் மயிரினையும் இனிய முறுவலையுமுடைய நினது விறலியுடனே மெல்லமெல்ல நடந்து செல்வையாயின், விறலைக் காட்டினின்றும் ஊரகத்துக்கொண்டு "சென்று விற்கும் மாந்தர் அக் காட்டகத்துப் பொன் பெற்றாற்" போன்ற செல்வத்தைப் பெறுவை'[1] என்று கூறி மகிழ்கின்றார்.

மற்றொரு புலவரை நோக்கி 'எந்நாட்டினர், எங்குள்ளீர்' என்று கேட்டபோது அவர் இறுத்த விடையைக் காண்மின். 'மலையை யொத்த இளங்களிற்றின் மேலே ஆகாயத்தைத் தடவுஞ் செய்கையுடையனபோல விரவின பல நிறத்தை யுடையனவாகிய கொடிகள் அசைந்து தோன்றும் பாந்த படையையுடைய விறல் வேந்தே! நீ முனிந்து பார்க்குமிடம் தீப்பற்றி எரிய, நீ அருளிப் பார்க்குமிடம் பொன் பொலிய, செஞ்ஞாயிற்றின் கண்ணே நிலவு வேண்டினும், வெண்டிங்களின் கண்ணே வெய்யிலுண்டாக வேண்டினும் நீ வேண்டிய பொருளை யுண்டாக்கும் வலியுடையையாகலின், இனிய

---

1. புறம் - செ 70.

நிலையையுடைய கற்பக நாட்டிலுள்ளார் இன்பமொன்றையே பெறுதலின், செல்வமுடையார் வறியோர்க்கு வழங்குதலும், வறியோர் செல்வமுடையார்பாற் சென்று இரத்தலுமாகிய செய்கைகள் ஆண்டுச் செய்யக் கடவன அல்லவாகலானும், ஆண்டு நுகரும் நுகர்ச்சி ஈண்டும் கூடுமாகலானும், பரிசிலர் நினது நாட்டை விரும்புவதல்லது தேவருலகை விரும்பார். பகைவர்நாட்டிலுள்ள பரிசிலரும் நினது நாட்டில் நீ உள்ளாய் என்பதனைக் கருதி நின் நாட்டிற்கு வருவர் என்று கூறுகின்றார்.

நல்லிறையனார் என்ற மற்றொரு புலவர் அவனிடம் சென்று, 'வயிறு நிறைய உண்டு கை கழுவுதலை மறந்த என்னுடைய பல பெரிய சுற்றத்தை மிகவும் துன்புறுத்துகின்ற வறுமைநோய் தீரும்படி, கோடைப் பருத்திப் பஞ்சுபோன்ற வெண்ணிணம் மூடிய பெருந் துண்டங்களைக் கொடுத்து, எனது பழைய கிழிந்த துணியை நீக்கி, பகன்றைப் பூவைப் போன்ற, மெல்லிய அகன்ற மடிகளையுடைய ஆடையையும் கட்டி, செல்வமும் இனிக் கேடின்று என்று கூறும் வண்ணம் நல்குவாயாக[2]' என்று பாடுகின்றார்.

மேற்கூறியவற்றினின்றும் வளவன், வந்த பரிசிலர் பலரையும் முகமன் கூறி, ஏற்று, இடுக்கண் களைந்து வேண்டுவன முட்டின்றிப் பெறும்படி கொடுத்த **கோடைமடம் பட்டவன்** ஆவான்.

---

1. புறம். செ 38.　　2. புறம். செ 393.

# 7. சரித்திரம்

கிள்ளி வளவனைப்பற்றிப் புறநானூற்றால் அறியப்படு வனவன்றி வேறு நூல்களாலும் சில செய்திகள் அறியக் கிடக்கின்றன. அவற்றுள், சிலப்பதிகாரத்திலே வஞ்சிக் காண்டம் நீர்ப்படைக்காதையில், கங்கைக்கரையில் வீற்றிருந்த சேரன் செங்குட்டுவனைக் கண்ட மாடலன் என்னும் அந்தணன், மதுரையில், பாண்டியன் நெடுஞ் செழியன் கோவலனைக் கொல்லக் கட்டளையிட்டு, அது பிழையென வுணர்ந்து, உயிர்துறந்தபின் நடந்தவை இவையெனக் கூறு கின்றான். கூறு முன்னர், செங்குட்டுவனைப் பார்த்து, 'நின் மைத்துனனான கிள்ளிவளவனொடு பொருந்தாத ஒத்த பண்பினர் ஒன்பது மன்னர், இளவரசு பொறாஅர், ஏவல் கேளார், வளநாடழிக்கும் மாண்பினராதலின, ஒன்பது குடையும் ஒருபக லொழித்து, அவன் பொன்புனை திகிரி யொருவழிப் படுத்தோய்'[1] என விளிக்கின்றான்.

வணிகர்க்குப் பெருமானாக விளங்கிய கோவலன், கானல் வரிப் பாட்டின் பொருளினால் மனம் வேறுபட்டு மாதவியைத் துறந்து, தனது இல்லக் கிழத்தியோடு மதுரைமா நகரடைந்து, பொற்கொல்லர் தலைவனது சூழ்ச்சியால் வெட்டுண்டிறந்தா னென்று கேட்ட மாதவி, அகில் முதலாய புகை யூட்டிச்சிக்கறுத்து நறுமணம் நாறும் புரிகுழலைக் களைந்தாள்; அதனோடு தனது காதற் பெருக்காகத் தோன்றிய மகளாம் மணிமேகலையையும், தான் தோன்றிய குலத்தின் வழிநிற்க விரும்பாது அறங்கேட்டு நல்வழியில் நிறுத்தலை விரும்பினாள். மாதவியின் நற்றாயோ, அவள் குலத்தொழிலை மேற்கொள வேண்டுமென வற்புறுத்தி வந்தாள். இவ்வாறு நிகழ்ந்து

---

1 வரி 119-123.

வருங்காலத்து, வளமெலாம் ஒருங்கேயுடைய புகார்மன்ன னும் கிள்ளிவளவனது மைந்தன், உதயகுமரன் என்பான் மணிமேகலையினது பேரெழிலைக் கேட்டு அவள்பால் விருப் புற்றான்; அவளை நேரிற் கண்டான்; தன்வசம் இழந்தான். இச் செய்தியைக் கேட்ட மாதவியின் நற்றாய், தனக்கு நற் காலம் கிட்டியதென்றெண்ணி, எவ்வாற்றானும் அரசகுமா னுக்கு மணிமேகலையை அறிமுகம்செய்விக்க முயன்றனள். ஒருநாள் அவன் தேரூர்ந்து வருங்கால், நற்றாய் மணிமேகலை யைக் காட்டலும், உதயகுமரன் அவளைப் பின்றொடர்ந்து சென்று உபவனஞ் சேர்ந்ததும், மணிமேகலை பளிக்கறையிற் புகுந்ததும், உதயகுமரன் விஞ்சையன் வாளுக்கு இரையான தும் மணிமேகலையிற் கண்ட செய்தியென்பது முன்னரே குறிக்கப்பட்டுளது. அக்காலத்தே, கிள்ளிவளவன் செய்த முறைமையும் அறிந்த செய்தியேயாம்.

சீர்காழிப்பதிக்குக் கிழக்கே தென் திருமுல்லைவாயில் என்றொரு திருப்பதி யுண்டு. அந்தப் பதியானது நமது கிள்ளிவளவன் காலேத்திலே காடு சூழ்ந்த நிலமாயிருந்தது. இப்பொழுதும் அதனை யடுத்துக் காடுண்டு. அந்தக் காட் டில் வேட்டையாட நமது கிள்ளிவளவன் சென்றான். சென் றவன் காட்டினுள்ளே வெகுதூரம் செல்ல, அவ்விடத்தில் முல்லைக்கொடி வளவன் குதிரையைத் தடுத்தது. வளவன் ஊர்ந்து சென்ற குதிரையை விட்டிழிந்து பார்க்கையில், அங்கொரு சிவலிங்கம் தோன்றிற்று. அவ்வளவில் அவன் அன்பினால் இழுக்கப்பட்டு, அவ்விடத்திற் கண்ட சிவபெரு மானுக்கு ஆலயம் எடுப்பித்து, நித்திய நைமித்திகங்கட்கு வேண்டுவன புரிந்தான் என்று கூறும் தென் திருமுல்லை வாயிற் புராணம்.

# 8. காலம்

இக்காலத்தில், முன்னோர் ஒருவரைப் பற்றிப் பேசுவோமானால் அவர் எப்பொழுது வாழ்ந்திருந்தாரென்று கேட்பது இயற்கையாகி விட்டது. ஆங்கிலக் கல்வி நம் நாட்டில் புகுமுன், 'ஒருவன் முன்னாளில் வாழ்ந்து வந்தான்' என்று ஒருவர் கூறுவாரானால், கேட்போர், இங்குக் கூறிய முன்னாள் யாது என்று விசாரிப்பதில்லை. இது கூர்த்த அறிவின்பாற் படாதென்றே கூறலாம். இதனாலேயே முன்னோர் நூல்களிலெல்லாம், 'முன்னொரு காலத்தில்' என்று காணப்படுவது வழக்கமாயிற்று.

'முன்னொரு காலத்தில்' என்று கூறியது போதாதோ; அதனோடமையலாகாதோ; ஈண்டு நமக்கு வேண்டுவது, சொல்லும் பொருளுமே யொழிய, காலம் எதற்காக என்று சிலர் கேட்பது உண்டு. முன்னாளிலுள்ள நமது பழந்தமிழ் மக்கள் பொரு ளாராய்ச்சியிலும், சொல்லாராய்ச்சியிலும், சொற்சுவையிலும், பொருட்சுவையிலும் இன்புற்று மூழ்கியிருந்தனர் என்பது உண்மையே. அவர்கள் பொருளிலாழ்ந்து கிடந்தமைபற்றி மற்றொன்றையுங் கவனித்திலர். அந்நாளில் அரசர் பலர் சிறப்போடு வாழ்ந்தமையின் அவர்களது திருவோலக்கச் சிறப்பையும், மற்றவற்றையும் அகக்கண்ணால் மனத்தே யுட்கொண்டு, பிறருக்கு எடுத்துக்கூறும் திறமையும் வாய்ந்திருந்தனர். புத்தகமலிந்த இந்நாளில் ஆசானுதவி சிறிதளவுகொண்டு மற்றவற்றைத் தானே உணர வேண்டுமென்ற கொள்கையால், அப்பொழுதைய நிலை இவ்வாறிருந்ததென்று ஊகிக்க ஒருவனது வாழ்நாளின் பொழுது இதுவெனத் திட்டமாய்த் தெரிய வேண்டி யிருக்கிறது. இதனாலடையும் பயன் யாதென வினவுவீராயின், அந்நாளில் நாட்டிலுள்ளார் வாழ்ந்து வந்த நிலைமை, பெருமை, சிறப்பு

முதலியவற்றோடு, இந்நாளில் உள்ள நமது நிலைமை, பெருமை சிறப்பு முதலியவற்றை ஒப்பிட்டு, உள்ள ஏற்றத் தாழ்வுகளைக் கண்டு, நமது முன்னோர் நிலையின் அடிச்சுவடுகளைப் பின் பற்ற அஃது ஒரு தூண்டுகோலாகுமென்பதேயாம். ஆதலினால், நமது தலைவனான கிள்ளிவளவன் வாழ்ந்த நாளும் இதுவென ஆராய்தல் நமது கடமையாம்.

முன்னுரையில் வளவனது வமிசாவளி காட்டப்பட்டிருக்கிறது. இவனது தந்தை பெருந்திருமாவளன் என்று சிறப்புப்பெயர் பெற்ற கரிகாலன் என்பர். இவனைக் கடைச் சங்க நாளில் வாழ்ந்தவனென்றுங் கூறுவர். '1800 ஆண்டுகட்கு முந்திய தமிழர்' என்னும் நூலுடையார் கரிகாலன் கி. பி. 50 முதல் 95 வரை யாண்டனனென்று கூறுவர்.

சென்னை இராசாங்கத்துக் கையெழுத்துப் [1]புத்தக சாலைப்பட்டி ஒன்றில் R 343 B எண்ணில், காவேரியாற்றுக் கல்லணை கட்டியது[2] என்ற தலைப்பின் கீழ், கரிகாலன் பிறப்பைப்பற்றிக் கூறிய செய்யுள் ஒன்று காணப்படுகிறது. அச் செய்யுள்,

'தொக்க கலியின் தொளாயிரத்துத் தொண்ணூற்றில்
மிக்க கரிகால வேந்துதித்துப் — பக்கம்
அலைக்குந் திரைப்பொன்னி யாறுகரை கண்டான்
மலைக்குநே ரானபுய மன்.'

---

1. Triennial Catalogue of Mss. From 1916-17 1918-19.

2. 18 ஆம் நூற்றாண்டி லிருந்த கர்னல் மெக்கன்ஸி என்பவர் பல நூல்களைச் சேகரித்திருந்தார். அரசாங்கத்தார் அவற்றிற்கு ஒரு புத்தகப்பட்டி எழுதி, தென்னாடு சம்பந்தமான நூல்களைச் சென்னை கையெழுத்துச் சாலைக்குக் கொடுத்துவிட்டனர். அவற்றுள்ளே இந்நூலும் காணப்படுகிறது.

என்பதாம். இந்தப் புத்தகப் பட்டிக்கு ஆதாரமா யிருக்கும் மூல புத்தகத்தைப் பார்க்கும்போது, இதன் கீழ்,

'அஞ்சில் முடிகவித் தைம்பத்து மூன்றளவில்
கஞ்சுகா வேரி கரைகண்டு — தஞ்சையிலே
எண்பத்து மூன்றளவு மாண்டே யினிதிருந்தான்
விண்ணிற் றனிப்புக்கான் வேந்து[1]

என்ற செய்யுள் காணப்படுகிறது. ஆனால் சோழ மண்டல சதகம் முப்பத்தெட்டாம் செய்யுட்கு மேற்கோளாகக் காட்டப்பட்ட இதே செய்யுளில், 'தொக்க கலியின்மூ வாயிரத் துத் தொண்ணூற்றில்' என்று காணப்படுகிறது. இப் பாட பேதம் ஒருவாறு செம்மையுடையதாகக் கொள்ளலாம்.

கிறிஸ்து நூற்றாண்டானது கலியுக ஆண்டு 3101ல் பிறந்திருக்கிறது. கரிகாலன் பிறந்ததாகக் கூறுவது கலி 3090 ஆகையால், இவன் கிறிஸ்தாப்தம் உண்டாவதற்கு 11 ஆண்டு முன்னர்ப் பிறந்தான் என்றாகும். கலி 3090-டு பதினோராண்டு சேர்த்தால் கிறிஸ்து ஆப்தம் கிடைக்கும். இரண்டாஞ் செய்யுளின்படி, இவன் தனது ஐந்தாம் ஆண்டில் பட்ட மெய்தி, 83 ஆம் ஆண்டில் விண்புக்கானுனல், இவனது ஆட்சி கி. பி. 72 வரையில் இருந்தது என்று முடியும். இவ் வாண்டு கனகசபைப் பிள்ளை கூறிய ஆண்டுடன் ஒருவாறு

---

1. இச் செய்யுள் மிக்க பிழையுடன் காணப்பட்டமையின் பொருள்திரியாது இவ்வாறு திருத்தப்பட்டது. இப்பாட்டு, சென்னைக் கையெழுத்துப் புத்தகசாலைப் பிரதியில் காணுமாறு:

அஞ்சிலே முடிகவித்து அன்பத்தி மூண்டளவில்
கஞ்சுகா வேரி கரைகண்டு — தஞ்சையிலே
எண்பத்தி மூண்டளவும் ரீரிரண்டுந் தானிருந்தான்
விண்புக்கான்—தனிபுக்கான் வேந்து.

ஒற்றுமை யுடையதாகக் காணப்படுதலின், இச் செய்யுள்கள் உண்மையுடையன என்றும், இவனது ஆட்சிக் காலமும் இதுவேயாகுமென்றும் ஒருவாறு ஊகிக்கலாம்.

இவ்வாறன்றி, முற்காட்டிய, 'தொக்ககலியின்' என்ற செய்யுட்கு, 'தொக்கசகனிற் றொளாயிரத்துத் தொண்ணூற் றின்' என்றொரு பாடபேதமுண்டென்று காட்டுவர் சிலர். சக ஆண்டு, கி. பி. 78 முதலும், கலி 3179 முதற்கொண்டும் கணக்கிடப் பட்டுவருகிறது. சகம் என்பது சாலிவாகன சகாப்தத்தின் சுருக்கம். தொளாயிரத்துத் தொண்ணூறோடு 78 ஆண்டைக் கூட்ட கி. பி. 1068 ஆகும். இவ்வாண்டில் சோழவரசனு யிருந்தவன் வீரராஜேந்திர தேவன் என்பான். இவன் காலத்திற்கு வெகுநாள் முன்னரே காவேரிக்குக் கரை கட்டப்பட் டிருக்கிறது. அன்றியும் இச்செய்யுள் காணப் படும் நூலிலேயே, அந்த அரசன் எழுபத்தெட்டியாண்டு ஆண்டானென்ற பாட்டும் உள்ளதாகக் காட்டப்பட்டது. வீரராஜேந்திரன் சில வாண்டுகளே யாண்டனனென்பதற்குப் போதிய ஆதாரங்கள் உண்டு. ஆதலின், இச்செய்யுளிற் காணப்படும் சகவாண்டு பொருத்தமற்றதென்பது செந் தமிழ்ப் பத்திரிகையில்[1] தடை விடைகளோடு விளக்கப் பட்டிருக்கிறது. ஆகவே இப்பாட பேதம் பொருந்தாத தொன்றாம்.

இக்கரிகாலனது காலத்தை உறுதிப்படுத்த மற்றொரு சான்றாக நிற்பது இவனது வடநாட்டு யாத்திரை. இவ்வரசன் மற்றைய சேர பாண்டியர்களை வென்றதோடு நிற்காமல், இமய மலையில் தங்குலத்திற்கு அறிகுறியான புலி முத்திரை யைப் பொறித்தானென்றும், முத்துப் பந்தரும், பட்டி

1. செந்தமிழ் தொகுதி. XXII

மண்டபமும் வட நாட்டில் பெற்றனென்றும் சிலப்பதிகாரம் கூறும். இவ்வாறு இவன் செய்ய வடநாடு இடம் தந்திருக்குமோ என்னும் வினாவை யெழுப்பி, அந்நாடு, கி. மு. 208 முதல் 184-க்குள்ளும், கி. மு. 148 முதல் கி. பி. முதல் நூற்றாண்டுக்குள்ளும், கி. பி. மூன்றாம் நூற்றாண்டிலுமே பேரரசர் அற்று இருந்தமையால், தென்னாட்டார் படையெடுத்துச் சென்று வெற்றிபெற்றிருக்கக் கூடுமென்றும், பின் வந்த சேரன் செங்குட்டுவன் பத்தினிக் கடவுள் கோட்டம் சமைத்த பிறகு, வடநாட்டரசர்களை விடுவித்தனனென்றும், அவர்களும் தங்கள் நாடுசென்று பத்தினிக்கோட்டங்கள் சமைத்தனரென்றும், அவற்றுட் சில இன்றும் மத்திய இந்தியாவிற் காணப்படுகின்றனவென்றும் தக்க ஆதாரங்களோடு, 'காவேரியும் சங்ககாலமும்' (The Kaveri The Maukaris and the Sangam age) என்ற நூலில் திருவாளர் தி. கோ. ஆராவமுத ஐயங்கார் கூறுவர். இவற்றுள் நடுவிற் காணப்படும் முதல் நூற்றாண்டு இவனுடைய காலத்தோடு ஒத்து வருதலின் இக்காலமே கரிகாலனது காலமாகுமென்பது திண்ணம்.

கிள்ளிவளவனோ, கரிகாலனுக்குப் பின் இருவர் ஆண்டபின்னர் அரசுகட்டிலேறி யிருப்பதாலும், இவனைப் பாடியவருள் சங்கப் புலவரான கோவூர் கிழாரும் ஒருவராகையாலும், இவனது காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியென்றே கூறலாம்.

# நெடுஞ்செழியன் - I

## 1. குலமும் கல்வியும்

நிலவுலகிலே பன்னாட்டினுஞ் சிறந்தது இத்தென்னாடு. மக்கள் உயிர் வாழ்தற்கு இன்றியமையாத பல் பண்டங்களும் நிறைந்தது இத்தென்னாடு. ஆகையால், இந்நாட்டினின்றே மக்கள் பல்வேறிடங்கட்குச் சென்று பரவலாயினர் என்பர் ஒரு சாரார். கதிரவன் ஒளி ஒருகாலத்தில் ஓங்கியும் ஒரு காலத்தில் மங்கியுமிருக்கும் நாடுகளைப் போலன்றி, தட்ப வெப்பநிலை மிதமாயிருப்பதால், மக்கள் ஈண்டு வாழ்தற்கு இந்நாடு ஏற்றதாயிருந்தது; அதனால் பலரும் கூடினரென்பர் மற்றொரு சாரார். அஃதெவ்வாறாயினும், இந்நாடு மக்கள் மன மகிழ்ச்சிகொண்டு வாழ்தற்கேற்ற நாடென்பதிற் சிறிதும் ஐயமில்லை. ஆகலான், மக்கள் யாதொரு துன்பமுமின்றி வாழ்ந்து, தொகையிலும், அறிவிலும் வளருவாராயினர்.

மக்கள் கூடிவாழும் இயல்பினர். இவ்வாறு கூடிவாழத் தொடங்கும்போது முதலிற் சிறு கூட்டமாகவும், நாளடைவில் தொகை பெருகப்பெருகப் பல்வேறு கிளைகளாகவும் பிரிவது இயற்கை. இக்கிளைகளுள் எத்துணைபேர் இருந்தாலும் எல்லோரும் தலைவர்களாக இருக்க இயலாது. அவரவர்கள் தங்கள் தங்கள் வீட்டிற்குத் தலைவர்களாயினும்,

பொதுவாகச் சில காரியங்களைச் சமூகவாழ்க்கையின் பொருட்டுச் செய்யவேண்டிய காலத்து, மனம்போன போக்காகச் செய்யின், அக்காரியம் நிறைவேறுவதில்லை. அவ்வாறு முட்டுப்பாடுண்டாகவே, மக்கள் தம்முள் ஒருவன் வழிப்படுவர்.

மக்களுள் எல்லோரும் ஒரு படித்தான அறிவுடையாரல்லர். சிறிது ஏற்றத்தாழ்வுடையாரே யாவர். மிகுந்த அறிவினையுடையார் சிலரும், தாழ்ந்த அறிவினையுடையார் பலருமாகலின், அறிவிலே வளர்ச்சியுடையார் அஃதில்லோரைத் தம் பக்கல் இழுப்பர். அன்னார் வயப்பட்டே பின்னையவர் நடப்பர். இவ்வாறு அறிவு, ஆற்றல் முதலிய குணங்களிற் சிறந்தோரையே தலைவர் என்பர்.

இத்தலைவர்களே நாளடைவில் அரசர்களாகி உயர்பதவி பெற்றிருக்கவேண்டும். அரசராதற்குரியார் ஒருவர் உண்டெனின் அவருக்குக்கீழே பல சிற்றரசரோ, தலைவர்களோ இருந்திருக்கவேண்டும். தலைவர்க்குத் தக்க நாடுகளு மிருக்க வேண்டும். இவ்வாறு வேண்டியார் வேண்டியாங்குப் பலனைக் கொடுக்கக்கூடிய நாடும் இத்தென்னுடேயாம். ஆகவே, இந்நாடு பலவழியிலும் திருத்தமுற்று இருந்தமையால், சேர சோழபாண்டியரென்ற முடியுடைவேந்தர் மூவரால் தொன்று தொட்டு ஆளப்பட்டு வந்தது. எக்காலத்தில் இவ்வரசர் தோன்றினர்? எங்கிருந்து வந்தனர்? இவர் உற்றூர் யார்? என்று சரித்திர வாராய்ச்சி மிகுந்த இந்நாளிலும் வரையறுத்துக் கூறுவது இயலாத காரியமே.

சேர, சோழ பாண்டியருள்ளே, பாண்டிய வமிசத்திலே பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, கருங்கை யொள்வாட் பெரும்பெயர் வழுதி, கூடகாரத்துத்

துஞ்சிய மாறன் வழுதி, கானப்பேர் தந்த உக்கிரப்பெரு வழுதி, இளவழுதி என்ற வழுதியர் பலரும்; இலவந் திகைப்பள்ளி துஞ்சிய நன்மாறன்; சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன் முதலிய மாறன்மார் பலரும்; தலையலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்ற செழியர் பலரும் பாண்டி நாட்டில் அரசாண்டதாகப் பழந்தமிழ் நூல் கொண்டு அறியக்கூடிய செய்தியாயினும், அவருள் சரித்திர சம்பந்த முடையராகக் காணப்படுவோர் இரண்டொருவரே யாவர். இவருள்ளே ஈண்டு எழுத எடுத்துக்கொண்டது பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்பவனைப் பற்றியேயாம்.

பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனது முன்னோர் இன்னின்னாரென்று இதுபொழுது கூறவியலா தாயினும், இவன் மகன் இளஞ்செழியனென்ற வெற்றி வேற் செழியனென்றும், அவனது மகன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனென்றும் சொல்லத் தகுதியான ஆதாரங்களுண்டு. சிலப்பதிகாரத்திலேயே ஆசிரியர் இளங் கோவடிகள், 'அந்திமாலைச் சிறப்புச்செய் காதை' என்ற பகுதி யின் தொடக்கத்திலே இரட்டுறமொழிதல் என்னும் உத்தி கொண்டு, 'விரிகதிர் பரப்பி யுலகமுழு தாண்ட ஒரு தனித் திகிரி யுரவோன் (ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்) காணேன்; அங்கண் வானத்து அணிநிலா விரிக்குந் திங்க ளஞ்செல்வன் யாண்டுளன் கொல்லெனத் திசைமுகம் பரந்து செம்மலர்க் கண்கள் முழுநீர் வார முழுமெயும் பனித்துத் திரைநீராடை யிருநில மடந்தை யரசுகெடுத்து (வெற்றிவேற் செழியனும் இறக்க), அலம்வரும் அல்லற்காலை, கறைகெழு குடிகள் கைதலை வைப்ப, அறைபோகு குடிகளோடு ஒரு

திறம் பற்றி வலம்படு தானை மன்னரில்வழி, புலம்படவிறுத்த விருந்தின் மன்னரில் (வேற்று மன்னராது) தாழ் துணை துறந்தோர் தனித்துயர் செய்த, காதலற் புணர்ந்தோர் களிமகிழ் வெய்த, குழல்வளர் முல்லையிற் கோவலர் தம்மொடு மழலைத்தும்பி வாய்வைத்தூத, அறுகாற் குறும்பெறிந்து அரும்பு பொதிவாசஞ் சிறுகாற் செல்வன் மறுகில் தூற்ற வெல்வளை மகளிர் மணிவிளக் கெடுப்ப, மல்லன் மூதூர் மாலை வந்திறுத்தென, இளையராயினும் (இரண்டாம் நெடுஞ்செழியன்) பகையரசு கடியும் செருமாண் தென்னர் குலமுதலாகலின்' என்று அந்திப்பொழுதைக் கூறினர். ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனும், இளஞ்செழியனும் இறந்த பின்னர், நிலமடந்தை திங்களையொத்த அம்மாபினனுன செல்வன் யாண்டுச் சென்றனே என்று கவலைப்பட்டழ, இப்பாண்டிய வரசைப் பாழாக்கி வந்த புதுமன்னர் நாட்டு மக்கட்கு ஏதஞ்செய்யவும், குறுநில மன்னர் குறும்பு கொள்ளவும் இருக்கின்ற காலத்து, இளந்திங்களேயாயினும் ஒளி குறைவற்ற தென்ன, அவ்வமிசத்திலே தோன்றிய தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் ஆண்டில் இளையனுயினும் போரில் முதியனெனத் தோன்றினன் என்று பொருள்பட எழுதியது கொண்டு தேறலாம். இதுபோன்றே 27-ஆவது நீர்ப்படைக்காதை 126—140 அடிகளும் கூறும்.

பின்னும் இதனை வலியுறுத்த சிலப்பதிகாரம் உரைபெறு கட்டுரை, 'அன்றுதொட்டுப் பாண்டியனாடு மழைவறங்கூர்ந்து வறுமையெய்தி வெப்புநோயும் குருவும் தொடரக் கொற்கையிலிருந்த வெற்றிவேற் செழியன் நங்கைக்குப் பொற்கொல்லர் ஆயிரவரைக் கொன்று களவேள்வியால் விழவொடு சாந்தி செய்ய, நாடுமலிய மழைபெய்து, நோயுந் துன்பமும் நீங்கியது' என்று கூறும். ஆகவே இவன் பின்வந்தோர் 1 வெற்றிவேற்

செழியன் என்பதும், 2 இரண்டாம் நெடுஞ்செழியன் என்பதும் துணிந்த பொருளாம். கனகசபைப்பிள்ளை யவர்களும் இதே வமிசாவளியைக்[1] குறிப்பர்.

சிலப்பதிகாரக் கதையிலே கண்ணகி, தன் கணவன் கோவலன் வெட்டுண்டதைக் குறித்து வாதாடும்போது, பாண்டியன் நெடுஞ்செழியன் தனது பத்தினியோடு இருந்து இறந்தவிடம் கோயிலென்று சொல்லப்பட்டிருக்கிறது. புறநானூற்றிலோ சித்தலைச் சாத்தனார் பாடிய பாட்டின்கீழ் சித்திர மாடத்துத் துஞ்சியவன் நன்மாறன் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. சித்தலைச் சாத்தனாரே முதன் முதலாக கண்ணகி செய்த செயல்களைச் செங்குட்டுவன் அவையிற் சொல்லியவர். அவர் தான் மதுரையம்பதியில் வெள்ளியம்பலத்திலே கோவலன் வெட்டுண்ட அன்றிரவு படுத்திருந்ததாகவும், கண்ணகியும் மதுரைமா தெய்வமும் பேசிக்கொண்டதைக் கேட்டதாகவும் கூறுகின்றார். அவர் இச்செய்திகளை நேரில் அறிந்திருந்தால், அவர் பாடிய புறம் 59-ஆம் பாட்டின் கீழ், 'சித்திர மாடத்துத் துஞ்சிய' என்று காணப்படுவதற்குக் காரணமென்ன? என்று விசாரிக்க வேண்டும். சித்திர மாடம் என்பது பல்வகை ஓவியங்களும் பதுமைகளும் அமைந்ததொரு மாளிகை. நெடுஞ்செழியனுடைய கோப்பெருந்தேவி அரசனோடு ஊடிச் சென்றாள். அவள் புலந்து சென்ற இடம் சித்திர மாடமாக இருக்க வேண்டும். அரசன் அவள் ஊடலை நீக்கவே வந்தவனாகையால் அவனும் அங்குச் சென்றான். இங்கேயே கண்ணகி அரசனைக் கண்டாள். இதுவே இவள் குறித்த கோயில். ஆதலின் சித்திர மாடமும் கோயிலும் ஒன்றே என்று கொள்ள வேண்டும்.

1 The Tamils 1800 Years ago, P. 80.

வடநாட்டரசர் மிடல் கெடுத்தவன் கூடகாரத்துத் துஞ்சிய நன்மாறனென்று[1] புறம் கூறுகின்றதென்றால், சிலப் பதிகாரம் மதுரைக்காண்டத்தின் இறுதியிலே கண்ட 'வட வாரியப்படை கடந்து தென்றமிழ் நாடொருங்கு காணப் புரைதீர் கற்பின் தேவிதன்னுடன் அரைசுகட்டிலில் துஞ்சிய பாண்டியன் நெடுஞ்செழியன்' என்பதால், அவ்வட ஆரியப் படை கடந்தவனும் சித்திர மாடத்துத் துஞ்சியவனுமான நெடுஞ்செழியன் வேறு என்றும் மாறன்வழுதி வேறு என்றும் கொள்வது தகுதியாகும். கூடகாரத்துத் துஞ்சியவன், மத்திய காலத்திலே, சோழவரசர் பலர், இரட்டர், சாளுக்கியர் முதலாயினாரோடு போரிட்டு, களத்திலே மடிந்தது போல மடிந்தவனாயிருக்க வேண்டுமென்று ஊகித்துக் கொள்ளவேண்டும். அன்றி, துஞ்சியவென்ற அடைமொழிக்குத் துயின்ற என்ற பொருள்கொண்டு, மற்றைய அரசர் போன்று பாசறைக்கண்ணே புலிக்கால் அமளியில் துயிலாது, கூடசாரத்து, பசும்புற்றரையிற் பலவீரரோடு ஒரு வீரனாகத் துயின்றவன் என்று கொள்வதும் அமைவுடைத்து. இக் கதாநாயகன் ஆரியரை வென்றமையாலே, மற்றையோரினின்றும் பிரித்துக்காட்ட, இவனே ஆரியப்படை கடந்தவன் என்றும், சித்திரமாடத்தில் உயிர் துறந்தமையால் சித்திர மாடத்துத் துஞ்சியவன என்றும் சொல்லுவர் பெரியார்.

போர்த்தொழிலில் மிக்க ஆற்றலுடையவனா யிருந்ததோடு தனது அரசுரிமைக்கு இன்றியமையாத கல்வி கேள்விகளிலும் தக்க பயிற்சியுமுடையவனா யிருந்தான். செய்யுள் செய்தலிலும் வல்லவனாயிருந்தான்; உரிமை யொன்றையே தலையாகக்கொண்டு பார்ப்போமாயினும் பாண்டியன் நெடுஞ் செழியன் தன் முன்னோர் பலர்க்கும் சிறிதும் தாழ்ந்தவ

1 புறம். செ 52.

னல்லன். சங்கத்திலே கவியரங்கேறிய பாண்டியருள் ஒருவ னல்லனுயினும், இவனது செய்யுட்களிற் சிலவேனும் சங்க மருவிய நூல்களில் ஒன்ருன புறத்திலே கோக்கப்படும் பெருமையுடையவாயின. அச்செய்யுட்களின் திறனையறிய ஈண்டு ஒன்று குறிக்கின்றேன :

'உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே
பிறப்போ ரன்ன உடன்வயிற் றுள்ளுஞ்
சிறப்பின் பாலால் தாயுமனந் திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக வென்னு தவருள்
அறிவுடை யோனுறு அரசுஞ் செல்லும் ;
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே' (183)

இப்பாட்டு அறிவுச் சுடர் கொளுத்த எவ்வளவு இயைந் துள்ள தென்பதோடு இதன் இழுமென் ஞேசையும் விழுமிய பொருளும் நோக்கி மகிழ்தற்கு முரியது என்னலாம். இப் பாட்டு ஒன்றினைக் கொண்டே, இவ்வரசன் நன்னெறியும் நல்லறிவும் மேம்படக்கூடிய பல செய்யுட்கள் இயற்றி யிருக்க வேண்டுமென்பது புலனுகும்.

கல்வியறிவு நிரம்பப் பெற்றவனு யிருந்தமையின், இவ னுக்குக் கல்வி கேள்விகளிற் சிறந்த பல புலவர்கள் உரிமைச் சுற்றமா யமைந்திருந்தனர். மணிமேகலை பாடிய தண்டமிழ்ச் சாத்தன் போன்ற கடைச்சங்கப் புலவரை யடுத்துப் பல கவிவாணர் சூழ்ந்திருந்தனர். கூலவாணிகன் சாத்தனுரே கோவலன் வெட்டுண்டதை நேரிலறிந்து, சேரன் செங்குட்

டுவனது அவையில் தெரிவித்தவர் என்று முன்னர் குறிக்கப் பட்டது.

கோவலன் முற்பிறப்பிற் செய்ததொரு தீவினை காரண மாக மதுரையம்பதியின் ஆவண வீதியிலே வெட்டுண்டா னாக, கற்புடைக் கண்ணகியின் ஆணைப்படி அப்பதி தீக் கிரையாயிற்று. இக்கூற்றின் நிகழ்ச்சி ஓராண்டிலே, 'ஆடித் திங்கட் பேரிருட்பக்கத் தழல்சேர் குட்டத்து அட்டமி ஞான்று வெள்ளிவாரத்து' ஆகலின், இக்காலம் கிறித்தவ ஆண்டு 171-ல் ஆடித் திங்கள் இருபத்தாறும் நாள் என்று கணித முறைப்படி திருவனந்தபுர சமஸ்தானத்திலே மகா மன்றத்து (High Court) நீதிவானாக இருந்த திருவாளர் K. G. சேஷய்யரவர்கள் தடை விடைகளோடு நிலைநாட்டி யுள்ளார்கள்.[1] இது பொழுது கடைச் சங்கத் திறுதிக் காலம் இரண்டாம் மூன்றும் நூற்றாண்டென்று கொள்வ தால், இவனும் கி. பி. 171-க்குப் பிற்பட்டவனல்லனென்று கொள்வதில் யாதோர் இழுக்கு மில்லை.

---

1. Christian College Magazine.

## 2. ஒழுக்கமும் நீதியும்

'ஒழுக்கம் விழுப்பந் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்'

என்பது செந்நாப் போதார் செம்மொழி. இவ் 'வாழ்வாவது மாயம்' ஆகையால், வாழ்வு வந்த வழி, உடம்பெடுத்தது எதற்கு என ஆராய்வோமாயின், பிறருக்கு நன்மைசெய்து, பலராலும் நல்லோனெனப் பேரெடுக்க வேண்டுமென்பதற் கேயாம் என்பது புலனாகும். மக்களாய்ப் பிறந்தார், பிறருக்கு நன்மை செய்வதிலேயே நாட்டம் வைத்தல் வேண்டுமென்பது பெரியோர் துணிபு. அந்த நற்குணங்களை யடையச் சிறுவயதிலேயே முயலல்வேண்டும். 'தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்பதொரு முதுமொழி. ஒருவன் இளமையில் எவ்வாறு நடக்கப் பழகுகிறானோ அவ்வாறே முதுமைவரையில் நடப்பான். இஃது அவரவர்கள் சாரும் இனத்தையே அடிப்படையாக வுடையது. நல்லாரோடு இணங்கி அவர்வழிப் பட்டவன் நல்ல பழக்க வழக்கங்களைக் கையாளுகின்றான். தீயாரோடு சார்ந்தவன் தீயவழியிலே நடக்கப் பயிலுகின்றான். இளமையில் பகுத்தறிவு செவ்வனே முதிர்வதில்லை. ஆயினும் 'அஞ்சிலே வளையாதது ஐம்பதிலே வளையாது' என்பதற்கிணங்க ஒருவன் இளமையிலேயே நற்பழக்கத்தைக் கைக்கொள்ளாது தீயநடையைக் கைக்கொண்டு நடப்பானாயின் அவன் பின் வருந்த நேரிடும். அப்பொழுது அதனை நினைந்து வருந்துவதனாற் பயனில்லை. துன்புறும் ஒருவன் இன்பத்தைக் காணின், அதனை யடைய

வேண்டுமென்னும் அவாவுண்டாவது இயற்கை. அதனினும், 'கொடிது கொடிது வறுமை கொடிது, அதனினும் கொடிது இளமையில் வறுமை' என்றபடி இளமையிலே வறுமையை யுடையானுக்கு இன்பம் என்னுஞ் சொல்லைக் கேட்ட அள விலே அதனிடத்து ஆசையுண்டாவது உலக இயல்பு. 'தொடங்குங்கால் துன்பமா' யிருப்பினும் முடியுங்கால், ஒரு காரியம் இன்பம் பயக்கு மென்பதை ஒருவன் அறிவதில்லை. துன்பத்தினின்றும் பிறப்பது இன்பம் என்பதையும் கவ னிப்பதில்லை. வாழ்நாள், இன்பதுன்பம் நிறைந்ததொரு சரக்கறை என்பதையும் ஓர்வதில்லை. இவ்வாழ்நாளைப் பண் படுத்தி, மெய்ம்மை என்னும் விதை விதைத்து, நற்பழக்க மென்னும் எருவிட்டு, நல்லிணக்கம் என்னும் நீர்பாய்ச்ச, நல்லறிவு என்னும் பயன் விளையும். இதனாலேயே, 'சேரிட மறிந்து சேர்' என்றாள் ஔவை மூதாட்டி. நல்லாரோடு இணங்குவதால், அவர்களைப்போலவே தன்னடக்கத்தையும் அமைதியையும் அடைவர். இவற்றை யடைதற்குத் தக்க உடல் - நலம், உடல் - வலி, உள - வலி வேண்டும். உடல்வலி யற்றாரைச் சாதுவாகக் காண்கின்றோமே யெனின் அவர்க ளாலே யாதொரு காரியமும் செய்ய வியலாமையே அதற்குக் காரணம் என்க. ஆயினும் அவர்கள் களங்கமற்ற மனத்தோடு, பொறாமை, சினம், பற்றுள்ளம் முதலாய தீய ஒழுக்கங்களி னின்றும் விடுபட்டிருக்க மாட்டார்கள். உடல்நல முடை யாரே விருப்பு, வெறுப்பு அற்றிருக்கக் கூடியவர். ஒரு பொருளின்மேல் அவா ஒருவனுக்கு உண்டாயின், அது, 'தவாஅப் பிறப்பீனும் வித்து' என்பதையோராது, அவன் எவ்வாற்றானும் விரும்பிய பொருளை யடையவே முற்படு வான். தென்பு, உடல்வலி முதலியவற்றை யுடையவனே நற்பழக்கத்தால், 'வஞ்சனையோடு கூடியது அவா' என்று

கொண்டு, 'வேண்டாமை யன்ன விழுச்செல்வம்' வேறில்லை என்று கண்டு, 'தூஉய்மை யென்பது அவாவின்மை' யென்று துணிந்து அதனை வேரற வெட்டி வீழ்த்துவன். ஆகவே ஒருவன் உடல்நல முடையனாயின் அவன் நல்லொழுக்க முடையவனாவான்.

உடல் நலம் கைவரப் பெறுதற்குப் பல காரணங்களுள. அவற்றுள் ஒன்று நாட்டின் செழுமை. நாடு வளமுடையதா யிருக்கவேண்டும். அதுவே பல நற்குடிகளையுடைய நாடா யிருக்கும். 'குடிகொன்று இறைகொள்ளும் கோமகற்குக் கற்று மடிகொன்று இறைகொள லுமாண்பே' ஆகலானும், 'இன்று கொளற்பால நாளை கொளப்பெறான்' 'சென்று ஆவன கூறின் எயிறலைப்பான்' ஆகலானும், அவ்வாறுற்ற மறச் செய்கைகளை வாயாற் கூடச் சொல்லுதல் தீவினை பயக்கு மென்றஞ்சி, குடிகளை ஓம்புங் கொற்றவனாய், 'அருட் செல்வம் செல்வத்துட் செல்வம்' என்று கொண்டு ஆள்வானாயின், அவனுடைய நாடே நற்குடிகளையுடைய நாடெனப்படும். ஆதலினன்றோ,

> 'புலம்பூங் காவின் நன்னாட் டோருஞ்
> செய்வினை மருங்கின் எய்தல் அல்லதை
> யுடையோர் ஈதலும் இல்லோர் இரத்தலும்
> கடவ தன்மையிற் கையற வுடைத்தென
> வாண்டுச்செய் நுகர்ச்சி யீண்டும் கூடலின்
> நின்னாடுள்ளுவர்'

என்றனர் புலவர் ஒருவர். தன்னாட்டு மக்களைத் தன் மக்கள் போல வளர்த்தற்கு, அரசனும் கடமைப்பட்டவன் என்பதைப் பொன்முடியார் என்ற பழந்தமிழ்ப் புலவர், 'நன்னடை நல்கல் வேந்தற்குக்கடனே' என்று குறித்துள்ளார்.

முடியுடை வேந்தன், அறிவு, ஆற்றலிற் சிறந்தவனா யிருந்து நல்ல அமைச்சரோடுங் கூடியவனாயின், 'ஒழுக்க

முடைமை குடிமை' என்று கண்டு, ஒழுக்கத்தைப் பரிந் தோம்பிக் காத்து மேன்மையடைந்து நன்றிக்கு வித்தாவான்.

நமது கதா நாயகனான நெடுஞ்செழியனது ஆட்சிக்கு உட்பட்ட பாண்டிநாடானது, பலநற்குடிகள் நிறைந்தது என்று சொன்னோம். இந்நாட்டின் தலைநகரம் மதுரை. மதுரையம்பதியைச் சுற்றிப் பல காவத வழிதூரம் ஊர்கள் நிறைந்திருந்தன. அவரவர் வாழ்வு அவரவர்க்குத் தக்கபடி இருந்தமையாலும், பொய், திருட்டு, சூது, வஞ்சம் முதலாய பெரும்பாதகமின்றி இருந்தமையாலும், நல்லொழுக்கம் குடி கொண்டு இருந்தது. இவனைப் பாடிய சீத்தலைச் சாத்தனார் 'ஞாயிறு பனியினை எவ்வாறு சுடுமோ அதுபோல இவனும் பகைவரைச் சுட்டொழிப்பன்' என்றும், 'தன் நாட்டினர்க்குத் திங்கள்போலத் தண்ணளியுடையான்' என்றும் கூறுகிறார் ஆகவே இவைகளால் நாட்டில் நல்லொழுக்கம் வேரூன்றி நிலவுவதாயிற்று என்பது விளங்கும்.

'முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்'

என்பது திருவள்ளுவர். இவனது முன்னோன் ஒருவன், முன்னாள் வழக்கப்படி, தானே நேரிற்சென்று நகரி சோதனை செய்து வருகையில் கங்கையாடச்சென்ற மறையவன் திரும்பி வந்த உண்மையறியாது கதவைத் தட்டின குற்றத் திற்காகத் தன் கை குறைக்க, இவனது நெறி தவறாமையைக் கண்டு இறைவன் அவன் கையைப் பொற்கையாகச் செய்தார். அப் பாண்டியன் வழித்தோன்றலன்றோ இந்த நெடுஞ்செழி யன். அவனது குடிகளும் அவன் வழியே நடந்துவந்தனர்.

இவ்வாறு நெறிகோடாது செங்கோல் நடாத்தவல்ல இறைவனுக்கு ஐம்பெருங் குழுவும், அரசனோடொப்ப

நடுவுநிலைமை தவறாது அமைந்திருந்தது. மாசனம், பார்ப்பார், மருத்தர், நிமித்தரோடு அமைச்சரென்பார் முக்கிய பரிசனராவார். அந்நாளில் இந்நாட்போன்று பல மன்றங்களேறி வழக்காடவேண்டுவதில்லை. ஊர்கள்தோறும் மாசனங்கள் இருந்தனர். அவர்களிடம் வழக்கைத் தெரிவிப்பின் அவர்கள் அன்றே கேட்டு முடிவு செய்வர். கண்ணகி தனது முறைப்பாட்டை அரசனிடத்துச் சென்று தெரிவித்த வரலாற்றைப் பாருங்கள்: வாயில் காப்பானிடம் சென்று தான் இன்னாள் எனவும், இன்னகாரியத்திற்காக வந்தவள் எனவும் சொல்லி, அரசனெதிரிற் சென்று தன் முறைப்பாட்டைத் தெரிவித்தாள். அரசன் அவளைச் சில கேட்டான். இவளும் அவற்றிற்கு விடை இறுத்தாள். ஆகவே வழக்காடல் உண்டாயின் அது எளியநடை யுடையதாக இருந்தது.

# 4. இரண்டு சரித நிகழ்ச்சிகள்

## I. நெடுஞ்செழியன் தவறு

'நாடொறு நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும்.'

என்பது பொய்யில்புலவர் மெய்மொழி. ஆனால் நமது செழியர் பிரானே, 'கற்றவர் வழியே அரசனும் தன்னுடைய அரசை நடத்தும்' என்று பாடியவன். நல்லொழுக்கத்தில் மிகுந்தவன். ஆயினும் 'யானைக்கும் அடிசறுக்கும்' என்ற படி வினைவிளைகாலத்தால் முறை பிறழ்ந்து நேர்ந்த இத் தவறு, தமிழ் மகள் உகக்கும் சிறந்த பெருங் காப்பிய மொன்று இயற்றப் பெறுதற்குக் காரணமாக இருந்தது.

ஒருநாள் நெடுஞ்செழியன் திருஓலக்க மண்டபத்திலே வீற்றிருக்கும்போது, இவனது கோப்பெருந்தேவி அவ் விடத்திருந்தவள், அவையில் நடக்கும் ஆடல்பாடல்களில் மகிழ்ந்து அந்நோக்குடையனா யிருக்கின்றனன் அரசன் என்று எண்ணி ஊடித் தனது கோயிலை நோக்கிச் சென்றாள். அரசன் அவையை விட்டெழுந்து, தனது தேவியின் சினத் தைத் தணிக்கும் எண்ணத்தோடு அவள் பின்னே சென்றான். இராசமாதேவியோடு அரசன் அளவளாவிக்கொண் டிருக் கையில், இவர்க்குப் பூண்கலன்கள் செய்யும் தலைமைப் பொற்கொல்லன் ஆண்டுவந்தான். இப் பொற்கொல்லன் சிலநாள்முன்னர் வஞ்சனையாகக் கோப்பெருந் தேவியி னுடைய காற்சிலம்பு ஒன்றைக் கவர்ந்து கொண்டவன்.

இவன் ஆயிரம் பொற்கொல்லர் தன்னைப் புடைசூழத் தெருவிலே போய்க்கொண்டிருக்கையில், கோவலன் என்பான் தன் கையிலுள்ள சிலம்பு ஒன்றைக் காட்டி, அதன் விலையை மதிக்கும்படி கேட்டான்.

இக் கோவலன், பல் வளங்களும் நிறைந்த காவிரிப்பூம் பட்டினத்திலே, தலைமைசான்ற வணிகக்குடியிலே யுள்ள மாசாத்துவான் என்பவனுடைய தவமகன். இவனுக்கு, மற்றொரு பெருங்குடியிலே பிறந்த மாநாய்கன் மகள் கண்ணகியை மணஞ் செய்து வைத்தனர். கோவலனது தாயான பெருமனைக்கிழத்தி தனது மருமகளும் மகனும் விருந்தோம்பல், சுற்றந்தழால் முதலிய இல்லற ஒழுக்கங்களைச் செவ்வனே நடாத்தவேண்டித் தனிக்குடி யாக்கினள். இல்லற வழியினின்றும் பிறழாது இவர்கள் ஒழுகிவரும் நாளிலே, ஒருநாள் இவன் நகரநம்பியர் திரிகின்ற வீதியிற் சென்றான். அங்கே அழகுடையாளாய ஒரு கூனி கையில் பூமாலை ஒன்று கண்டான். அதன் வரலாற்றை விசாரிக்க, இம்மாலை, பிறப்பிலே குன்றாத பெருந்தோள் மடந்தையும், ஆடல், பாடல், அழகு என்ற மூன்றினுள் ஒன்றும் குறைவுபடாதவளுமான மாதவிக்கு, அவள் அரங்கேறியதற்குப் பரிசாக அரசனால் கொடுக்கப்பட்டது என்பதும், அது ஆயிரத்தெட்டு பசும் பொன் விலைபெற்றது, என்பதும் அதுவே மாதவிக்கு காட்பரிசமாகும் என்பதும் கோவலனுக்குத் தெரியவந்தன. அப்பரிசத்தைக் கூனியிடம் கொடுத்து மாலையை வாங்கிக் கொண்டு, அவளோடு கோவலன் சென்றான். மாதவியைக் கண்டான். அவளுடைய கட்டழகில் ஈடுபட்டான். தனது இல்லத்தையும், இல்லறவியலையும் கைவிட்டான். தனது குலத்தொழிலான வாணிபத்தையும் அறவே மறந்தான். அங்ஙனம் மறந்தவன் அம் மாதவியை விடுதலறியா விருப்பினனாய் அவளோடு பல்லாண்டு கழித்தான்.

இவ்வாறு கோவலன் இருக்கின்றகாலத்திலே காவிரிப் பூம்பட்டினத்தில் இந்திரவிழாக்கோள் வந்தது. இவ் விந்திர விழா இந்திரனுக்குச் செய்வது. அரசன், தனது கோயில் யானையை அலங்கரித்து அதன்மேல் முரசேற்றி இந்திர விழா இருபத்தெட்டு நாட்களும் சிறப்புற நடத்தவேண்டும்; நாட்டிலே துன்பமும் நோயும் அணுகாது இன்பமும் நலனும் மிகுவதோடு வளனுஞ் சுரக்க என வாழ்த்துக என முரசறை வித்தனன். இந்திரவிழா இனிது நடைபெற்றது, விழா முடிந்த மறுநாள் புகார்த்துறை சென்று கடலாடுவது முறை. அம் முறைப்படி, கோவலனும் மாதவியும் வண்டியேறிப் போந்து, புன்னை நீழற் புதுமணற் பரப்பிற் சேர்ந்தனர். மாதவி கையிலிருந்த யாழைக் கோவலன் வாங்கி வரிப் பாட்டுகளைப் பாடினான். மறுபடி மாதவி யாழை அவனிட மிருந்து வாங்கி வேறுபாடு தோன்றப் பாடினாள். இதனைக் கண்ட கோவலன் இவள் வேறு நோக்குடையாள் என்று எண்ணி மனம் வேறுபட்டு, ஊடிப் பிரிந்தான். பிரிந்த கோவலன், மனையகம் புக்கு, கண்ணகியை யணுகி, தான் செய்த தவற்றைக் கூற, பத்தினிப் பெண்டாகிய கண்ணகி, மாதவிக்குக் கொடுக்கப் பொருளின்றித் தளர்ந்தான் தன் கணவன் என்றெண்ணி, தன்காற் சிலம்பு மிகுந்திருப்பதை நினைப்பூட்டினாள். அவளது நற்குணத்துக்குக் கோவலன் மகிழ்ந்து தான் இதுகாறுஞ் செய்தது தவறென்பதாகவும், அத்தீய ஒழுக்கத்தினின்றும் நல்வழியில் திரும்பி, பொரு ளீட்ட மதுரையம்பதி புக்கு, சிலம்பை வாணிக முதலாகக் கொண்டு பொருளீட்டப் போவதாகவும் சொல்லிச் செலவு கேட்க, வடமீன் சாலினியினும் மேம்பட்டாள், கணவன் பின்னிற்பதே தனக்குக் கருமமென்று அவற்குக் கூறித் தானும் உடன்போக ஒருப்பட்டாள்.

இருவரும் காவிரி கடந்து, தவமுதியோளாகிய கவுந்தியடிகளைத் துணைக்கொண்டு, திரு அரங்கமடைந்து, அரவணைத் துயில்வோனை வழிபட்டு, தெய்வசாரணரைத் தரிசித்து, ஓடமேறித் தென்கரை யடைந்து, வனங்களைக் கடந்து, மதுரைமாநகர் அடைந்தனர். அங்குப் புறச்சேரியிலே ஆயர்பாடியில் ஆய்ச்சியர் தலைவியாகிய மாதரியிடம் அடைக்கலமாகக் கண்ணகியை விட்டுவிட்டு, மனைவியின் ஒற்றைக் கால் சிலம்பை விலைப்படுத்தும் நோக்கத்தோடு கோவலன் அகநகருட் புகுந்தான்.

புகுந்தவன் பொற்கொல்லர் தலைவனைத் தெருவிற் கண்டு, தன் மனைவி பொற்சிலம்பைக் காட்டி நீ விலையிடுதற்காதியோ வென, அவன் தான் வேந்தர் முடிமுதற் கலன்கள் சமைப்பவனெனத் தாழ்மையாகச் சொல்லி, தான் முன் மறைத்த சிலம்போடு இது ஒத்திருத்தலை யறிந்து, அதனை மறைத்தற்கு இது ஏற்ற சமயமென் றெண்ணினன். கோவலனிடம், இதனை வாங்குதற் குரியார் மன்னரே யாதலின், வேந்தற்கு யான் விளம்பி வரும்வரை என் சிறுகுடிலின்கண் இருமின் நீர் எனச் சொல்லி, கோவேந்தனிடம் சென்று, காப்புடை வாயிற்கடைக்கண் தாழ்ந்து வீழ்ந்து, அரசனைப் பலபடியேத்தி, 'கன்னகமின்றியும் கவைக்கோ லின்றியும் துன்னிய மந்திரம் துணையெனக்கொண்டு, வாயிலாளரை மயக்குவித்துக் கோயிற் சிலம்பு கொண்ட கள்வன் காவலர்க்காத்து என்சில்லைச் சிறுகுடிலகத்து இருக்கின்றனன்' என முறையிட்டான். அரசுக்கு வினைவிளை காலமாதலின், அவன் யாவதும் தேரானாகி, ஊர்காப்பாளரைக் கூவி 'காற்சிலம்பு, கன்றிய கள்வன் கையதாகில், அவனைக் கொன்று அச்சிலம்பினைக் கொணர்க ஈங்கு' என ஏவினன். வந்த ஏவலாளர் கோவலனை நோக்கி ஐயமுற்ற பொழுது, பொற்கொல்லன் நகைத்

துரைத்து, இழுக்குடை மரபிற் கட்டுண் மாக்கள் துணை யெனத் திரிவது இவ்வாறாகும் என்று, அவ்வகை யெல்லாம் எடுத்து அவர்களுக்குக் கூறினன். அதனைக் கேட்டுக்கொண் டிருந்த கல்லாக் களிமகன் ஒருவன் தன் கையிலுள்ள வெள்வாளை எறிந்தனன். அது கோவலன் தலையை ஊடறுத் துச் சென்றது. கோவலன் இறந்துபட்டான்.

கண்ணகி இருந்த இடைச்சேரியிலே, பலவகைத் தோற் றங்கள் காணப்பட்டன. அவற்றிற்குச் சாந்தியாகக் குர வைக் கூத்து முதலியன ஆடப்பட்டன. கோவலன் கொலை யுண்ட செய்தியைப் பிறகு கண்ணகி கேட்டு மூர்ச்சை யுற்றாள். பின்னர் தெளிந்து, எழுந்து சென்று மதுரையம் பதியை யடைந்து அரசன் கோயிலுட் புகுந்து, அவனிடம் தான் புகார் நகரத்திலுள்ள வணிகன் கோவலன் மனைவி யென்றும், தன் நாயகன் அரசனால் ஆராயாது கொல்லப் பட்டானென்றும் கூறினாள். அரசன் கள்வரைக் கொல்வது தவறன்று என்று கூற, அவள் தன் கணவன் கள்வனல்ல னென்றும், தன் காற்சிலம்பின் பரல் மாணிக்க மென்று காட்ட, 'தேமொழி யுரைத்தது செவ்வை நன்மொழி, யாமு டைச் சிலம்பு முத்துடை யரியே' யென்று இராசமா தேவி சொல்ல, தருகென்ற வரசன் ஆணைக்குத் தந்து அரசி முன் வைப்ப, கண்ணகி யணி மணிக்காற்சிலம்புடைக்க, மன்னவன் வாயிலே தெறித்தது மணி. மணிகண்ட மன்னவன் தாழ்ந்த குடையன் - தளர்ந்த செங்கோலன் - பொன்செய் கொல்லன் சொற்கேட்ட யானோ வரசன், யானே கள்வன், மன்பதை காக்குந் தென்புலம் காவல் என்னிடத்திலே பிழைத்தது; கெடுக என்னாயுளென்று சொன்னவளவிலே உயிர் நீங்கியது. கோப்பெருந்தேவியும் மாய்ந்தாள். கண்ணகி தன் கணவ னிறந்ததைப் பொறாது, தனது மார்பொன்றினைத் திருகி

யெறிய, எரிபற்றி ஊரை யெரித்தது. அந்நாள் ஆடி யழற் குட்டத் தட்டமி ஞான்று வெள்ளிவாரமாகும். இவ் வரசன் முறைபிறழ்ந்து தவறியதே சிலப்பதிகாரத்தின் முக்கிய பகுதியாகும்.

## II ஆரியப்படை கடந்தது

அகநானூற்றில் தொகுக்கப்பட்ட பாக்களிலே, கடைச் சங்கப் புலவருள் ஒருவரான மாமூலனார் பாடிய பாக்களும் பலவுள. அவற்றுள் 257, 281 என்ற எண்ணுள்ள இரண்டு பாக்களில், 'பகைதலை வந்த மாகெழுதானை வம்ப மோரியர் புனைதேர் நேமி யுருளிய குறைத்த விலங்கு வெள்ளருவிய வரைவாயும்பர்' என்றும், 'முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர் தென்றிசை மாதிரம் முன்னிய வரவிற்கு' என்றும் காணப்படுவதுகொண்டு மோரியர் தென்றிசை வந்து சேர சோழ பாண்டியரான தமிழரசரை வென்றனர் என்பர். மோரியர் என்பார் வடநாட்டிலே இக்காலத்துப் பாட்னு என்றழைக்கப்படும் பாடலீபுரத்தைத் தலைநகராகக்கொண்டு ஆண்டதொரு வமிசத்தினர். முன்னர், நந்தர் என்ற ஒரு வமிசத்தினர் வடநாட்டை யாண்டு வந்தனர். அவர்கட்கு எதிரியாகச் சந்திரகுப்தன் என்பான் தோன்றி அவர்களை யழித்துத் தான் அரசனானான். அரசனானதோடு அமையாமல், தனது இராச்சியத்தைப் பரவச்செய்ய எண்ணங்கொண்டு, வேற்று நாடுகளையும் அடிப்படுத்தினான். பிறகு இவனுஞ் சக்கிரவர்த்தி யென்ற பட்டம் தரித்தனன். இவனுக்குப் பின் வந்த பிந்துசாரனென்பான் தனது இராச்சியத்தை இன்னும் அதிகப்படுத்தினான். அவனுக்குப் பின்னாண்ட அசோகனென்பான் வடக்கே இமயமும், தெற்கே வேங்கடமும், கீழ்பாலும் மேல்பாலும் இருகடல்களு மெல்லையாக அமைய அரசாண்டான். இவ்வரசனது முன்னோரால் அடிப்படுத்தப்

படாத கலிங்கத்தை இவன் அடிப்படுத்தினன். ஆயினும் இவனது கல்வெட்டுக்களால் தமிழகம் தனி நாடாகவே அசோகனை யொத்த அரசர்களால் ஆளப் பட்டதென அறி கிறோம். அசோகன் பௌத்தமதக் கொள்கைகளைப் பரவச் செய்ததாக ஒரு கொள்கையுண்டு. அவற்றை யாவரும் அறிந்து அவ்வாறொழுக வேண்டுமென நினைத்து அக்கொள் கைகளை அவன் மலைப்பாறைகளிலும் கற்றூண்களிலும் வெட்டுவித்தான். அவ்வாறான கல்வெட்டு ஒன்றில், 'தேவர்க ளன்பனான வரசன் பிரியதரிசியின் பேரரசிலும், அதன் எல்லைப் புறங்களிலும் சோழ, பாண்டிய, சதீயபுத்திர, கேரள புத்திர நாடுகளிலும், லங்கைத்தீவிலும், கிரேக்க அரச னாகிய அந்தியோகசின் நாட்டிலும், அவனது பக்கத்துள்ள நாட்டிலுள்ள எல்லாவிடங்களிலும் மக்கள் அடையும் நோயையும், விலங்கின் நோயையும் நீக்க இருவகையான மருத்துவசாலைகள் பிரியதரிசி ஆணைப்படி கட்டப்பட்டிருக் கின்றன; அவ்விடங்களில் மக்கட்கும் மற்றைப் பிராணி கட்கும் வேண்டியிருக்கும் மருந்துப் பண்டங்கள் பயிர் செய்யப்பட்டிருக்கின்றன. சாலைகளில் கிணறுகள் பல தோண்டப்பட்டிருப்பதோடு நிழல் தரும் மரங்களும் வளர்க் கப்பட் டிருக்கின்றன'[1] என்று பொறிக்கப்பட்டிருக்கிறது. இக் கல்வெட்டினால் சேரசோழ பாண்டியர்களும் அசீரிய, எகிப்திய அரசர்களைப்போல ஒருவருக்கும் கீழ்ப்படாத தனியரசர்களாக விருந்தனரென்பது நிச்சயமாகின்றது.

அசோகனுக்கு முன்னாண்ட அரசர் காலத்தில், இத்தமி ழகம் அடிப்படுத்தப் பட்டிருக்குமாயின், அச்செய்தி சமுத்

---

1 அசோகனது II-ஆம் சாசனம். செந்தமிழ் XIII-ஆம் தொகுதி.

திரகுப்தன் முதலாயினோர் தூண்வெட்டுக்களில் பொறிக்கப் பட்டிருக்கலாம். அஃதில்லாதபடியால் அவர்கள் நாளில் அச்செய்தி யொன்றுமில்லையென்பது நிச்சயம். ஆகவே அசோகன் காலம் வரையில் வடநாட்டார் தென்னாட்டினரை உடனரசராக எண்ணியதாகக் காண்கிறதே யொழிய அடிப்படுத்த முயன்றதாகக் காணப்படவில்லை.

இவனுக்குப் பின் வந்த வடநாட்டரசர் தென்னாடு போந்ததாகத் தெரியவில்லை. ஆயினும் கி. பி. 3, 4 நூற்றாண்டில் ஆந்திரர் தலையெடுத்து வடநாடு முழுவதையும் பிடித்துக்கொண்டு தென்னாட்டிலும் புகுந்தனர் என்பர். ஆனால், இந்தக் காலம் சங்ககாலமாகக் கொள்ளப்படாததால், இதனைப்பற்றி நாம் விசாரிக்க வேண்டுவதில்லை.

இவ்வாறன்றி, அகநானூற்றிற் காணப்படும் தமிழ்ப் பாக்களால் மோரியரென்பார் தென்றிசை வந்தனரென்று தெரிய வருவதால், அஃதொரு உண்மைச் செய்தியாகுமென்றாலோ, அப்பாக்களில் தென்றிசை நோக்கிவந்தவரைத் தமிழ்மக்கள் தடுத்து முதுகிடும்படி செய்தனரென்றும், கதநாய் வடுகர்முன்படையாக வந்த மோரியரது தேர் திரும்பும்படி நிறுத்தினரென்றும், ஊழித்தீயுண்டாகி நிலம் புடைபெயருங்காலம் அன்றல்ல இன்றெனச் சொல்லும்படி மன்னுயிர் மடிந்து அலரி மாலையிட்டுப் புண்ணுமிழ் குருதி பரிப் பக்கிடந்தோரது கண்களைப் பரிக்கும் கழுகுக் கூட்டங்களையுடைய நாடு சென்றன றென்றும் பொருள் படும்படி செய்யுள் அமைந்திருத்தலினால், ஆரிய மன்னர் தமிழகத்தின் மேற் படையெடுத்து வந்தன ராயினும், தமிழரசர்களால் தோல்வியுற்று வடக்கு நோக்கித் திரும்பினர் என்று சொல்வர். இத் தமிழப்படையை நடாத்திச் சென்றவன் மோகூருடையான் என்று அகப்பாக்களா லறியப்படுதலாலும், சிலப்

பதிகாரம் மதுரைக்காண்டத்து இறுதிக்கட்டுரையில் ஆரியப் படையைத் தோல்வியுறச் செய்து புகழ்படைத்தவன் பாண்டியன் நெடுஞ்செழியன் என்பதாலும், சேனையை நடாத்தியவன் மோகூர்த்தலைவனென்றும், அவனுக்குமேல் தளகர்த்தனாக இருந்தவன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறனை முதலாம் நெடுஞ்செழியனுமாவான் என்றும் கொள்ளலாம்.

இனி, இவனுடைய வீரமோ, அப்பொழுது இருந்து எல்லாவற்றையும் அறிந்த சீத்தலைச் சாத்தனார் 'வழுதியே, நீ உண்மையில் யாவர்க்கும் மகிழ்ச்சியோடு அருள் செய்யும் தன்மையில் மிகத்தேர்ந்தவன்; பொய் கூறுவதனை அறியும் ஆற்றலுடையவன்; நின்பகைவரை, ஒருபொழுதும் தணிதலில்லாத வெப்பத்தையுடைய செஞ்ஞாயிற்றைப்போன்று, காய்பவன்; எம்மனோர்க்குத் திங்கள்போன்று தண்ணளி தருபவன்' என்று பாடுவதனால் தெளிவாகும்.

## 5. மதுரைமா நகரம்

‘ தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு ’

என்றார். செந்தமிழ் நாட்டுப் புலவர் பெருமக்களாலே புகழ்ந்து பேசப்படும் மதுரைமாநகர், நமது கதாநாயகனை ஆரியப்படை கடந்த நெடுஞ் செழியனது ஆட்சிக் காலத்தே எவ்வாறிருந்ததென அறிந்துகொள்வது அவசியமாகும். முதலில் ஊர் அமைப்பு எவ்வாறு இருந்தது என்று விசாரிப்போம். பட்டணத்தின் நடுவில் மன்னவன் கோயிலும், கோப்பெருந் தேவியினது கோயிலுமுண்டு. இக் கோயிலுள்ளே பல்வகை ஓவியங்களும் பதுமைகளும் நிறைந்த சித்திர மாடமும், சந்திர காந்தக் கற்களால் பாவப்பெற்ற நிலாமுற்றங்களையுடைய மாடங்களும், இசை மண்டபங்களும், பட்டிமண்டபங்களும் உண்டு. காலத்தை இன்பமாகக் கழிப்பதற்கு நீராவிச்சோலைகளும், இளமரக்காக்களும், பூஞ்சோலைகளும் இருக்கும். இளமரக்காவிலே செய்குன்றும், நீரோடைகளும், பூம்பொதும்பர்களும் மாதவி முதலிய கொடிகள் படர்ந்த மறைவிடங்களும் நிறைந்திருக்கும். நீர்நிறைந்த தடாகங்களும் பலவுண்டு. அவற்றின் கரைகளில் அசோகு, சண்பகம், இருவாட்சி, மந்தாரம், மரா, குருக்கத்தி முதலிய பூமரங்களடர்ந்திருக்க அவற்றில் முல்லை, மல்லிகை, மாதவி முதலிய கொடிகள் படர்ந்து பூத்துப் பூம்பந்தரிட்டதுபோலத் தோன்றும் வனப்பு கண்ணைக் கவரும். அந் நீர்ப்பரப்பின் நடுவிற் கட்டப்பட்ட வேலைப்பாடமைந்த

மண்டபங்களு முண்டு. நினைத்தபோது நீர் சுருங்கவும், வேண்டும்போது நீர் நிறைக்கவும் கூடிய இயந்திர அமைப் பினையுடையதா யிருக்கும். இலவந்திகைப் பள்ளிகளு முண்டு. இவைகட்கும் புறம்பே மதிலொன்றிருக்கும். இக்கோயிலை யடுத்து அரசன் குறிப்பறிந்து, அவன்றன் ஆணை செலுத்தும் காவலர் இருக்கை நிரம்பிய வீதியும், பல்வகைப்பண்ட மாற்றல், வாணிபம் முதலியவற்றாலுண் டான செல்வம் கொண்டு, மணிக்கால் நிறுத்தி வைரப் போதிகை வைத்து தேக்கு முதலான மரப்பலகைச் சர மிட்டு, அதன் மேல் தகுந்த மரங்களாலுத்தரம் தூக்கி, மேலே மூன்று, ஐந்து, ஏழு அடுக்குகளையுடைய மாளிகை கள் நிறைந்த வணிகர் வீதியும் சுற்றியிருக்கும். அதனை யடுத்துக் குற்றங்கள் அற்று நல்ல குணங்களையுடைய உயர்ந்த வைரங்களும், மாணிக்கங்களும், மரகதங்களும், புருடராகங்களும், வைடூரியங்களும், கோமேதங்களும், வெள்ளியைப்போன்ற வெண்முத்துக்களும், செவ்வாயைப் போன்ற சிவந்த முத்துக்களும், பிறக்கும்போதே துளை படுதல், கல்லிடுக்கிற்பட்டு முடங்குதல், திருக்குமுறுக்குப் படுதலாகிய குற்றங்கள் நீங்கிய பவளங்களும் நிறைத்து வைத்து விற்கும இடங்களும், இவற்றாலான அணி, பணி முதலானவற்றில் வாணிபஞ்செய்யும் கடைகளும் நிறைந்த இரத்தினக் கடைத்தெருக்களும் உண்டு.

நால்வகைப் பொன்கள் விற்கும் கடைத் தெருக்க ளும்; நுண்ணிய பருத்தி நூலினாலும் பட்டு நூலினா லும் நெய்யப்பட்ட பலவிதமான மெல்லிய ஆடைக் கடைகளும்; இவற்றை யடுத்து அன்றாடம் உண விற்கு வேண்டிய கூலம் கறி, காய்களை நிறுத்து வாங்குவ தற்கு நிறுக்கும் துலாக்கோலை யுடையராயும், மறித்து

அளக்கும் பறையையுடையவராயும், மரக்காலை யுடைய வராயும் தரகு செய்வார் நின்றுழி நில்லாது எங்கணும் தடுமாறும்படி, எக்காலமும் பெரியமிளகுப் பொதியுடனே பாக்கும் நிறுக்கும் இடங்களும் உண்டு. வேற்றுப் பண்டப் பொதிகளும், புல்லு, வரகு, தினை, சோளம், இறுங்கு, தோரை, இராகி முதலியவற்றோடு எள்ளு, கொள்ளு, பயறு, உழுந்து, அவரை, கடலை, துவரை, மொச்சை முதலிய கூலப்பொருள்கள் விற்கும் கூலவீதியுமுண்டு. இவற்றைச் சுற்றி வையம், சிவிகை, மணிக்காலமளி முதலியவற்றைப் பெற்று, அரசனுக்குச் சாமரை, அடைப்பை, உடைவாள் இவற்றை யெடுக்கும் உரிமையும் பெற்று, அரசனது நீராவிச் சோலையிலே அரசனோடிருந்து மாறாத வாழ்க்கையு முடையார் வாழும் வீதிகளும், சிறுதனம், பெருந்தன மென்ற வீதிகளும் ஒருசாருடையது.

இவ்வகநகரைச் சுற்றி விடுபூ, தொடுபூ, கட்டுப்பூ வென்ற மூவகையாகவும் வேறுவகையாகவும் கட்டக்கூடிய மாலைகட்டிகள் தெருவும்; நாவிநெய், கத்தூரி முதலிய மயிர்க்கணியும் சாந்தும், தொய்யில், மார்பு முதலான இடங்களில் எழுதும் வண்ணங்கள் விற்பாரிடங்களும்; கூந்தலுக்குப் புகையூட்டுவதற்குண்டான நேர்கட்டி, செந்தேன், நிரியாசம், பச்சிலை, ஆரம், அகில் என்ற சரக்குகள் விற்பார் மறுகும்; கோட்டம் துருக்கம், தகரம், அகில், ஆரம் என்ற விரை யூட்டுவன விற்பார் இடங்களும், யானைக்கொம்பு பன்றிக்கொம்பு முதலான கொம்புகளால் பலவகைப்பட்ட பொருள்களைக் கடைபவர்களுடைய வீடுகள் நிறைந்த தெருக்களும், ஈர்கொலி என்ற ஈர்வாள், சிப்பு முதலானவற்றைக் கடைவாரது இடங்களும், அல்லிக்கயிறு, குசைக் கயிறு முதலியவற்றை முறுக்கி விற்பாரது தெருக்களும்

நிரம்பி யிருக்கும். ஒருபுறம் வெண்கலக் கன்னார் தெருவும், செம்பு கொட்டிகள் சேரியும், ஊன்றுகோல் கடைவாரும் கருங்கைக் கொல்லரும், மரங்கொல் தச்சரும், பொன் செய் கொல்லர் தெருக்களுமுண்டு. இவற்றிற்கு வெளியே வையம், பாண்டில், தேர் முதலியன செய்வோர் இடங்களும், அவரது கருவிகளான வாள், உளி முதலியவைகளும் நிறைந்த இடங்களும் தெருக்களும் பலவாம். இவற்றின் இடையிலேயுள்ள நாற்சந்தி, பொதியில், அம்பலம் முதலான இடங்களிலே, நுதல்விழி நாட்டத் திறையோன் கோயிலும், உவணச்சேவ லுயர்த்தோன் நியமும், மேழி வலனுயர்த்த வெள்ளை நகரமும், கோழிச்சேவற் கொடியோன் கோட்டமும், இருந்தன. இவைகளினருகே அறவோர் பள்ளியுமுண்டு. இவற்றை யெல்லா முள்ளடக்கி வானளாவிய பெரிய மதிலொன்று கிடந்தது. இச்சுற்று மதிலுட்பட்டதே அகநகராம்.

இம்மதில்வாயில் கோபுரம் கூடியதா யிருந்தது. இவ்வாயில் மேலைக்கடற்கப்பா லிருந்து கொண்டுவரப் பட்ட, காண்பதற்குப் பயத்தைக் கொடுக்கக் கூடிய மொழி யறியாமாக்களாகிய யவனர் (கிரேக்கர்) காவலையுடையது[1] இவர்கள், தாங்கள் இதற்கு முன் காணாத முகமாயிருப் பின், அன்னாரை அகநகருள் விடமறுத்து வெளியில் நிறுத்திக்கொண்டு, சோதனைசெய்து தலைவர்கட்குத் தெரி வித்துப் பின்னரே அகநகருள் விடுவர். மதிலினும் பல வகையான படைகளும், இயந்திரங்களும் அமைக்கப்பட்

1 இவர்கள் குடி பல விருந்தன என்பதற்கு மதுரைக் கருகில் கிரேக்க நாணயம் பல, சில வாண்டுகட்கு முன் மண்ணிலிருந்து எடுக்கப்பட்டதே போதிய சான்றும். பழந்தமிழ் நூல் பல இச் செய்தியை வலியுறுத்தும்.

டிருக்கும். அவற்றின் விரிவை 'அஞ்சி'யில் காணலாம். இம்மதில் வாயிலை யடுத்துத் தாண்டுதற் கரிய நீர் ஆழ்ந்து கிடக்கும் அகன்று பரந்த அகழி யொன்றுண்டு. அதனூடே யானை முதலிய படை செல்லற்குரிய சுருங்கைகளும் அமைக்கப்பட்டு, அகழியின் நீர் பெருகவும், வடியவும் கூடிய வழிகள் பல அமைக்கப்பட்டிருந்தன. இதனை யடுத்து மிளை யென்று சொல்லப்படும் காவற்காடொன்றுண்டு. அந்நாளில் ஒரு பட்டணத்திற்குக் காட்டரண், நீரரண், மதிலரணென மூன்று செயற்கைக் காவலமைக்கப்பட்டிருந்தது. இந்நகரிலும் அவ்விதமே உண்டு.

இப்புறங் காவலாய கட்டுவேலியை யுடைய காவற் காட்டுக்குப் புறம்பே, தாபதர் தங்குதற்குரிய சோலை யமைந்திருந்தது. இதனை யடுத்தே புறஞ்சேரிக ளிருந்தன. ஆயர்சேரி முதலியன இவற்றின் பாற்படும். இவ்வடைவே மதுரைமாநகரிருந்தது. இம் மதுரைமாநகரானது,

> 'இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
> வல்லரணு நாட்டிற் குறுப்பு.'

என்றபடி அமைந்திருந்தது.

## 6. நாட்டியல்

நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு.

என்றார் மாதாநுபங்கி. நாட்டினுள்ளார் ஒரு பொருள் விரும்பித் தேடி வருந்தாமல் தானே வந்தடையுஞ் செல்வத்தையுடையது நாடென்றார். மற்றவை நாடாகா; எனவே நீரினால் வளப்பமுற்ற வயல் சூழ்ந்து மிகுந்த விளைவினையுடையதாயிருப்பது என்பது பெறப்படும். மதுரைமா நகரிருந்த நிலை முன்னர் விவரமாகச் சொல்லப்பட்டதினின்றும் அந்நகரின் நிலை ஒருவாறு மனத்தகத்தேபடும். அதனை யொத்தே நாடுமிருந்திருக்குமென்று நாம் ஊகித்தறிவது மிகையாகாது.

நகரினுள்ளார் தாம் வாழ்தற்கு இன்றியமையாததான வீடுகளை இடுமண்ணாற் கட்டியும் சுடுமண்கொண்டு வீடு கட்டியும் வாழ்ந்து வந்தனர். வீடுகள் வரிசையாகவும் ஒழுங்காகவும் கட்டப்பட்டிருந்தால் தெருக்கள் ஒழுங்குடையனவாயும் நீண்டுமிருந்தன. வீடுகளில் சுதை தீட்டப்பட்டிருக்கும். அதன்மேல் பலவகை ஓவியங்கள் வரையப்பட்டிருக்கும். தெருப் புறங்களிலும் கண்ணைக் கவரத்தக்க பல்வகைச் சித்திரங்கள் சித்திரிக்கப்பட்டிருந்ததோடு பூரண கும்பங்கள் தீட்டப்பட்டிருக்கும். வீடுகள் அகன்ற முற்றங்களை யுடையதாயிருக்கும். அவ்வாறு இருந்தாற்றான் மக்கள் சுகத்துக்கு இன்றியமையாததான சுத்தமான காற்றும் கதிரவனொளியும்பட்டு, நோய்க்கிடமாகும் ஈரம் நாற்றம் முதலாயின இரா. மூங்கிலும் ஓடுகளுங்கொண்ட கூரைகளையு முடையனவே அக்காலத்திலுள்ள நடுத்தரத்தவர் வீடுகளும்.

செல்வவான்களுடைய இருப்பிடங்களோ எனில் மாட மாளிகைகளாகும். அவை சுடுமண்களானவை. ஆயினும் மூங்கில், ஓடு முதலாய கூரையின்றி மேலே தளங்களை யுடையன. அவற்றில் சந்திரகாந்தக் கல்லாற் பதிக்கப்பட்ட நிலாமுற்றங்களும் உண்டு. சுற்றிலும் மான்கண் போன்ற சாளரங்களையுடையன. இவைகட்கு அந்நாளில் மான்கட் காலதர் என்று பெயர். இஃதன்றிச் சுவற்றிலே இடைவெளி யுடையனவாயும், அவற்றை மூடப்பெரிய கனத்த மரங்களா லான கதவுகளையுடையனவாயும் அவற்றிற் பல புழைகளை யுடையனவாயு மிருக்கும். அவையே பலகணியாம். மாடங் களிலே மேன்மாடியி லிருப்பார் வெளியிலுள்ள காட்சிகளைக் காண்பதற்குத் தகுதியுடையதாகச் சேர்த்துக் கட்டப்பட் டிருப்பதற்குச் சூளிகை யென்பர். ஒவ்வொரு மாடமும் ஒன் பது வரையிலுள்ள பல அடுக்குகளையுடையனவா யிருக்கும்.

மாளிகைகள் குறுநில மன்னரும் பெருவாணிகரும் உறையுமிடமாகும். பலவித பழக்கப்பட்ட விலங்குகள் தங்கு வதற்கு இடமுடையதான முன்னிடத்தை யுடையதாய்; உள்ளடங்கிய மாடங்கள் உண்டு. இவைகள் ஆச்சா, தேக்கு, கருங்காலிபோன்ற விலையுயர்ந்த மரங்களாலான வேலைப்பாட மைந்ததாகும். தென்னோலைகளாலான கூரைவீடுகள் நகரில் இருந்ததாகப் பழந்தமிழ் நூல்களிற் படிக்கின்றோ மில்லை. ஆயினும் அந்த மாதிரியான வீடுகள் இல்லாம லிருக்கா தென்றே சொல்லக்கூடுமாயினும் பெரும்பான்மையாக இரா வெனலாம்.

நாட்டிலுள்ளோர் தனித்தும் சேர்த்தும் இடுமண் ணாலும் கடுமண்ணாலும் வீடுகட்டி வாழ்ந்து வந்தனர். மாட மாளிகைகள் பெரும்பாலனவாகா. கூரைகள் மூங்கில் ஓடு, ஓலை இவற்றால் வேயப்பட்டனவே.

நாட்டிலுள்ளோர் பயிரிடுதலும், பலவகை உணவுப் பொருள்களை விளைவித்தலும், ஆடு மாடு மேய்த்தலுமாம். நாட்டிலுண்டான பொருள்களை நகரிற் கொண்டுபோய்க் கொடுத்தும், மாறியும், தங்கட்கு இன்றியமையாதனவற்றைக் கொண்டும் வாழ்ந்தனர். நகரமாக்கள் தொழில் 'மதுரையம்பதி'யில் விரிவுற விளக்கப்பட்டிருக்கிறது.

உடையில் பலவகை யுண்டு. பட்டாடை, பருத்தி யாடையு மிருந்தன. ஆடவன் உடுப்பது நான்கு முழம், அது உடை, உடுக்கை என்பது. மேலே போர்ப்பதும் நாலு முழமே. அதுவே மேலாடை, 'உடுக்கை இழந்தவன் கைபோ'லென்ற திருக்குறளே இதற்கு எடுத்துக் காட்டாகும் பட்டாடையு மூடுப்பதுண்டு. மன்னனும் மன்னனைச் சார்ந்தோரும் உடலை மூடி வந்தனர். அதுவே அங்கியெனப் பெயர் பெற்றது. பெண்டிர் ஆடவரைக் காட்டினும் நீட்டமான விலையுயர்ந்த உடைகளை யுடுத்தி வந்தனர். அன்று தொட்டு இன்றுகாறும் இவர்கள் உடுத்தும் உடையே இதற்குச் சான்று பகரும். உயர்ந்தோர் 'கச்சு' என்ற இரவிக்கை யணிவதுமுண்டு. துகில், நுண்டுகில், கோபம்போன்ற பட்டாடைகளும் கரியல், பாடகம், கோங்கலர்போன்ற பருத்திப் புடைவைகளும் சிமாட்டிகளாலும், பஞ்சு,. இரட்டு முதலான கனத்த முரட்டுத் துணிகளான அறுவைகள் கீழோராலும் உடுக்கப்படும் ஆடையாம்.

அந்நாளில் கட்குடியை அறியார். சிறிய கட்பெறினே எமக் கீயுமன்னே; பெரிய கட்பெறினே யான் பாடத்தா மகிழ்ந் துண்ணுமன்னே' என்பது போன்ற அடிகளைக்காட்டி அக்காலத்தில் கள்ளுண்டல் வழக்காறுடைய தென்பர் ஒரு சாரார். கள் என்றது தேனே. தேனெடுத்தலும், குடித்தலும் குறிஞ்சி நிலமக்கள் செய்கை. அச் செய்கையைப் புலவரும்

பலபடக் கூறினரென்பர் மற்றொரு சாரார். ஒழுக்க மிக்கிருந்த அக்காலத்து ஒழுங்கீன மென்றும், மகா பாதகமென்றும் கூறுமொரு தீய செய்கையை மக்களனைவரும் செய்ய ஒருப்படாராகலானும், பெருந்தகையெனப் பன்னூட்டவரும் புகழும் அறப்பெருங்கடலாம் வள்ளுவனாரும், கட்குடியென்பதொன்றிருக்குமாயின் கூறுதொழியாராகலானும், பின்னையவையே வலியுடையதென்க. புலாலொடு கூடிய சோற்றையுண்பது இயற்கையாகக் காண்கிறது. பிற்றை நாளிலேதான் 'கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி யெல்லாவுயிரும் தொழும்' என்ற பொய்யில் வாசக முண்டாதற்கு இடமேற்பட் டிருக்கவேண்டும்.

இறந்தோரை ஈமத்தில் எரியிலிடுதலும் புதைத்தலுமக்காலத்தேயே நடந்து வந்ததொரு பெருவழக்கு. எல்லோரு மெரியிலிடுதலுமில்லை; எல்லோரும் புதைப்பதுமில்லை. கணவன் உயிர்துறந்தால் அன்பு காரணமாக அவன் மனைவியுயிரும் நீங்கும். இவளைத் தலையாய அன்புடையாளென்பர். கணவனோடு உடன்கட்டை யேறுதல் அதனினும் மிகமிகத் தாழ்ந்ததொரு வழக்கு. கணவனை யிழந்தோர் உயிர் வாழ்தலுமுண்டு. அது கைமை நோன்பென்பர். இந்நோன்புடையார் தலைமயிரைக் குறைத்து, குறிய வளையைக் களைந்து நீர்ச்சோற்றோடு வேளையிலையும் புளியும் எள்ளையுங் கூட்டிச் சமைத்த வேவை யுண்ணலும், பாயின்றி வதிதலும், அல்லியரிசி யுண்ணுதலும் வழக்கம். இறந்தவருக்கு உணவுவைத்துப் படைத்தலுமுண்டு. இன்னும் இது போன்ற பலவகைப்பழக்க வழக்கங்களைப் பழந்தமிழ் நூல்களைப் படிப்பதால் அறியலாம்.

# அதிகமான் நெடுமான் அஞ்சி

## 1. குடி மரபு.

நீர் சூழ்ந்த இந் நிலவலயத்திலே, கல்வி, பொருள், மக்கள் என்ற முச்செல்வங்களையும் பெற்று, இல்லை என்னாது கொடுத்துப் பூதவுடம்பு அழிவுறினும், புகழுடம்பு அழியாது நிலை நிறுத்தியவர்கள் வள்ளல் எனப்படுவர். வள்ளல் என்பதற்கு வரையாது கொடுத்தவர் என்று உரை காண்பர் உரையாசிரியர்கள். ஒவ்வொரு காலத்து உடனிருந்தவர்களைச் சுட்டி இவ் வள்ளல்களைத் தலை, இடை, கடை யெனப் பாகுபாடு செய்வர் பெரியார். குமணன், சகரன், சகாரன், செம்பியன், துந்துமாரி, நளன், நிருதி இந்த எழுவரையும் முதலெழு வள்ள லென்றும், அக்குரன், அந்திமான், அரிச்சந்திரன், கன்னன், சந்திமான், சிசுபாலன், தந்தவக்கிரன் ஆகிய எழுவரை இடை எழு வள்ளலென்றும், எழினி, ஓரி, ஆய், நள்ளி, பாரி, பேகன், மலையன் ஆகிய இவர்களைக் கடையெழு வள்ளலென்றுங் கூறுப. இதனையே,

> "மிக்கசெம்பியனேகாரிவிராடனேநிருதிதானுந்
> தக்கதுந்துமாரிதானுஞ்சகரனுநளனுந்தாமுன்
> அக்குரன்சந்திமானேடந்திமான்சிசுபாலன்னே
> வக்கிரன்கன்னன்சந்தனிடைவள்ளல்வகுத்தவாறே."

‘பாரியாயெழினிநள்ளிபசுந்தொடைமலையன்பேகன்
ஓரியேகடையிலுற்றோருறுபொருடண்டாதீந்துங்
வாரியிலிரந்தோர்க்கிட்டும்வளர்புகழ்துதிக்கவீந்தும்
பேரியல்வையமெண்ணப்பெற்றனர்முப்பாலாகும்.’

எனச் சூடாமணி நிகண்டுடையாரும் கூறுவர். இவ் வடை வினருள் காரியைக் குமண னென்றும், விராடனைச் சகார னென்றும் கொள்ளவேண்டும் போலும்.

உச்சிமேற் புலவர் கொள்ள, விரும்புவார்க் கினியராம் மெச்சுபுகழ் நச்சினார்க்கினியரால் உரை வகுக்கப்பட்ட பத்துப் பாட்டினுள் ஒன்றான சிறுபாணாற்றுப்படையிலே “பருவம் பொய்யாமல் மழைபெய்து வளப்பத்தை யுடைய காட்டிடத்தே மயில் கூவ, அது குளிரால் கூவிற்றென்று நினைத்து, அதற்குப் போர்வை யீந்த நல்ல வளப்பமான நாட்டையுடைய பேகன் என்னும் வள்ளலும்; சுரும்புண்ணும்படி நறிய பூத்தேனைத் துளிக்குஞ் சுரபுன்னையை யுடையதாகிய நெடிய வழியினின்ற சிறிய பூக்களையுடைய முல்லைக்கொடி தடுக்க, அது வேண்டிற்றாகக் கருதித் தானூர்ந்து சென்ற பெரிய தேரை நிறுத்திப்போன, பரம்பென்னு மலைக்கரசனான பாரியும்; குதிரையோடே தனது நாட்டினையும் கொடுத்த காரியும்; பாம்பு ஈன்று கொடுத்த ஒளி விளங்கும் நீல நிறத்தினையுடைய உடையினை ஆலின் கீழிருந்த இறைவனுக்குக் கொடுத்த, வலிபொருந்திய தோள்களையும் கேட்போர்க்கு விருப்பத்தைச் செய்யும் நன்றாகிய சொல்லினையுமுடைய ஆயும்; பெருமையை யுடைய மலையிற் கமழும் பூக்களையுடைய பக்கமலையிலே நின்று அழகுபெற்ற கருநெல்லியினது அமிழ்தின் தன்மை தன்னிடத்தே யுண்டான இனிய பழத்தைத் தான் நுகர்ந்து உடம்பு பெறாதே ஔவையாருக்குக் கொடுத்தவனும், தன்னிடத்து உறையும்

கொற்றவையது வலியினையுடைய சினம் நின்றெரியும் ஒளி விளங்கும் நெடிய வேலினையும், ஆரவாரத்தை யுடைய கடல் போலும் படையினையுமுடைய அதிகன் என்னும் வள்ளலும்; தன் மனத்து நிகழ்கின்றனவற்றை மறையாது கூறி நட்புச் செய்தோர் மனமகிழும்படி அவர்கள் இல்லறம் நடாத்துதற்கு வேண்டும் பொருள்களை நாடோறும் கொடுத்த நள்ளியும்; செறிந்த கொம்புகளிடத்தே நறிய பூக்கள் நெருங்கின இளமையை யுடைய முதிர்ந்த சுரபுன்னையையும், குறிய மலைகளையுமுடைய நன்றாகிய நாடுகளைக் கூத்தாடுவோர்க்குக் கொடுத்தவனும், காரியென்னும் பெயரை யுடைத்தாகிய குதிரையை யுடைய காரிப்பெயரை யுடையவனோடே போர் செய்த ஓரியென்னும் பெயரை யுடைத்தாகிய குதிரையை யுடைய ஓரி யென்னும் வள்ளலும் என்ற எழுவரையும்' என்று காணப்படுகிறது. இக்கடையெழு வள்ளல்களிலே நிகண்டு நூலுடையார் எழினி என்று கூற, சிறுபாணாற்றுப் படையாசிரியர் அதிகன் என்று கூறுவது பொருந்துமோ, இது வேறொருவரை யன்றோவெனின், அன்று. நிகண்டுடையார் கூறுவது போன்றே, அஞ்சி யென்பான் காலத்து வசித்த பெருஞ்சித்திரனார் என்னும் புலவர் 158-ஆம் புறப் பாட்டில் இவனை எழினி என்றழைப்பர். போளூர் தாலூகாவிலுள்ள திருமலை என்ற இடத்திற் காணப்படும் கல்வெட்டொன்றில், 'சேரவங்கிசத்து அதிகைமான் எழினி தர்ம யக்ஷரையும் யக்ஷியையும் நிறுத்தினன்' என்று காணப் படுகிறது[1]. பொகுட்டெழினி என்று ஒரு பெயர் புறநானூற்றில் காணப்படுகிறது. இப் பெயருடையானை அஞ்சியின் மகன் என்பர். கல்வெட்டுக்களில் விடுகாதழகியான், விடுகாதழகிய பெருமாள் என்றும் இராஜராஜன் என்றும்

1. S. I. I. I. No. 75 & 76.

சொல்லப்படும் இருவர் தங்களை அதிகன் மரபினரென்றும், தகடையர்கோ னென்றும் சொல்லிக் கொள்ளுகின்றனர். திருத்தொண்டர் புராணமென்னும் பெரிய புராணத்திலே புகழ்ச்சோழர், உலகெலாம் காக்கின்ற பெருமானாய் அரசாளுகின்ற காலத்தில், அவர்க்குத் திறை கொடாது நிறுத்திக் கொண்டவன், கருவூருக்கு 'அணித்தாக ஓங்கெயில் சூழ் மலையரணத்து உள்ளுறைவான் அதிகனவன்' என்று அரசர்க்கு அமைச்சர் கூறினர் என்று சொல்லப் படுகிறது. இவைகளாலே அதிகன், அதிகைமான், அதிகமான் அதியன் என்பன குடிப்பெயர் என்றும், எழினி பொகுட்டெழினி என்பன இயற்பெயர், அல்லது தனிப்பெயரென்றும் காண்கிறது. இவனை வென்ற சேரனது செலவைக் குறித்துத் தகடூர் யாத்திரை யென்று ஒருநூல் புலவர் பெருமானை அரிசில் கிழாரால் பாடப்பட்டது. அந்நூலினுள்ள சிற்சில பாக்கள் மட்டுமே இப்பொழுது படிக்கக் கிடைக்கின்றன. இவ்வளவு பழமையும் பெருமையும் வாய்ந்ததொரு குடி பின்னும் தோன்றி,

'வெற்றி யதிகா விடுகா தழகியாய்
கொற்றவனே தென்றகடைக் கோவேநீ — சென்றநாட்
காடவனே மாகதனே கங்கனே வெங்காளி
லோட வலராரோ வுரை[1]'

என்று சிறப்போடு வாழ்ந்ததொரு பெருங்குடி யாகையால் அதனிற்றோன்றிய அஞ்சியினது வரலாற்றை ஒருவாறு ஈண்டு வரைவாம்.

இச்சரித்திர நாயகன் முன்னர்க் கூறியபடி அதிகர் மரபினனாதலின், அதிகன் எனவும், அதிகமான் எனவும், வேறொரு அடையுமின்றி மானைச் சுட்டியும், பகைவர் யாவ

1. 552 of 1906.

ரும் கண்டு அஞ்சுதற்குரியனுயிருந்தமையின் அஞ்சியென்ற காரணப் பெயரினை யுடையவனுயும், இதற்குஉதவியாகவுள்ள வேலைத் தாங்கியவனுயும், வேற்படை மறவரையுமுடையவனு மாகையால் 'பல்வேலஞ்சி' என்றும், இவன் மரபையும் வீரத்தையும் சேர்த்து அதியமானஞ்சி என்றும், அம்மரபிற் பெருமையுடன் வாழ்ந்தமை பற்றி அதியமான் நெடுமான் அஞ்சி என்றும் சிறப்பிக்கப்படுவான். தொகை நூலிலொன்ருன பதிற்றுப் பத்து 32-ஆம் பாட்டின் அரும்பதவுரையில், அவ்வுரைகாரர் இவனை நெடுமிடல் என்று கூறுகின்றூர். இது எக்காரணம்பற்றி எழுந்ததென இதுபோது கூறுவதற்கில்லை. கல்வெட்டு ஒன்றில் எழினியென்று காணப்படுவதாலும், அஞ்சியின் மகன் பொகுட்டெழினி என்று காணப்படுவதாலும், இவன் உடன் காலத்துப் புலவர் ஒருவர் இவனை எழினி யென்றழைப்பதாலும், நிகண்டுடையார் எழினி என்று கூறுவதாலும்[1] இவனது இயற்பெயர், தாய் தந்தையர் தந்த பெயர் எழினி யென்று சொல்லக் கிடக்கின்றது. இவ்வியற் பெயரையும் மரபையும் சேர்த்து எழினி அதியமானென்று கூறுவதுமுண்டு. மான் என்பது கல்விமான், பெருமான் என்பவற்றில் காணப்படுதல்போல் சொல்லின் ஈற்றில் நின்று பெருமையைக் குறிப்பதொரு விகுதியாம்.

அதிகர் ஆண்டவிடம், தற்கால மைசூர் இராச்சியத்தில் ஒரு பகுதியும், கோயம்புத்தூர், சேலம் ஜில்லாவும் அடங்கியதாகும். இது பல கூற்றங்களாகப் பிரிந்திருந்தது. 'கொல்லிக்கூற்றத்து நீர்கூர்மீமிசை, பல்வேற்றூனை யதிகமான்' என்று பதிற்றுப்பத்திலும், 'மால்வரைகமழ்பூஞ்சாரல்' என்று

1. திருமலைக் கல்வெட்டில் எழினி என்பது திரையென்று பொருள்படுவது கொண்டு வடமொழி வாணர் யவநிகா என்று மொழி பெயர்த்திருப்பது காண்க. (S. I. I. Vol. I, No. 75 & 76.)

சிறுபாணாற்றுப்படையிலும் காணப்படுதலாலும், இவனது நாடு கொல்லிமலை வரையில் பரவியிருந்ததென்பது விளங்குவதோடு, அதனைச் சார்ந்த இடத்திற்குக் கொல்லிக்கூற்றமென்றும் கூறப்பட்டது. இந் நாட்டிற்குத் தலைமைப் பட்டணமாயிருந்தது தகடூர் என்னும் பதி. இஃது இக்காலத்து, தர்மபுரி என வழங்குகிறது. காலஞ் சென்ற கனகசபைப் பிள்ளை, 'மழவர்களுக்குத் தலைவனான அதிகமான் சேலம் ஜில்லாவி லுள்ள தகடூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டனன்' என்பர்.

'சேர வங்கிசத்து அதிகைமான் எழினி' என்றும், 'ஸ்ரீமத் கேரள பூபிருதாயவதிகாநாம்நா' என்றும் காணப்படுவதாலும், இவன் சேரரைச் சேர்ந்தவனென்பது உண்மை. ஆதலினது பனை மாலையே இவனுக்கும் மாலையாகுமாயினும், சிவபிரானிடத்துப் பேரன்பு பூண்டவனாகையால், அவருக்குப் பெரிதும் உகப்புடையதான வில்வமென்னும் கூவிளத்தைக் கொண்டு கட்டின மாலையுமுடையானென்று 158-ஆம் புறப்பாட்டால் அறிகிறோம். இங்ஙனம் இவன் மதத்திற் சைவனாகவே, இவன் எவ்வாறு அருக மதத்தைச் சார்ந்த தருமவியக்கரையும், இயக்கியையும் திருமலையில் நிறுத்தியிருப்பான், அல்லது இவன் அருக மதத்தினனென்பார்க்கு, அந்நாள் மத வைராக்கியமும், புறச் சமய நிந்தனையுமற்றதென நூல்களினால் விளங்குகின்றது எனலாம். இற்றைக்கு ஆயிர வாண்டுகட்கு முன்னர்க்கூட, சோழவரசர்கள் புற நாட்டு வேந்தர் வேண்டுகோட் கிணங்கிப் பௌத்த, சமணப் பள்ளிகட்கு வேண்டும் நிவந்தங்களமைத்தன ரென்பது சரித்திரம் ஒப்புக்கொள்ளும் ஒரு செய்தியாம். ஆகவே அரசன் ஒரு சமயத்திற் பற்றுடையனாயினும் புற மதத்தை ஒறுக்கும் பண்புடைய னல்லன். இதனாலே இவ்வஞ்சியும் இதற்கு விலக்காயிருக்க வியலாது.

சேரனைப்போலவே விற்கொடியும், வில் இலாஞ்சினையு முடையவன். இவனது பின்னோர் தம் கல்வெட்டுக்களில் 'வில்' உருவைப் பொறித்துளார்[1].

இவனது காலம் சிலப்பதிகாரம் பாடிய இளங் கோவடிகளின் முன்னவனான சேரன் செங்குட்டுவன் காலத்தோ, அதற்கு முன்னோ பின்னோ இருந்திருக்க வேண்டுமென்றும், அது கி. பி. இரண்டாம் நூற்றாண்டுக்குப் பிற்படாதென்றும் கடைவள்ளலார் கால நூலாசிரியர் காட்டியுள்ளார். ஆகவே இவன் கி. பி. முதலிரண்டாம் நூற்றாண்டுகளில் வதிந்தவனென்பதும், அதிகமா நாட்டுக்குத் தலைவனென்பதும், தகடூரைத் தலைநகராக உடையவனென்பதும் இந்த அதிகாரத்தில் அறிந்தோம்.

---

1. Inscription numbers 545 of 06. 552 of 06.

## 2. கல்வி நிலை

இவன் செல்வத்து ளெல்லாம் தலையாய கல்விச் செல்வம் நிரம்பப் பெற்றிருந்தா னென்பது, பொய்யில் புலவரான திருவள்ளுவ நாயனாரது உடன்பிறப்பாகக் கருதப்படும் ஔவைப் பிராட்டியாரைத் தம்முயிர் நட்பினளாக வுடைமையால் அறியலாம். தகடூர் யாத்திரை என்னும் நூல் பாடிய பொன்முடியார், அரிசில் கிழார் முதலியவர்களாலும் இவன் பாடப்பட் டிருக்கின்றான். ஆயினும் பொன்முடியாரும் அரிசில் கிழாரும் சேரர் கோமானான பெருஞ்சேரல் இரும்பொறையோடு இவ்வஞ்சி பகைக்குமுன் நட்பாளனாக இருந்திருக்க இயலுமேயன்றி, இவர்கள் வாழ்நாள் முழுவதும் இருந்திருக்க வியலாது; இதனை ஆராயுமிடத்து, அதிகமானாற் சிறப்பப் பரிசிலடைந்து முனைப்போரில் வந்த பெரும்பாக்கனைக் கண்டு அதிசயமடைந்த கணைக்காலிரும்பொறையை நோக்கி அரிசில் கிழார், 'உவந்த மனத்தினனாய் ஈண்டுக் காணப்படும் இவன் மத நாறுகின்ற யானையினையும், அடங்காத குதிரைகளையு முடையான்; இளையோனென எண்ணாதே; இவன் கோபித்தால், ஆகாயமளாவிய பெரிய மலையின்கண்ணே வீழ்கின்ற மழையை யொப்ப, பெரிய யானைகள் எறியப்படுதல் மட்டுமோ, நம்மை நோக்கி வந்து வேலைத் திரித்திட்டு நகினும் நகும்' என்னுங் கருத் தமைத்துப் பாடிய பாட்டொன்று, தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் உதாரணச் செய்யுளாகக் காணப்படுவதால் இவ்வுண்மை தெற்றென விளங்கும். ஆயினும், அரிசில் கிழார் மாத்திரம் இவன் துறக்க மெய்திய காலை இவனது பெருமையைப் பலபடப் பாராட்டியுள்ளார்.

---

1. தொல். புறம் 63. மேற்கோள்.

பொன்முடியாரோ எனின், 'இன்று பகற்பொழுது படு வதன் முன் பொன்போலு மாலையுடையவனான இரும்பொறை பகைவனது (அஞ்சியினது) கோட்டைக்குட் சென்றன்றி யுண்ணானென்பது திண்ணம்; அதற்குள் தென்றிசைக் கடவுட்கு என்ன வந்தது' என்னுங் கருத்துக் கொண்ட ஒரு செய்யுளைக்[1] கூறுவதாலும், அஞ்சியும் புலவரும் நட்பினரா யிருத்தல் இயலாததொன்றும்.

மகட்பாற் காஞ்சிக்கு இலக்கியமாக 336-ஆம் புறப் பாட்டைப் பாடியவரும், வையாவிக்கோ பெரும்பேகன் தன் இல்லக்கிழத்தியான கண்ணகியை நீக்க அவனை மறுபடி சந்து செய்வித்தவரும், பதிற்றுப் பத்தில் 5-ஆம் பத்தினால் சேரன் செங்குட்டுவனைப் பாடியவரும், கபிலரின் பெருநட்பி னருமான பரணர் இவ்வள்ளலுக்குப் பெருநட்பாளராவார். இவன் திருக்கோவலூரை வென்றபொழுது பாடிய அகப் பாட்டு 372-ல் இச்செய்தி இனிது பெறப்படும். பெருஞ் சித்திரனார் என்றொரு புலவரையும் ஆதரித்தவனாவான். அஞ்சில் ஆந்தை மகள் நாகையார் என்றொரு புலமைசான்ற மெல்லியலாரையும் ஆதரித்தவன்.

ஆகவே, இவன 'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' என் பதற் கிணங்கக் கல்விச்செல்வம் நிறையப்பெற்றவனும் அதனை மேன்மேலும் விளங்கத் துணைக்காரணமாகப் பொருட் செல்வ முடையவனாயு மிருந்து; கல்வியிற் பெரியாரானபல சுற்றத்தாராலும் சூழப்பட்டிருந்தவனாவன்.

---

1. 'இற்றைப் பகலு ளெயிலகம் புக்கன்றிப்
பொற்றாரான் போனகங் கைக்கொள்ளான் - எற்றுங்கொல்
ஆறுதல் வெம்பசித்தீ யாற வுயிர்பருகி
மாறா மறலி வயிறு' (தொல். புறம் 67 உரை.)

# 3. வீரம்

மன்னனே, குறுநில மன்னனே யாவனாயினும் அவன் தன் கோலின்கீழ் வந்த குடிகளைக் காப்பாற்றி அவர்கள் சுகமாக வாழும்படிப் பார்க்க வேண்டும். அப்படிக் கண்காணிப்பவனது கோலஞ்சியே குடி வாழுமென்று பெரியார் கூறுவர்.

அங்ஙன மில்லாவிடின் குடிகள் பயப்படவு மாட்டார்கள். அவனது உடன் வேந்தர்கள் கூட்டுறவும் செய்யார். நாட்டினையும் மாற்றார் கைக்கொள்வர். தகுந்த அமைச்சர்களையும், அவர்களது உதவியாற் காக்கப்படும் நல்ல நாட்டினையும், நாட்டின் வளப்பம் காரணமாக உண்டான பொருளையும், நாடு நகரங்களைப் பாதுகாத்தற்குரிய பலமான அரணையும், தகுந்த படையையு முடையானே நற்காவலனென்பதை வலியுறுத்தச் சேந்தப்போதார்,

> "படைகுடி கூழமைசசு நட்பர ணாறு
> முடையா னரசரு ளேறு"

என்று கூறினர். அவ்வாறாயினும் அரசன் மனத்தின்கண் வலியுடையனா யிருந்தாலன்றி, 'வயப்படை மற்றென்பயக்கு மாணல்லவற்கு.' நமது சரித்திர நாயகனே அவ்வாறன்றி அஞ்சா வீரனாய், 'பத்திமை சான்றபடையும் பலர்தொகினும், எத்துணையு மஞ்சா வெயிலரணும்—வைத்தமைந்த, வெண்ணி லுலவா விழுநிதியும் இம்மூன்றும், மண்ணாளும் வேந்தற் குறுப்பு' என்றபடி, எக்காலத்திலும் பின் வாங்காத படையையும் நல்ல வுறுப்புக ளமைந்த மதிலையும், நற்பொருளையு முடையவனாயிருந்தான்.

இவன் ஒரு அஞ்சா வீரன் என்பதனைப் பின் வருவது கொண்டு அறியலாம். இவ் அஞ்சி,

'பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற'

என்ற குறள் வெண்பாவின் கருத்தை நன்குணர்ந்தவன். தன் இல்லக்கிழத்தி வெகுநாளாக வயிறு வாய்க்கப்பெறுதிருந்து பின்கருவுற்றிருப்பதை யறிந்தும், அவளோடு அளவளாவி யிருத்தலைவிட்டுப் பகைப்புலம் சென்றனன். மகப் பேறு உண்டாயிற்றென்ற செய்தி கேட்ட காலத்து, பாசறை நீங்கி ஊர் புகுந்ததைக் கண்ட ஔவைமூதாட்டி, 'கையின் கண்ணது வேலே; காலின் கண்ணது வீரக்கழல்; உடம்பின் கண்ணது வேர்ப்பு; மிடற்றின் கண்ணது ஈரம் புலராத பசியபுண்; பகைவர் தொலைவதற்கு ஏதுவாகிய வளரும் இளைய பனையினது உச்சிக்கண்ணே வாங்கிக் கொள்ளப்பட்ட ஊசித் தன்மையைப் பொருந்திய வெளிய தோட்டையும் வெட்சியினது பெரிய மலரையும், வேங்கைப் பூவுடனே விரவிச்சுருண்ட கரியமயிர் பொலிவுபெறச் சூடிப் புலியொடு பொருத வலிய யானையை யொப்ப இன்னும் நீங்காது சினம். ஆதலால் ஐயோ, பிழைத்தாரல்லர், இவனைச் சினப்பித்தவர்கள்; பகைவரை வெகுண்டு பார்த்த கண் தன்னுடைய புதல்வனைப் பார்த்தும் சிவப் படங்காவாயின[1]' என்ற கருத்தடங்கிய புறச்செய்யுளைப் பாடியதனின்றும் விளங்கும்.

இவனால் ஏவப்பட்டுத் தொண்டைமானுழைச் சென்ற ஔவை மூதாட்டியாரை, அவன் அழைத்துச் சென்று தன்னுடைய படைக்கலக் கொட்டிலைக் காட்டிய விடத்து, அப்பாடினி சினங் கொண்டு இறுமாந்து, 'அரசே! இவைதாம்

1. புறநானூறு 100.

பீலியணியப்பட்டு, உடலிடம் திரண்டவலிய காம்பு அழகு பெறச் செய்யப்பட்டு, நெய் பூசப்பட்டுக் காவலுடைய பெரிய ஆயுதச்சாலைக் கண்ணேயுள ; எம்பெருமான் அஞ்சியி னுடையவைகளோ எனின், பகைவரைக் குத்துதலான் கங்கும் நுனியும் முறிந்து, சொல்லனது பணிக்களரியாகிய குறிய கொட்டிலிடத்தவாயின எந்நாளும்[1]' என்ற பொரு ளமைந்த செய்யுளொன்றைப் பாடியதால் இவனது போர்த் திறம் வலியுறும். இவன், 'இல்லிறைச் செரீஇய ஞெலிகோல் போலத் தோன்றாதிருக்கவும் வல்லன் ; மற்று அதன் கான்று படு கனையெரிபோலத் தோன்றவும் வல்லன் தான் தோன்றுங் காலே'[2] என்று ஔவை புகழ்ந்தது சாலப் பொருந்தும். இவனுக்கு, இவன் வழிபடு கடவுளான கொற்றவை யருளால் வாளொன்று கிடைத்தது. அதனுதவி கொண்டே பகை வரை வெட்டி வீழ்த்துவான் ; இதனாலேயே புலவர் பலரால், 'வலம்படு வாய்வாள் ஏந்தி' என்று புகழப்படுகிறான்.

இவனது வீரம் இங்ஙனமாக, இவனது படையின் தன்மையோ, 'எப்பெற்றிப் பட்டோராயினும், அணியையும் தூசியையுங்கொண்டு அவனோடு பொருவோமென்று சொல் லுதலைப் பாதுகாமின், என் இறைவனாகிய அவனைக் காண் பதற்குமுன்'[3] என்றும், 'இழையணிப்பாலிந்த விறலீ! என்னோடு பொருவாரும் உளரோ நும்முடைய பெரிய இடத் தினையுடைய நாட்டின்கண் எனவோர் அரசன் வினவ, அதற்கு இளைய வலிய வீரரேயன்றி மன்றில் தூங்கும் முழவில் காற்றுப்பட்ட மாத்திரத்தில் எழும் ஒலியைக் கேட்ட பொழுது அது போர்ப்பறையெனப் போருக்கு எழும் அஞ்சி யும் உளன்[3],' என்று பாடுதலினாலும், இவனடைந்த வெற்றி களாலும் பெறப்படும்.

1. புறம். செ. 95. 2. புறம். செ. 315. 3. புறம். செ. 88, 89.

இரண்டாவதான மதிலரணை, ஊருக்கு முன்னதாக அடர்ந்த காடுகளாகிய காட்டரணையும், இயற்கையிலமைந்த மலையரணையுமுடையது. இம்மதிளரண் நூறு பேர்களை யொருங்கே கொல்லும் நூற்றுவரைக் கொல்லியும், பகைவரைத் தலைகீழாகத் தூக்கியெறிகின்ற நூக்கியெறி பொறியும், பேய்கள், யானைகள், காணபபடின் அவைகளை விழுங்கும் பாம்பு என்னும் பொறியும், கழுகு முதலியவைகளைத் தன்னுளகப்படுத்தும் தொடர் சங்கிலி என்னும் பொறியும் சிறு வேல்களை யெறியும் குந்தமென்ற பொறியும், கோண்மா என்ற புலிப்பொறியும், விற்பொறிகளும் தாமே சென்று கொன்றுவருகின்ற விடுகுதிரைகளும், தொடர்ந்து சென்று கொல்லுகின்ற வாள்களும், கல்லைவாரி வீசும் இடங்கணிகளும், கொல்லுலையிற் காய்ச்சிய இரும்பை வீசும் கோள்ளிகளும், கொக்குப் போன்றிருந்துகொண்டு நெருப்பை வீசுகின்ற பொறிகளும், கூகையைப் போல பயமுறுத்தும் கூகைப்பொறிகளும், தலைகளைப்பற்றித் திருகும் பொறிகளும், உலக்கையைக் கொண்டு வீசியடிக்கும் பொறிகளும், செம்பையுருக்கி வீசும் பொறிகளும், வேல்கள் முதலியவைகளை எறியக்கூடியவைகளும், இரும்பாற் பன்றிபோற் செய்யப்பட்டு மதிலிடத்தே பொருந்திவந்தவரைக் கடித்து உதறும் பொறிகளும், விடவராப் பொறிகளும், ஓடு வண்டிகளும், குரங்கு, ஆடுபோன்ற பலவகைப் பொறிகளும் அமைக்கப் பட்டிருந்தன[1].

இங்ஙனமாய பொறிகளையமைறியும் மதிலகத்தே நின்று போர் செய்யும் மறவர்களையு முடையதாயிருந்ததென்பதைப் பொன்முடியார் என்னும் புலவர் தகடூரை எறிய வந்த தனது புரவலனான பெருஞ் சேரலிரும்பொறையை நோக்கி, 'வேந்தே!

1. தகடூர் யாத்திரை. தொல். புறம். 67 மேற்கோள்.

எப்பொழுதும் யுத்தத்தையே செய்யும் வேலைத்தாங்கியவர் வலிசிறந்து ஒய்யென்ற சத்தத்தோடு எக்தெந்த விடத்திற் பகைவர்கள் தோன்றுகின்றனரோ அந்தந்த விடமெல்லாம் தோன்றி அப்பகைவர்கள் முன்னரே சமரிலடைந்த புண்ணில் தம்முடைய கூரிய வேலாலே உராவிப் பகைவரது நல்ல தலைகளை மிதிக்கும் வலிமை பொருந்திய கையை யுடையவர் மலிந்திருத்தலான் இம்மதிலரணைத் தீண்டல் தகாது' என்பர். இவரே பின்னரும் இரும்பொறையை நோக்கி, 'யானைப்படையும், குதிரைப்படையும், துணிவுடைய காலாட்படையும் நாம் உடையோமாயினும் உயர்ந்த மதிலையும் பல பெரிய மதிலுறுப்புக்களையும் ஆழ்ந்த கிடங்கினையும் உடையதோடு, தக்கமறவர்களும் நிறைந்திருக்கின்ற இவ்வரணை அடைதல் அரிது' என்கின்றனர். அரிசில்கிழாரும், 'வெல்போர் ஆடவர் மறம் புரிந்து காக்கும் வில்பயில் இறும்பிற்றகடூர்' என்று பாடுகின்றார்.

இவ்வாறு காவலையும் கடிமதிலையும் உடையவனது வென்றி பெரிதும் மேம்பட்டு விளங்கியது. தொன்று தொட்டுவந்த பழந் தமிழரசர்களாகிய சேர, சோழ, பாண்டியரான மூவேந்தர்களாலும் புகழப்பட்டவனும், பகைவராற் கொள்ளுதற் கரிய தனது நாட்டை, நல்ல வேள்வித் தீயையுடைய பார்ப்பாருக்கு அளித்துவந்தவனும், முடியுடை மூவேந்தரும் தமக்குத் துணைவராக வேண்டுமெனப் பல சிறப்புக்களையுஞ் செய்ய, அவைகளைத் தனது புகழ் நின்றுநிலவ வாழ்த்தும் பரிசிலருக்கு ஈந்தவனுமான மலையமான் திருமுடிக்காரியை வென்று, அவனது இராஜதானியான திருக்கோவலூரைக் கைப்பற்றிக் கொண்டான்[2]. இவனது நாடு திருக்கோவலூரும் அதனை யடுத்ததுமாகவே, நடுநாட்டில் முக்காற் பகுதி

1. பதிற்று 10-78. 2. புறம். செ. 99. அகம். 372.

யாகும். இஃதன்றி, குறும்பரால் காக்கப்பட்ட பலவாண் களையு மழித்துப் பல குறுநிலமன்னர்களுடையது நாடுகளைக் கைப்பற்றிக்கொண்டான்[1]. இக் குறும்பர்கள் கோயம்புத்தூர், நீலகிரி முதலிய பிரதேசங்களில் வசிப்பவரென்றும், பாலை நிலத்தின ரென்றும் கூறுவர்.

வேங்கட மலைக்கும் கிருஷ்ணு நதிக்கும் தெற்கே யுள்ள தும் கீழ்பாற் கடலை எல்லையுமாகவுடையது தொண்டை நாடு. கம்பையாற்றுப் பாய்ச்சலாலும், பாலாற்றுப் பாய்ச்சலாலும் நீர்வளம் நிறைய வளப்பமுடையது. கண்டன் கரிகால னுக்கு முடிகவித்துக் காணி படைத்து நாட்டின் நற்குடியா யமைந்த தூயோரால் நிறைந்தது. இதனை யாண்ட தொண் டைமான் அஞ்சியுடன் பகைப்பது கண்டு அஞ்சி, ஔவை யைத் தூது அனுப்பினன். அவளை யழைத்துச் சென்று, தொண்டைமான் தனது படைக்கலக் கொட்டிலைக் காட்டி யதும், அதற்கு அவள் இறுத்த விடையும் முன் குறிக்கப் பட்டது. எவ்வளவு சொல்லியும் தொண்டைமான் அடங் காமற் போகவே, அவனோடு பொருது அவன நாட்டைக் கைப்பற்றிக் கொண்டான்[2].

சேரன், சோழன், திதியன், எருமையூரன் இருங்கோ வேண்மான், பாண்டியன், பொருநன் என்பாரைப் பகைத்துப் போரில் வென்று அவர்களது எழிலாஞ்சனை நாட்டையும் கைப்பற்றிக் கொண்டான்.

இவ்வாறு அமரே கடப்பாடாகவுடைய இவனது ஆற் றலைக் கண்டு பொறாத மலையமான் திருமுடிக்காரி, இவர்களது போரசனை பெருஞ்சேர விரும்பொறையை யடுத்து, நிகழ்ந்த வைகளைக் கூறியும், இவனது நாட்டின் வளப்பத்தைக் காட்டி

1. புறம். செ. 97. 2. புறம் செ. 99.

யும், அவன் உதவி யுண்டாயின் வெற்றியடைந்து விடவியலு மென்றனன். இவ்வெண்ணத்தை முடிக்கக் கருதி, காரி பெருந்தானையோடு சென்று கொல்லிமலையையும், அதனோடு சேர்ந்த நாட்டையும் வென்று, சேர வரசாட்சிக்கு உட்படுத்தி னான்[1]. அதனால் மகிழ்வுற்ற சேரன், நீண்ட காலமாயிருந்த பகை காரணமாக, அதிகன் நாட்டினையும் கைப்பற்ற எண் ணங் கொண்டு பிரகாசிக்கின்ற பூணினையுடைய மருப்பிலே கன்ன மதமும் கபோல மதமும் சேர்ந்து ஆறுபோலொழுகும் மதநீர் நிறைந்த யானைகள் நிரை நிரையாக வரவும், நிறைந்து அழகுடன் தொங்கும் பிடரி மயிரினையும், காற்றினுங்கடிய வேகத்தையு முடைய இவுளிகள் அடர்ந்து செல்லவும், வெகு உயரத்தினின்று மிழிதரு மருவியின் ஒலியையும் அவிக்க வல்ல தேர் வரிசையாகச் செல்லவும், இடியினையும் ஏமாப் புறச் செய்யும்படியாக முரசுகள் ஒலிக்கவும் போர்க் கோலங் கொண்டு அஞ்சியின் வமிசத்தின னாயினும், அவனது பேரரசனை கணைக்கால் இரும்பொறை அவனை எதிர்க்கத் தன் பட்டினம் விட்டுப் புறப்பட்டனன்.

இவ்வாறு வருதலை யறிந்த அஞ்சி கவலுறுது தன் மதிற்புறத்துப் பகைவன் வருகையை நோக்கி நின்றனன்.

இவன் வீரர்களும் போரை எதிர்பார்த்து நின்றனர். இதனை ஔவையார் அறிந்து இக்காலத்து, படை வீரர் களுக்குப் போருக்குச் செல்லுமுன்னர் அவர்களுக்கு உக் கிரத்தை யெழுப்புவதுபோல், 'இயற்கு ஈத்து உண்மதி கள்ளே! சினப்போர் இனக்களிற்று யானை இயல்தேர்க்குரிசில்! நுந்தை தந்தைக்கு இவன் தந்தைதந்தை படைக்கலங்களை எடுத்தெறியும் பெரும் போரிலே கண்இமையாதவனைத் தேர்ச்

1. அகம். செ. 208. 209.

சக்கரத்தின்மேல் நின்று பொருது மாய்ந்தனனே; அவனைப் போல இம்மறப்புகழ் நிறைந்த மைந்தனும் நின்னைக் காப்பாற்றுவன்[1]' என்று கருக்கொள்ளக் கூறினார். அஞ்சியோ போருக்கு ஆயத்தமாக நின்று தன்னைக் கண்டு எல்லோரும் அஞ்சியோடும்படி செய்யும் ஆற்றலுடையேன் என்பதுண்மை யென்றன்றோ என்னையர் இப்பெயரிட்டனர் என்பதனை வலியுறுத்துவான் போன்று மாற்றான் படையைத் தாக்கிச் சின்ன பின்னமாக்கித் தோற்றோடும்படி செய்தான்[2]. இதனைப் போர் முனையினின்ற ஔவைப் பிராட்டியார், 'கடல்போல் பரந்த படையின் நடுவிற் சென்று முன்னெழுந்து வரும் பறைமேலேறி அவர்களைப் பிளந்து முன்படைகளை வெட்டி நடுப்படைகளைத் தொலைத்து நடுவண் விளங்கிய பெருமை பொருந்திய நல்லோனது மாட்சி கண்டு அவனது தாய் பெரிது முவத்தலினால் தன் வாடியமேனி ஊறிப் பசந்தனள்[3]' என்று ஒரு வீரனைப் புகழ்வதுபோல் பாடிப்புகழ்கிறாள்.

பகைப் புலமேற்சென்ற அரசன் முதல் நாள் மதிலாணை அடையமாட்டாமற் போனதோடு பின் நிற்கவும் நேரிட்டது. அதுபொழுது அவன் வருந்திய காலத்து உடனிருந்த அரிசில் கிழாரும் பொன்முடியாரும் தம் அரசனைப்பார்த்து, 'நாளை நமது படை ஊரைக் கொள்வது திண்ணம்; நீ கவலுற வேண்டா' என்று தேற்றும்போது அன்று நடந்த போர்த் திறமையைக் கூறுமிடம் வெகு அழகானது. 'மானைப்போல் தாவிப் பாயுங் குதிரைப் படையினது திறனும், மலைகள் ஒன்றோடொன்று பொருகின்றனவோ வென்று சொல்லும்படி போரிடும் யானையின் திறனும், இவ்வாறுதான் அம்புகள் வில்லினின்றும் செல்லுகின்றன வென்றறியப்படாத வேகத்தோடு தொடுக்குந் திறனமைந்த வயவரும் பொருதவர் பலர்

1. புறம் செ. 290. 2. புறம் செ. 93. 3. புறம் செ. 295.

நிறைந்தவை நம் படையாயினும் அதனினும் மிகக் கடுமை யாக இப்போர் மலைந்தமையின் நம் படை இன்று காவற் காட்டையே கொண்டது. நீயும் மாற்றாது படைக்கு இலக் காகிப் பசும்புண் பெற்றனை, வேந்தே! உருத்தெழுந்த சின மும், பலபல போரிலே வென்றும், போரே மணியமுமாகவு முடைமையினாலே நீங்காத வீரகண்டையையுடைய நம் படை இன்று நன்றாகவே பொருதது. ஞாயிறு விழுந்து பட் டான். நாளை அவன் எழுவானாயின் மயிர்க்கட்டிரு முரசியங்க ஊர்கொள்குவது திண்ணம்' என்று பாடியுள்ளார். இவ்வாறு தேற்றப்பட்டு இரும்பொறை அன்று இரவு கழித்தான். மறுநாள் இரவி யெழுந்தபோது இரும்பொறையும் தனது படையைத் திரட்டிப் போருக்குச் சென்றான்.

முதல் நாள் தோல்வி அடையாத அஞ்சி, இறுமாந்து தனது படைத் தலைவரில் மிக்க வீரத்தினையுடைய பெரும் பாக்கன் என்பானுக்கு வேண்டும் சிறப்புச் செய்து முனைப் போரில் விடுத்தான. அவனும் தான் பெற்ற மாலை, கண்ணி முதலியன சூடி, அஞ்சி தானேவென்று ஐயுறும்படி போர் களத்தே தோன்றினன். இதனைக் கண்ட கணைக்கால் இரும் பொறை வியந்தும், பயந்தும் நின்றபோது, 'மிக்க மகிழ்ச்சி யோடு தோன்றுமிவன் இளையனாயினும் பெரிய வீரன்; போரில் புறம் கொடாதவன், வெள்ளிய கோட்டையுடைய பெரிய யானைகளை எறிதல் மாத்திரமன்று; மறவர்களைக் கொன்று வேலைத் திரித்துச் சிரிப்பினும் சிரிக்கும்; ஆகலான் நின்னோடு பொருதற்குத் தகுதி யுடையன்[1]' என்று புலவர் அரசனை உற்சாகப்படுத்த, போருக்கு ஆரம்பித்தனர். முதல் நாள் கிடைத்த வெற்றியால் இறுமாப்படைந்ததாலே உதவியாக வேண்டிய சோழனது சேனையையும் எதிர்பாராது

1. தொல். புறம் 67 உரை மேற்கோள்.

அஞ்சி களித்திருந்தான்.[1] முன்னாள் தோல்வியுற்ற போரசனது மறவர் வைரங் கொண்டு போரில் முனைந்து மலையவே, பெரும்பாக்கன் சேனையுடன் உடைந்தனன். பின்னணியாக நின்ற சேனையும் இதனாலே பின் வாங்க வேண்டியதாயிற்று. உடனே, அஞ்சி படையுட் புகுந்து தன் படையை வலுச் செய்தான். உதவியோயில்லை.

மகா பராக்கிரமத்தோடு சண்டையிட்டு அநேக பட்டினங்களைச் சூறையிட்டும் பல பழம்பதிகளைப் பாழாக்கியும் இறுமாந்திருந்த ஊணர்களையும் சரணம் புகும்படிச் செய்ததை நாம் கண்கூடாகக் காணும்போது, யாதொரு சகாயமுமில்லாத அக்காலத்து அமர் எத்துணை நாள் நீடித்திருக்கும். பிற்றை நாள் அமரில் தற்செயலாகப்பட்ட அம்பு ஒன்றால் இறந்துபட்டனன் யாவருக்கு மஞ்சா அஞ்சி. தானையிலுண்டாய குழப்பத்தால் சேரர் கோமான் வென்றானே யன்றி வெற்றிமாலை சூடக்கூடிய காரணங்க ளில்லையாயின.

1. பதிற்றுப்பத்து. 8-ஆம் பத்து பதிகம்.

## 4. கொடைத் திறம்

'வறியார்க்கொன் றீவதே ஈகை' என்றார் பெரியார். நம்வள்ளலோ முன்னாளில் நாடு நகரம் முதலியவைகளையே யன்றித் தங்களையும் அடிமையாக ஈந்த சக்கராதிபதிகளோடு உடன் எண்ணப்படும்படி வேண்டியார்க்கு வேண்டியபடி கொடுத்தவன்.

இரப்பவர் யாது கொடுத்தாலும் பெற்றுக்கொள்ளக் கூடியவராயினும் கொடுப்பவரே யறிவர் கொடையின்றிறம் என்பதை மெய்ப்பித்தவன் இவனே.

இவன் ஒருகால் மலையேறிச் சென்றபோது, பெறுவதற் கரியதும், வெகுகாலத்துக்கு உயிரை உடலோடு கூட்டிவைக் கும் ஆற்றலு முடையதுமாகிய கருநெல்லிப் பழமொன்றைக் காண, அதனைத் தானுண்ணாது தனது நட்பிற்குரியாளான ஒளவைமூதாட்டிக்கு ஈந்து மகிழ்ந்தான். இஃதொன்றே இவன் கொடையைச் சிறப்பிக்கப் போதுமானது. இவ் வருஞ் செயலை அம்மூதாட்டியாரே வெகு அழகாக வர்ணித் திருக்கின்றனர். அது வருமாறு :—

'வெற்றியைத் தரும் கூர்மையையுடைய வாளைக் கையிற் கொண்டு பகைவரது களத்திலே அவர்களை யழியும்படி வென்று கடந்த கழலையும் தொடியையுமுடைய அதியர் கோமானை அழகிய மாலையையுடைய அஞ்சியே! பழமை யான மலையிலே உண்டாகிய மலைப் பிளப்பிலே பிறந்த சிறிய இலைகளையுடைய கருநெல்லியினது அமுதத்தை யொத்த

திங்கனியை யெமக்கு ஈந்தமையின், நீ பிறை போன்ற நுதலை யும் பொலிந்த திருமுடியையும், நீலமேனியை யொத்த மிடற் றினையு முடைய ஒப்பற்ற சிவபெருமானைப் போல் வெகு காலம் வாழ்வாயாக' எனப் புகழ்கின்றாள் ஔவையார் பாராட் டிக் கூறும் இதுவே யன்றி இவனுக்குப் பேரிடுக்கண்கள் உற்றபொழுதும், அவைகளைப் பொருட்படுத்தாது கொடுத்த லையே தொழிலாக வுடைய னென்பது, இவன் தனது பேரரசனும், பகைவனுமான பெருஞ் சேரல் இரும்பொறை யால் தாக்கப்படப் போகும் சமயத்திலுங்கூட பெரும் பாக்கன் என்னும் தனது தலைவனுக்கு உதவிய கரி, பரி, தேர்களால் தெளிவுறலாம். இவைகளைக் கண்டு, இப் படை அஞ்சியினது முன்னணியோ வென்று ஐயுற்ற அரசருக்கு, உடனிருந்த அரிசில்கிழாரும், பொன்முடியாரும் உண்மை தெளிவித்தது முன்னர்க் கூறினும். இவைகளாலே இவன் பெயர் என்றும் நின்று நிலவுவதாயிற்று. 'குணம் கொடை யால்' என்பது இவனுக்கே பொருந்தும். இவ்வாறு புகழ் பெற்றது இவன் மாத்திரமன்று ; இவன் முன்னோர்களும் வேண்டியபடி கொடை கொடுத்தவர்கள் எனக் காணக் கிடக்கின்றது[1].'

அவர்கள் இம்மண்ணாட்டினரை யன்றிப் பொன்னாட்டி னரையும் வேள்வியால் திருப்தி செய்தனர். தேவர்கள் தங்கு தற்குச் சோலைகளும் அமைத்திருந்தனராம். அத்தேவர் கள் இந்தக்காவில் வந்து தங்குதலு முண்டெனக் கேட் கின்றோம். இவனது முன்னோர்களே தேவர்களது உதவியாற் பொன்னாட்டினின்றும் அன்று பிறந்த பிள்ளையும் விரும்பும் சர்க்கரையின் மூலப் பொருளான கரும்பைக் கொணர்ந்தன ரென்று'[1] அறிகிறோம். ஆகையால் இவனும் இவன் முன்

1. புறம். செ. 91. 2. புறம். 100. செ. 99.

ஞோர்களும் எக்காலத்தும் மாறுமற் கொடுத்து வந்த தொரு பழந்தமிழ்க்குடி என்பதோடு, 'தண்டி யடுத்தக்கா லீவது வண்மை' என்னுது 'தண்டாமலீவது தாளாண்மை' என்பதற்கும் 'தாளாண்மை யாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கீவதற்கே' என்பதற்கும் ஓரிலக்காக நின்றனர். உலகத்திலே கொடுத்தலும் ஏற்றலும் இயற்கையே யாயினும் ஒருவனுக்கு ஈகைக்குணமானது முற்பிறப்பிற் செய்த புண்ணியத்திற்குத் தக்கபடியே அமையு மென்ப. இதனை வற்புறுத் தவே நமது மூதாட்டியாரும், 'நட்புந் தயையும் கொடையும் பிறவிக்குணம்' என்றதூஉமென்க.

## முடிவுரை

இதுகாறும் கூறியவாற்ருன், தமிழ்நாட்டு மக்களின் நிலை இற்றைக்கு இரண்டாயிர வருடங்கட்கு முன்னர் எவ்வாறிருந்ததென ஒருவாறு அறிதற்கு இடந்தரும். நாகரிகத்திலும், அறிவிலும் கைபோயவர்கள் என்று கூறிக்கொள்பவர்கள் அக்காலத்தே எழுத்து வாசனைகூட அறிந்துளார் என்று கூறுதற்கியலாது. அக்காலத்துத் தமிழ் நாட்டைப் பழந்தமிழ் மக்களான சேர சோழ பாண்டியரே யாண்டன ரென்றும், மற்றையோர் வடவேங்கடந் தாண்டித் தென்பால் வந்திலரென்றும் உறுதி கூறலாம். இவர்கள் காலத்திற்கு ஒரு ஐந்நூறு வருடத்திற்கு முன்னர் ஆண்ட அசோக சக்கரவர்த்தியே தமது கல்வெட்டுக்களில் இச்சேர சோழ பாண்டியர்களை உடன் அரசராகப் பாவித்துக் கூறுகின்ருனேயன்றித் தம் கீழ்ப் பட்டவர்களாகக் கூறிஞனில்லை. அவனுக்குப் பின்னிட்டும் இவர்கள் காலத்தோ இவர்களுக்கு முன்ளே பின்ளே இருந்த மாமூலனுரும், கல்லாடனுரும் மோரியர் என்பார் தென்ஞட்டை யெதிர்க்க வந்தனராயினும் வேங்கடமலை தாண்டி வரும்படி விடப்படவில்லை என்ற பொருள்படப் பாடியுள்ளரர் என்பது ஒரு சாரார் கொள்கை.

தமிழகம் அக்காலத்து எவ்வளவோ சீரும் சிறப்பு முற்றிருந்தது. பலநகரங்களையுமுடையதாயிருந்தது. சோழர்களுக்கு இராஜதானியாக உறையூரும், மற்றையோருக்கு மதுரையும், வஞ்சியும் ஏற்பட்டிருந்தன. இந்நகர்களெல்லாம்

மத்தியிலே அரசனது கோயிலுடையதாயும், பக்கத்தில் அவரது ஏவலாளர்களும் சேனைகளும் வசிக்கக்கூடிய தாயுமிருந்தன. மக்கள் வசிப்பதற்குத் தனியான பாக்கங்களும் அரண்மனைகளுக்கும் பாக்கங்களுக்கும், நடுவில் இளமரக் காக்களும் உய்யானவனங்களும், பளிக்கறைமண்டபங்களும் கொண்டு பொலிந்து ஊரை அழகுபெறச் செய்தன. புறநாட்டினர் வந்தால் தங்குவதற்கும், வியாபாரஞ்செய்வதற்கும், பண்டமாற்றல் நாணயமாற்றல் முதலியவைகட்கும், தகுதியான இடங்கள் அமைக்கப்பட்டிருநதன. பல தேசத்துப் பண்டங்களும் வந்து குவிந்த வண்ணமாக இருந்தன. அப்பொழுதும் கடற்சுங்க மிருந்தது. சுங்கம் பெற்றதைக் குறிக்க அடையாளங்களுமிருந்தன. பட்டினத்தைக் காட்ட, கலங்கரை விளக்கங்கள் உண்டு. இவ்வாறு பலவிதத்திலும் பெருமை பெற்றிருந்தது நம் தமிழகம்.

Printed at the "Caxton Press," Madras — 1928

Caxton Press
MADRAS